விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 22 சனிக்கிழமை (05.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 077


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

ஒரு தலைக்காதல் # பழிவாங்கல் # மே 13 # கஞ்சா # 11 பேர் # சி.ஐ.டி # சாட்சியம்

## வித்தியா கொடூரக் கொலை வழக்கு

## புதிய திருப்பங்களுடன் நீதியை நோக்கி நகர்வு



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் கொடூரக் கொலைக்கு சுவிஸ்குமார் உட்பட ஆறு பேர் பிரதான காரணம் என குற்றப் புலனாய்வு துறையினர் நேற்றைய தினம் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். குறித்த வழக்கில் இந்த அறிக்கை புதிய திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளதோடு, குற்றவாளிகளையும் இனங்காட்டியுள்ளது.

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா (வயது 18) கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். குறித்த கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இவ்வழக்கின் மரபணு பரிசோதனை அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத நிலையில், கடந்த வழக்கின் போது குறித்த கொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். இந்நிலையிலேயே குற்றப்புலனாய்வு துறையினர் நேற்றைய தினம் தமது விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.


**மே 13 நடந்தது என்ன?**

மே 12ஆம் திகதி கொலை செய்யப்படுவதற்கு முன்னர் காலை 7.20 மணிக்கெல்லாம தனது வீட்டிலிரு

24ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச விசாரணையை உன்னிப்பாக அவதானிப்பு

## இலங்கைக்கு இது முக்கிய தருணம்-ஐ.நா



(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து கரிசனை கொண்டுள்ள சர்வதேச நாடுகள் நடைபெறவுள்ள சர்வதேச விசாரணையை உன்னிப்பாக அவதானிக்கவுள்ளதாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் இனப்படுகொலையை தடுப்பது தொடர்பான விசேட ஆலோசகர் அடமாடயிங் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## கைதிகள் குறித்து 8ஆம் திகதி அறிக்கை

(கொழும்பு)

உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடா பான அறிக்கை ஒன்றினை எதிர் வரும் 8ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

மகசின் சிறைச்சாலையில் தமது

23ஆம் பக்கம் பார்க்க

## வெட்டுக்கிளி தொல்லை; ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் போக நெற்பயிர்ச் செய்கையில் வெட்டுக் கிளியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்நேக்கியுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற

23ஆம் பக்

## பலாலி விமான நிலையத்துக்காக மக்கள் காணிகள் சுவீகரிக்கப்படாது

### அமை.சுவாமிநாதன் ஊடகங்களுக்கு பதில்



(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக பொது மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டது எனவும் மக்களிடமிருந்து பெறப்பட்ட காணிகளை விடுவிப்பதே இந்த அரசின் கொள்கை என மீள்குடியேற்ற அமை

23ஆம் பக்கம் பார்க்க

## 12ஆவது நாளாக அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு

(கொழும்பு)

தண்ணீர் மட்டுமே அருந்திய படி மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரும் இன்றையதினம் 12 ஆவது நாளாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள 14 அரசியல் கைதிகள் தமது

23ஆம் பக்கம் பார்க்க

## மே-16 தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல்

(சென்னை)

தமிழகம், புதுச்சேரி மற்றும் கேரளா மாநிலங்களின் சட்டசபைகளுக்கு எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டு, வாக்கு எண்ணும் பணிகள் அதே மாதம் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக இந்திய தலைமைத் தேர்தல் ஆணையாளர் நசிம் ஜைதி நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் விரைவுபடுத்தப்படும்

### சிறைச்சாலை திணைக்கள பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ்க் கைதிகள தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் சிறைச்சாலை திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் மட்டத்தில் விரைவுபடுத்தப்பட்டிருப்பதாக சிறைச்சாலை திணைக்கள ஊடகப் பேச்சாளர் உபுல் தெனிய தெரிவித்தார். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் தமிழ்க் கைதிகள் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், பயங்கரவாதத் தடுப்

23ஆம் பக்கம் பார்க்க

## காளி கோயிலில் தேங்காய் உடைத்த எதிர்க் கட்சியினர்

(கொழும்பு)

சுதந்திரமாக நாட்டை உருவாக்கும் நோக்கிலும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஜகத் குமாரவின் வீட்டின் மீதான தாக்குதலை கண்டித்தும் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கூட்டு எதிர்க் கட்சியினர் நேற்று முறபகல் முகத்துவாரம் காளி கோவி

24ஆம் பக்கம் பார்க்க

## மனிதபுதைகுழி உடற்கூற்று பரிசோதனை அறிக்கை தாமதம்

### விரைவுபடுத்த நீதவான் உத்தரவு





23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஒளிராத நிலையில் மின் விளக்குகள்

நாவலர் வீதியில் இலுப்பையடிச் சந்திக்கும் புகையிரதக் கடவைக்கும் இடைப்பபட்ட பகுதில் உள்ள வீதி மின் விளக்குகள் கடந்த ஒரு வாரத் திற்கும் மேலாக ஒளிராமல் உள்ளன.

வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள இப் பகுதியில் கடமை முடிந்து செல்பவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் இரவில் இப் பகுதி இருள்சூழ்ந்து காணப்படுவதால் திருட்டுப் பயமும் அதிகமாக காணப் படுவதாக அப் பகுதிப் பொதுமக் கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இக்குறையை விரைந்து நிவர்த்தி செய்து தருமாறு மின்சார சபை யிடம் அப்பகுதி பொது மக்கள் கேட்டுள்ளனர். (செ)


NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
CCTV & Security Alarm System, Mobile Phone Accessories

ALL LAPTOPS, DESKTOP, MOTHER BOARD REPAIR & SERVICE

QUICK REPAIR & SERVICE QUICK PICK-UP AND DELEVERY
Laptop & Desktop Accessories Available



LED, LCD TV & Monitor, Printer, UPS, Subwoofer etc..

களனிகள், கள்காளிப்பு கமராக்களின் அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவில்)

No: 06A, Sirampiyady Lane, Stanley Road, Jaffna. Tel: 021-222 4459, 0772533390

(C-3901)

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390





பலாலி வீதி கந்தர்மடம் சந்திக்கு அண்மையாக நிலத்துக்கு கீழாக செல்லும் நீர்க் குழாயில் வெடிப்பு ஏற்பட்டு பாரிய அளவிலான நீர் வெளியேறியிருந்தது. இதனை கவனத்தில் எடுத்து உரிய தரப்பினர் கடந்த மூன்று தினங்களாக தொடர்ச்சியாக அதனை சீர்செய்வதனை படத்தில் காணலாம். (படம் :- கோபி)

## முக்கிய அறிவித்தல்


எமது சங்கத்தினால் இன்று பார்க்கப்படவிருந்த அதிஷ்டலாப சீட்டிழுப்பு நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்
வடமாகாண ஊழியர் நலன்புரி
மற்றும் விளையாட்டுச் சங்கம்
இலங்கை மின்சார சபை - யாழ்ப்பாணம்

(3769)







தென்மராட்சி கைதடியில் அமைக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இலங்கைக்கான ஜேர்மன் உதவித்தூதுவர் பிகையல் டோமன், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைந்து நினைவுக் கல் திரை நீக்கம் செய்து வைத்தனர்.


## தென்னிந்திய திருத்தல யாத்திரை

நாள்கள் - 16 யாத்திரிகர்-10
ஆரம்பம் - 10.04.2016

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடாக திருத்தல யாத்திரை தரிசிக்கும் ஆலயங்கள்.

உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, மணக்குளவிநாயகர், காணிப்பாக்கம் விநாயகர், திருப்பதி, சிதம்பரம், திருவெண்ணாமலை, காளகஸ்த்திரி, ஏகாம்பரேஸ்வரர், திருவானைக்காவல், திருவாரூர், திருவிடைமருதூர், திருவையாறு, தஞ்சாவூர், இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புலாணி, நவபாஷாணம், குருவாயூர், ஐயர்மலை, சிவன்மலை, பொற்கோயில், பத்மநாதசுவாமி, கொடுங்களூர், பகவதிஅம்மன், சுசீந்திரம், கபாலிஸ்வரர், பஞ்சவடி, அனந்த மங்கலம், ஆஞ்சினேயர் மதுரை மீனாட்சி, கன்னியாக்குமாரி, மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கம், ஸ்ரீரெங்க பட்டினம், சமயபுரம், மேல்மருவத்தூர் பிம்மாகோயில், 9 நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக, திருநள்ளாறு சனிபகவான் உட்பட, ஆறுபடை வீடுகள்(திருச்செந்தூர், பழனி, பழமுதிர்ச்சோலை, திருத் தணிகை, திருப்பரம்குன்றம், சுவாமிமலை) குன்றக்குடி, பைரவன்பட்டி வைரவர், காமாட்சி, வனத்திருப்பதி, திருக்கடையூர் அபிராமி உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்கள் தரிசிக்கலாம்.

முக்கியமாக கும்பகோணம் மகாமயை குளத்தில் கும்பமேளா நடந்த இடத்தில் 90 நாள்களுள் நீராடினால் தோஷங்களும் பாவங்களும் நீங்கும் என்பது ஐதீகம் புனித குளத்தில் நீராட விஷேஷ ஏற்பாடு செய்து தரப்படும்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை: இருவழி விமான ரிக்கட், 3 வேளை சுத்தமான-சுகாதாரமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு குளியலறை இணைந்த அறைகள், ஏசி வாகன வசதி சகல ஆலய நுழைவுக் கட்டணங்கள், உட்பட மேலதிக விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும். (C-3898)

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் (ராஜன் - மகன்)
59. 3/6, செட்டியார்தெரு, கொழும்பு- 11
T.P. 077 768 0102, 077 736 2154
F.B.: sridevisriranganathan.thuraiappa



## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205

05.03.2016 முதல் 09.03.2015 வரை
5 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடு களுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய் களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

(C-3899)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

நாதன் இன்

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.


# சின்மயாமிஷனில் சிவராத்திரி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மியா மிஷன், சின் மய ஞானவேல் ஆச்சிரமத்தில் மஹா சிவ ராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை மறு தினம் 7-ம் திகதி திங்கட்கிழமையன்று இரவு, நான்கு ஜாம பூசைகளுடன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களின் சத்சங்கம் ம்றறும் வேறு பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (செ)

# இந்தியர்கள் 6 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த இந்தியர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் மேற்கொண்ட தேடுதலொன்றின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்படும்போது இவர்கள் வெள்ளவத்தை பகுதியில் அமைந்துள்ள மாடி வீடொன்றில் தங்கியிருந்தனர். இவர்களின் விசா அனுமதி பத்திரங்கள் காலாவதியாகி இருந்ததாக கூறிய பொலிஸார் இவர்கள் சம்பந்தமாக மேலதிக விசாரணைகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குடிவரவு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக்வும் பொலிஸார் அறிவித்தனர்.

கடந்த சில தினாங்களாக சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த இந்தியர்கள் பலர் பொலிஸார் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மரண அறிவித்தல்

### கந்தையா நடேசபிள்ளை

( ஓய்வு பெற்ற சுகாதார மேற்பார்வையாளர் - ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை)



நாகர்கோவில் தெற்கை பிறப்பிடமாகவும் தம்ப சிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடேசபிள்ளை (04.03.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பூமணி அவர்களின் அன்பு சகோதரனும் இராசம்மா கந்தசாமி தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கௌரியம்பாள், நடனசிவா (பிரதேச சபை, பருத்தித்துறை), சிவசக்தி (ஆதார வைத்தியசாலை, பருத்தித் துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற உதயநாதன் மற்றும் செல்வமலர் அவர்களின் மாமனாரும் கௌதமி, நிவேதா, யதுசா, சயந்தன், அப்சயா, கிருத்தியா, மிதுஜனன் அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.03.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாணர்குடியிருப்பு,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(C-3902)

தகவல் :
குடும்பத்தினர்

## வசாவிளான் மக்களுக்கான அறிவித்தல்

26 ஆண்டுகளின் பின் வசாவிளான் மானம் பிராய் பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் பூசை வழிபாடுகள் செய்ய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள் அனுமதி பெற்றுத் தந்துள்ளார்.

அனைத்து அடியார்களும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு வசாவிளான் பாடசாலைக்கு முன் ஒன்றுகூடுமாறும் வரும் போது தேசிய அடையாள அட்டையை எடுத்து வருமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

(3777)

தொடர்புகளுக்கு :
0778543782 (ரஜீவ்)

# தருவதை ஏற்றுக்கொள்வதே சிறந்தது அதை யாருமே தடுக்க வேண்டாம்

## அமைச்சர் சுவாமிநாதன் அறிவுரை

(கொழும்பு)

**தருவதை ஏற்றுக்கொள்வதே சிறந்தது. அதை யாருமே தடுக்க வேண்டாம் என மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் யாழில் தெரிவித்துள்ளார்.**



வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டை நேற்றையதினம் அமைச்சர் பார்வையிட்டார்.அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வடகிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தில் யாழில் முதன்முறையாக 2 வீடுகள் அமைத்து அதை மக்களின் பர்வைக்காக வைத்துள்ளோம். ஜனாதிபதி எதிர்வரும் 12 ஆம் திகதி வருகை தந்து குறித்த வீட்டை உத்தியோக பூர்வமாக கையளிக்கவுள்ளார்.

இது உண்மையில் நல்ல வீடு. இதை மக்கள் மனங்களில் ஏற்றுக்கொள்ள கூடியதாக இருந்தால் அவர்களுக்கு இவை வழங்கப்படும்.

நான் எனது கடமையை செய்துள்ளளேன் ஏனையவை மக்களின் கைகளில் உள்ளது. சமுதாயம் ஏற்றுக் கொள்ளட்டும்.

இந்த வீடுகளை நலன்புரிநிலையங்களில் இருப்பவர்களுக்கும் பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கும் கொடுக்க திட்டமிட்டுள்ளோம்.

தருவதை ஏற்றுக்கொள்வது சிறந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக எமது கடமையை செய்து வருகிறோம். அதை தடுக்கவேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

### 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ்

# உரும்பிராயில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டை நேற்று பார்வையிட்டார் மீள்குடியேற்ற அமைச்சர்








(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் உரும்பிராயில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டை நேற்றையதினம் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் பார்வையிட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 37 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன. இந்த வகையிலே 65 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு நிதி வழங்குவதற்காக கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருந்தது.

இவ் வீட்டுத்திட்டத்தை சீனா மற்றும் பிரான்ஸ் நாட்டுக் கம்பனிகள் நிர்மாணிக்கவுள்ளன என்பதுடன் இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் உருக்கிலான கட்டமைப்புக்களினையும், ஏற்கனவே தொகுதியாக்கப்பட்ட அமைப்புக்களினையும் கொண்டிருக்கும். ஒவ்வொரு வீட்டுக்குமான செலவு ரூபாய 2.1 மில்லியன் ஆகும். இந்த வீடுகள் ஒருவார காலத்துக்குள் முழுமையாக அமைத்து முடிக்கக்கூடியதாக உள்ளது. இந்த வீட்டில் வீட்டுத் தளபாடங்களும் மலசலகூடமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடு அமைப்பதற்கான தொகை இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான செலவுகளுடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்குகள் அதிகம்.

இதன் அடிப்படையில் பார்க்கையில் இத்திட்டதிற்கான செலவு ரூபாய் 136 மில்லியன்கள் ஆகும்.

இப் பாரியதிட்டம் முன்னெடுக்கப்பட முன்னர் வடகிழக்கில் வாழும் மக்களிடம் இருந்து எந்தவொரு கருத்தாலோசனைகளும் பெறப்படவில்லை.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் முன்னேற்றத்துக்காக புதிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இம் மிகப்பெரிய இத்திட்டத்தை பற்றி குறித்த உயர்நிலை அலுவலர்களுக்குக் கூட தெளிவான விளக்கம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படாத சில கிராமங்களை சேர்ந்த மக்கள் குறித்த மாதிரி வீட்டினை பார்வையிடுவதற்காக அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அவர்கள் தமக்கு இருப்பதற்கு வீடு கிடைத்தால் போதும் என்றும் வருவதை வேண்டாம் என கூறினால் எமக்கு வேறு திட்டங்கள் கிடைக்காமல் போய் விடும் என தெரிவித்தனர். ஆனால் குறித்த வீடு தொடர்பில் சில சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு மக்கள் கருத்து தெரிவித்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த 65 ஆயிரம் நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொருத்தமற்ற வீடமைப்புத்திட்டத்தினை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என சிவில் சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## இலங்கைக்கும் சுவிஸுக்கும் இடையில் அரசியல் புரிந்துணர்வு உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகள் குறித்து தமது நாடு அறிந்துள்ளதாகவும் உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் சுவிட்ஸர்லாந்து தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் சுவிட்ஸர்லாந்தின் வெளியுறவுத்துறை பிராநதிய சபை உறுப்பினர் டிட்டியர் பேர்க்கோல்டருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சநதிப்பின் போதே இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது இரண்டு அமைச்சர்களும் அரசியல் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

அத்துடன் குடிப்பெயர்வு தொடர்பில் பங்களிப்பு செய்வதற்கும் இரண்டு நாடுகளும் இணக்கம் வெளியிட்டுள்ளன. (இ)

## அரசாங்க பணியாளர்களை கண்காணிக்க சிறப்புக்குழு

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் பணியாளர்கள் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்கின்றனரா? என்பது குறித்து அறிவதற்காக, திடீர் சோதனை அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

அரச நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச பணியாளர்கள் பலர தங்களின் கடமை நேரத்தில் உரிய கடமைகளை புறக்கணித்து வருவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இதனால் பொதுமக்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இதனை தடுக்கும் வகையில் இந்த திடீர் சோதனை, அதிகாரிகள் குழுவினால் விரைவில் உருவாக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (இ)

## இலங்கை பற்றி கனடாவுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையின் அண்மைக்கால அரசியல் மற்றும் அபிவிருத்தி முன்னேற்றங்கள் குறித்து கனடாவுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகரகம் இதனை தெரிவித்துள்ளது.

இலங்கையின் கனேடிய உயர்ஸ்தானிகர் அஹ்மட் ஏ ஜாவாட் கனேடிய குடிவரவுத் துறை அமைச்சர் மைக்கல் சான்னை ஒன்றாரியேவில் வைத்து சந்தித்து இந்த முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

இதன்போது இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கைத் தூதுவரால் வழங்கப்பட்ட விளக்கங்களை கனேடிய அமைச்சர் ஏற்றுக்கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)




# வலி.வடக்கு மீள்குடியேற்றத்தை கோரி முகாம் மக்கள் அடையாள உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வலி.வடக்கு நலன்புரி நிலைய பொது நிர்வாக அமைப்பினரின் ஏற்பாட்டில், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை மற்றும் கண்ணகி நலன்புரி நிலைய முகாம்களில் வாழும் மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்தனர்.



நேற்று வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமில் இவ் அடையாள உண்ணாவிரதம் முன்னெடுக்கப்பட்டது. அந்த உண்ணாவிரதத்தில் 3 அம்ச கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிப்புச் செய்ய வேண்டாம். எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் விரைவில் வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் நலன்புரி நிலைய மக்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்குதல் போன்ற கோரிக்கைகளை அதில் முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 6 மாதத்திற்குள் வலி வடக்கில் மீள்குடியேற்றம் செய்து வலி.வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு தருவேன் என கூறினார். ஆனால், பலாலி விமான நிலையத்தினை சர்வதேச விமான நிலையமாக புனரமைப்புச் செய்வதற்கு வலி.வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுமென்றும், அதை யார் எதிர்த்தாலும், பலாலி விமான நிலையம் விஸ்தரிப்புச் செய்யப்படுமென்று பாதுகாப்பு அமைச்சர் மற்றும் புனர்வாழ்வு அமைச்சரின் கருத்துக்கள் தம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளத்ாக மக்கள் சுட்டிக்காட்டினார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 6 மாத காலத்திற்குள் தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்வார் என நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், பலாலி விமான நிலையத்தினை விஸ்தரிப்புச் செய்வோம் என கூறியதன் பின்னர் ஜனாதிபதியின் வார்த்தையில் நம்பிக்கை இழந்துவிட்டோம்.

அத்தியாவசிய பிரச்சினைகளான மலசலகூடங்கள் பாவிப்பதில் பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை உட்பட இளம் பெண்களுக்கு திருமணம் செய்வதில் பிரச்சினை, சமூக கலாசார பிரச்சினைகளை எதிர்நோக்கும் தமக்கு உடனடியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென்றும், தமது சொந்த இடத்திற்கு சென்று தாங்கள் ஏதாவது ஒரு தொழிலை செய்து நிம்மதியான வாழ்க்கை வாழ்வோம் என்றும் தெரிவித்தனர்.

உங்கள் பிள்ளைகளை போன்று எங்கள் மீதும் கருணை கொண்டு, உடனடியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் மந்த போக்கே தமது மீள்குடியேற்ற தாமதத்திற்கு காரணம் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, இதுவரை காலமும், சுமார் 26 வருடங்களுக்கு மேலாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் தம்மை ஜனாதிபதி கருணை கொண்டு, தமது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு எதிர்வரும் ஏப்பிரல் மாதம் புது வருடத்திற்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யத் தவறின் தம்மை அழித்தாலும் பரவாயில்லை. வெள்ளைக்கொடியினை பிடித்துக்கொண்டு, உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அத்துமீறி நுழைந்து தமது சொந்த இடங்களில் தாமே மீள்குடியேறுவோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

தம்மை மீள்குடியேற்றம் செய்யும் வரை வலி.வடக்கு மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாகவும் அம்மக்கள் மேலும் தெரிவித்தனர். (செ-4)

## இருபது - 20 ஆசியக் கிண்ணம்

# ஆறுதல் வெற்றி கூட இல்லாமல் கர்ச்சிக்க சிரமப்படும் சிங்கங்கள்




இலங்கைக்கு எதிரான இருபது - 20 போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

20 ஓவர் ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி பங்காளதேஷில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற கடைசி மற்றும் 10-வது லீக் போட்டியில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது. பின்னர் களமிறங்கிய இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 150 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக டில்ஷான் 56 பந்துகளில் 75 ஓட்டங்கள் குவித்தார். அதற்கு அடுத்து சண்டிமால் 49 பந்துகளில் 58 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் முகமட் இர்பான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


பின்னர் 151 ஓட்டங்களை இலககாக கொண்டு விளையாடிய பாகிஸ்தான் அணி 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது. அந்த அணியின் உமர் அக்மல் 37 பந்துகளில் 48 ஓட்டங்கள எடுத்து வெற றிக்கு வித்திட்டார்.

சர்பராஸ்அகமட் 38 ஓட்டங்களையும், சர்ஜீல் கான் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. உமர் அக்மல் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

ஆசியக் கோப்பையில் லீக் ஆட்டங்கள் நேற்றுடன் முடிவடைந்துள்ள நிலையில், நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் இறுதிப்போட்டியில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.

இந்திய அணி தான் விளையாடிய 4 போட்டிகளிலும் வெற்றி பெற்று புள்ளி பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. அதற்கு அடுத்தபடியாக பங்களாதேஷ் அணி 3 போட்டிகளில் வெற்றி பெற்றது. இந்திய அணியிடம் மட்டும் தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் அணி 2 வெற்றி மற்றும் 2 தோல்வி பெற்றுள்ளது. இலங்கை அணி ஒரே ஒரு போட்டியில் மட்டும் வெற்றி பெற்றது. ஐக்கிய அரபு எமிரேட் அனைத்து போட்டிகளிலும் தோல்வியடைந்தது. (க)




## உதைபந்தாட்ட போட்டி

நல்லூர் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான உதைபந்தாட்ட போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை உதைபந்தாட்ட லீக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் உரிய நேரத்திற்கு சமுகம் தந்து போட்டிக்கு ஒத்துழைக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் அறிவுறுத்தியுள்ளனர். (க)








யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரிக்கு, திறன் விருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் நேற்றையதினம் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இவர்களை கல்லூரியின் புதிய பணிப்பாளர் எஸ்.முகுந்தன் வரவேற்றிருந்தார்.


# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க விசேட செயலணி உருவாக்கப்பட்டது

(குருமன்காடு)

அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்த விசேட செயலணி ஒன்று வவுனியா மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் வடமாகாண சிறுவர் பாதுகாப்பு, நன்னடத்தை அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இச் செயலணி உருவாக்கப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலமாக சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்தமைக்குரிய காரணங்கள், அதனைத் தடுக்க மேற்கொள்ளக் கூடிய பொறிமுறைகள் மற்றும் துஷ்பிரயோகத்திற்குள்ளானவர்களின் மறுவாழ்வு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து துறை சார்ந்தவர்களின் ஆலோசனைகள், கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கி மாவட்ட மட்ட செயலணி அமைக்கப்பட்டது. ஏற்கனவே இது தொடர்பில் அரச அதிபரின் கீழ் ஒரு செயலணி செயற்பட்டமையால் அதனை இதன்போது மீள்புனரமைப்பு செய்து வலுவுள்ள செயலணியாக மாற்றப்பட்டது.




இந்த கூட்டத்திற்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.பி.நடராஜா, மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹணபுஸ்பகுமார, பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், துறைசார் திணைக்களங்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் ஆகி யோர் கலந்துகொண்டனர். (2-250)

## விற்றமின் மாத்திரைகள் உட்கொண்ட 93 மாணவர்கள் வைத்தியசாலையில்

பண்டாரவன்ளை - பூணாகலை பகுதியில் பாடசாலையொன்றில் வழங்கப்பட்ட விற்றமின் மாத்திரைகளை உட்கொண்ட மாணவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒவ்வாமை, வாந்தி, மயக்கம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட 93 மாணவர்கள பண்டாரவளை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டனர்.

எவ்வாறாயினும் மாணவரகள் ஆபத்தான நிலையில் இல்லைளனவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய குறித்த பாடசாலை மாணவர்களுக்கு, நேற்று முன்தினம் காலை உணவுக்குப் பின்னர் விற்றமின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். இந்த மாத்திரைகளை தரம் 8,9,10 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கே அயன் மாத்திரைகள் உள்ளிட்ட விற்றமின்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விற்றமின் மாத்திரைகளின் மாதிரிகளை, வைத்திய ஆய்வுப்பிரிவிற்கு பொலிஸார் அனுப்பியுள்ளனர். இந்த மாத்திரைகள் 2018 ஆம் ஆண்டுவரை பாவிக்கலாம் என்று கால எல்லை குறிப்பிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## சிறுநீரக மோசடி வர்த்தகம் தொடர்பில் இந்தியர்கள் ஆறு பேர் கொழும்பில் கைது

இலங்கையில் சிறுநீரக மோசடி வர்த்தகத்துடன் தொடர்புடைய ஆறு இந்தியர்கள் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் ஏழை மக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து சிறு தொகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் சிறுநீரகத்தை பெரும் செல்வந்தர்களுக்கு பாரிய பணத்தொகைக்கு விலைபேசி விற்கும் மோசடி வர்த்தகம் தொடர்பில் அண்மையில் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்த மோசடி தொடர்பில் இலங்கையின் அரச மருத்துவர்கள் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், மோசடி வர்த்தகத்தின் சூத்திரதாரிகள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் இந்த மோசடியுடன் தொடர்புடைய மேலும் ஆறு இந்தியர்கள் தற்போது வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் சிறுநீரகங்களும் அகற்றப்பட்டுள்ளதற்கான தழும்புகள் அவர்களின் உடல்களில் காணப்படுவதாக தெரிய வந்துள்ளது.

குறித்த ஆறுபேரும் சாரதி, தையல். தொழிலாளிகளாக இலங்கையில் பணியாற்றியுள்ளதுடன், விசா அனுமதி முடிவடைந்த நிலையில் சட்ட விரோதமான முறையில் இலங்கையில் தங்கி இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## மகளிர் விவகாரப்பிரிவு நடத்தும் சர்வதேச மகளிர்தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சு மகளிர் விவகார பிரிவு நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் ஆகி யோர்கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் இன்று

பருத்தித்துறை பிரதேச சபை நடத்தும் உள்ளூராட்சி வார மற்றும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி க்கு பருத்தித்துறை பிரதேச சபையில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை புலோலி பிரதேச சபை செயலாளர் திருமதி ச.தர்மராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராகயாழ். முன்னாள்மாநகரசபைஆணையாளர்செ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-60)

## புடுங்குதீவு கண்ணகைபுரத்தில் சிவராத்திரிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கண்ணகைபுரம் அருள்மிகு ஸ்ரீராஜராஜேஸ்வரி (கண்ணகை அம்பாள்) ஆலயத்தில்மஹா சிவராத்திரி பெருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அன்றையதினம் ஆலயத்தில் நான்கு ஜாமப் பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம் பெறவுள்ளன. இரவு 10 மணிக்கு கலைவாணர் வில்லிசைக் குழுவினர் பெருமையுடன் வழங்கும் "சைவப் பெருமக்கள் அனுஷ் டிக்கும் மகா சிவராத்திரி" எனும் விடயத்தில் வில்லுப் பாட்டு இடம்பெறவுள்ளது.

அத் துடன் விசேட தவில் கச்சேரி யும் நடை பெற்று அம்பாள் அதிகாலை 5 மணிக்கு சமுத்திர தீர்த்தத்திற்கு எழுந்தருளும்திருக்காட்சி இடம் பெறவுள்ளது. (இ-5)

## மாபெரும் கலை நிகழ்வுகள்

சிறுப்பிட்டி கிழக்கு வீரபத்திரர் ஆலயத்தின் சிவராத்திரி தின மாபெ ரும் கலை நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை இரவு 7மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)


சிவராத்திரி உற்சவம்

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் 07.03.2016 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சாமப் பூசைகளும் முதல் சாமம் 1008 சங்காபிஷேகமும் தொடர்ந்து 3 சாமங்களிலும் 108 சங்காபிஷேகம் நிகழும். 2 ஆவது கால லிங்கோற் பவ காலத்தில் உற்சவம் நடைபெறும். 06.03.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இலச்சார்ச்சனை பூர்த்தியும் விஷேட கோமமும் நடைபெறும். அனைவரும் வருக சிவனருள் பெறுக!!

பிரதம குரு
பிரம்மஸ்ரீ தாணு .வாசுதேவ சிவாச்சாரியார்

(3780) சுபம்

தேவஸ்தானம்
ஆலய அபிவிருத்தி செயல்கம்.


## இராசி பலன்

05.03.2016
(மாசி 22, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 2.14 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 2.31 மணிவரை
சுபநேரம் 3.25-4.55 மணிவரை
இராகுகாலம் 9.25-10.55 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம்,திருவாதிரை காலை 8.06 மணிக்கு மகர-சந் | | |
| சுக் சந் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**இடபம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், இனந்தார் பகை மாறும், ஆதாயம் தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வரவைவிட செலவுகள் அதிகமாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், மனக்குழப்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்** நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் இடம் பெறலாம்.

**சிம்மம்** அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலம் சீராகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம், தொழில் முன்னேற்றத்திற்கு வள்ளல்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** உதிரி வருமானங்கள் பெருகும் நாள், தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

# நொந்துபோன எமது சமூகம் விரைவாக இயல்பு நிலையை அடைதல் வேண்டும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் அழைப்பு

நொந்துபோன எமது சமூகம் விரைவாக இயல்பு நிலையை அடைவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்புக்களை நல்க வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர், வலய அதிகாரிகள் மற்றும் தென்மராட்சி வணிகத் துறை ஆசிரியர்கள் என அனைவரும் இணைந்து முன்னெடுத்திருக்கின்ற 'தென்னருவி வர்த்தகக் கண்காட்சி' நிகழ்வுகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

இக் கண்காட்சி பல விடயங்களையும் உள்ளடக்கி, நன்கு திட்டமிடப்பட்டு பாமரமக்களும் பயன்பெறக் கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது.

இக் கண்காட்சியானது பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றேன். அவையாவன,

உள்ளூர் உற்பத்திகள் பற்றிய அறிமுகம், உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் பற்றிய விளக்கங்கள், கற்கைநெறிகள் பற்றிய விளக்கங்கள் மேலும், வங்கி அமைப்புக்கள் பற்றிய விளக்கங்கள்

ஒவ்வொரு துறை சார்பாகவும் அத் துறையுடன் ஈடுபாடு கொண்டவர்கள் தெளிவான அறிவைப் பெற்றுக்கொண்டு தத்தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. முதலாவது -

1.உள்ளூர் உற்பத்திகள் பற்றிய ஓர் அறிமுகம் - உள்ளூர் உற்பத்திகளை கைவிட்டு நாம் மேலைத்தேய உணவு முறைகளைப் பின்பற்றத் தொடங்கியதன் விளைவு மிக இள வயதிலேயே எம்மைப் பல நோய்கள் பற்றிக் கொள்ள இடமளித்துள்ளோம். முன்பெல்லாம் எமது மரக்கறி உணவுத் தேவைகளுக்கு தாய்மார்கள் தமது காணியை ஒருமுறை சுற்றிவர அன்றைய கறித்தேவைகள் நிறைவடைந்து விடுவன. பனங்கீரை, பசளி, குமிட்டில், முருங்கையிலை, முருங்கைக்காய், அவரைக்காய் என இன்னோரன்ன இயன் மருத்துவத்துடன் கூடிய மரக்கறிகள் அன்றைய உண வுக்காக சேகரிக்கப்பட்டு விடுவன. உடலில் சற்று சளிப்பிடிப்பாக இருப்பின் மொசுமொசுக்கை இலையில் ஒருசம்பல். முதுகு வலி அல்லது இடுப்புநோ ஏற்பட்டு விட்டால் அந்தக் காலத்தில் moov தடவுவதில்லை. பொருத்தமான கொடி இலையைப் பறித்து வந்து ஓட்டில் சூடாக்கி இடித்து தூளாக்கி பிட்டுமாவுடன் சேர்த்து பிட்டவித்துக் கொடுப்பார்கள். முதுகுவலி இருந்த இடந் தெரியாது போய்விடும். எமது தாய்மார்கள் இயற்கையாகவே ஆயுர்வேத சித்தமருத்துவ வைத்திய அறிவைப் பெற்றிருந்தார்கள். அந்தக் காலத்தில். உள்ளூர் உற்பத்திகள் பற்றிய பாண்டித்தியம் உடையவர்களாக இருந்தார்கள் அவர்கள்.

இன்று உள்ளூரில் கிடைக்கக் கூடிய அல்லது உற்பத்தி செய்யப்படுகின்ற உணவு வகைகளைத் தவிர்த்து மேல்நாட்டு நாகரீக உணவு வகைகளை அதிக பணம் செலுத்தி அளவுக்கதிகமாக உடலினுள் நோய்களுடன் சேர்த்து உட்செலுத்தி விடுகின்றோம். இதனால் சிறு வயதிலேயே குருதி அழுத்தம், நீரிழிவு என பல் நோய்களுக்கு ஆளாகின்றோம். எனவே உள்ளூர் உணவு வகைகள் மற்றும் உற்பத்திகள் பற்றிய அறிவு எமது மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

நான் அரசியலுக்கு வர முன் கொழும்பு 7 இல் உள்ள என் வீட்டின் மேல்மாடியில் மண்போட்டு புல் வளர்த்து அதன் மேல் இயற்கை உரம் சேர்த்து வீட்டுக்குத் தேவையான பல மரக்கறிகளைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன்பெற்று வந்தேன். முக்கியமாக தோட்டக் கழிவுகள், குசினிக் கழிவுகளைக் கலப்பு உரம் செய்யும் கலங்களில் இட்டு அதன் மூலம் இயற்கை எருவை நானே உற்பத்தி செய்து வந்தேன். எமது மக்களும் வீட்டில் இயற்கைப் பசளையை உருவாக்க முன்வர வேண்டும். செயற்கைப் பசளைகளைப் படிப்படியாகக் குறைத்து அவற்றைப் பாவிக்காமல் விடவேண்டும்.

2.அடுத்து உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் - இன்று பல உற்பத்தியாளர்கள் தரமான பொருட்களை உற்பத்தி செய்கின்ற போதிலும் அவை பற்றிய தரம், தகைமை, மேன்மை பற்றி மக்களிடையே போதுமான விளக்கமின்மையால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்புக்கள் குறைவடைந்து அவர்கள் உற்பத்தியையே சில தருணங்களில் கைவிட வேண்டியவராகின்றார்கள்.

இன்னொரு சாரார் தரமான உற்பத்திகளை உள்ளூரில் தயாரிக்கக்கூடிய அறிவையும் அனுபவத்தையும் கொண்டிருக்கின்ற போதும் அவர்களின் உற்பத்திகள் ஏதோ காரணங்களால் வெளிச்சத்திற்கு வராது மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன. உள்ளூர் உற்பத்திகள் பற்றிய போதிய அறிவை மக்கள் மனங்களில் விதைப்பது அவசியம். உள்ளூர் உற்பத்திகளின் தரம், அவற்றின் பாவனைகள் பற்றிய அறிவுபூர்வமான விடயங்களை மக்கள் மனதில் புகுத்துவதால் தரமான தயாரிப்புக்களை ஊக்குவிப்பதுடன் சந்தைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுக்க முடியும். இந்தக் கண்காட்சியில் வணிகம் தொடர்பான விழிப்புணர்வு, அவற்றில் எழக்கூடிய பிரச்சினைகள், அதற்கான தீர்வுபோன்ற விடயங்களை பாடசாலை மாணவர்கள் மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களின் மனதில் ஒரு தெளிவான சிந்தனையை ஏற்படுத்த முனைந்துள்ளார்கள். வரவேற்கத்தகுந்த ஒருவிடயம் இது.

3.அடுத்து கற்கைநெறிகளைத் தேர்ந்தெடுத்து நன்மை பெறக் கூடியதான கல்விமுறைகள் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

எமது மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பட்டதாரிகள் ஆகிவிட வேண்டும் என்ற நோக்கில் ஏதேதோ பாடங்களை தெரிவு செய்கின்றார்கள் .அவற்றின் பயன்பாடு என்ன, என்ன தொழில் முயற்சிக்காக அவற்றைக் கற்கின்றோம், தேர்ந்தெடுத்த கற்கைநெறியானது எமது எதிர்கால வாழ்வுக்கு எவ்வாறு பயன்படும் என்ற எந்த விதமானஅடிப்படைச் சிந்தனைகளுமின்றி பாடங்களைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். உள்வாரி அல்லது வெளிவாரி பட்டதாரிகளாக பட்டம் பெற்று வெளியேறிய பின்னர் அரசவேலை ஒன்றுக்காக அலைந்து அலைந்து காலத்தைப் போக்குகின்றார்கள்.

ஆனால் வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கின்றது. இறுதியில் பட்டதாரிக்குரிய வேலைகள் எதுவும் வேண்டாம் ஏதாவது திணைக்களத்தில் சிற்றூழியர்கள் ஆகவேனும் ஒரு நியமனம் பெற்றுத் தாருங்கள் என்று வாராவாரம் எமது அலுவலகத்தை நோக்கிப் பல பட்டதாரிகள், டிப்ளோமா கற்கை நெறிகளை முடித்தவர்கள் படையெடுத்து வருகின்றார்கள். இவர்களின் துயரநிலை கண்டு நாங்களும் மிகவும் வேதனை அடைகின்றோம்.

இவ்வாறான பிரச்சினைகள் எதிர்காலத்திலாவது எழாதிருக்க ஒரு சிறப்பான ஆரம்பமுயற்சியாக கற்கைநெறிகளைத் தேர்ந்தெடுப்பது பற்றிய விளக்கங்களைப் பெறுவது காலத்தின் கட்டாயமாகும். படித்தவர்கள்கூட பாரம்பரிய தொழில்களில் ஈடுபட முன்வரவேண்டும்.

இவற்றுக்கான மேலதிக விளக்கக் குறிப்புகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவதற்காக உயர் கல்வி நிறுவனங்கள், முறைசாராக்கல்விப் பிரிவுகள் ,உயர் தொழில்நுட்ப மாணவர்களின் பிரிவுகள் எனப் பலதரப்பட்டவர்கள் இங்கே வருகை தந்திருக்கின்றார்கள். மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக அமைந்து விடாமல் சுபீட்சமான எதிர்காலத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மாணவ சமூகத்தை அவர்கள் நெறிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். இந்த நெறிப்படுத்தல் வர்த்தகக் கண்காட்சி நிறைவுபெற்றதும் "மாணவ, மாணவியர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் பிரிவு" என்ற ஒரு தனியான அலகை கற்பித்தல் பாடங்களில் உள்ளடக்கி ஒவ்வொரு மாணவ மாணவியரும் என்ன என்ன துறையில் கற்கை நெறிகளை மேற்கொள்ள விரும்புகின்றனர், அந்தத் துறையில் எவ்வாறான பாடங்களை தேர்ந்தெடுப்பதன் மூலம் சிறந்த வேலைவாய்ப்பு வசதிகளை அவர்கள் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற தெளிவான சிந்தனையொன்றை அவர்களின் மனத்தில் உருவாக்கி அவர்களை நெறிப்படுத்த வேண்டியது எம் அனைவருக்குமான தார்மீகக் கடமையாகும் என்பதை நாம் மறந்துவிடாமல் இருப்போமாக.


4. நான்காவதாக வங்கி அமைப்புகள் பற்றிய விளக்கக் குறிப்புக்களை வழங்குவதற்காக 5-6 வங்கிகள் இங்கே சமூகமளித்திருக்கின்றன என்று அறிகின்றேன். எமது மக்களில் பலர் கடந்த 30 வருடகால கொடியயுத்தத்தின் பயனாக வீடு,வாசல்,சொத்து,சுகம் அனைத்தையும் இழந்து வாழவழி தெரியாது அல்லல்பட்டுக் கொண்டிருந்தபோது சில கடன்தரும் நிறுவனங்கள் அவர்களுக்கு ஆசை வார்த்தை காட்டி கார் வாங்குங்கள், மோட்டார் சைக்கிள் வாங்குங்கள், உழவு இயந்திரம் வாங்குங்கள் 100 சதவீதம் கடன்வசதிகள் செய்து தருகின்றோம் எனக்கூறி அவர்களுக்குக் கடன் கொடுத்து அதைக் கட்டமுடியாமல் போனபோது கொடுத்த வாகனங்களைப் பிடுங்கிச் சென்றுவிட்டார்கள்.

இன்று இங்கே வந்திருக்கக் கூடிய வங்கியாளர்கள் அப்பேர்ப்பட்டவர்கள் அல்ல. மக்கள் நலனில் கவனம் செலுத்துபவர்கள் அவர்கள். வங்கிகளின் செயற்பாடு பற்றியும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களும் வங்கியின் உச்சப் பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு எவ்வகையில் அணுக வேண்டும் என்ற விடயங்களைப் பற்றியும் தெளிவுபடுத்தி வங்கியில் பெற்றுக் கொள்ளக்கூடியசேவைகளின் தன்மைகள் போன்ற விடயங்களை எமக்கு எடுத்துரைக்க வந்துள்ளார்கள். வங்கியின் பொருளீட்டத்தை மட்டும் கருத்தாகக் கொள்ளாது ஒவ்வொரு வாடிக்கையாளர்களின் தேவைகளையும் தன்மைகளையும் தனித்தனியாக ஆராய்ந்து அவர்களுக்கு, அவர்களின் தொழில் முயற்சிகளுக்கு ஏற்புடையதான இலகு தவணை கொடுப்பனவு முறைகளைஅறிமுகம் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்களையும் வளமானவர்களாக்கி வங்கியையும் வளமடையச் செய்யவேண்டுமென்ற கருத்தில் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறாக அனைத்துச் சிறப்புக்களையும் ஒன்றுசேர இணைத்துக் கொண்டு ஒருமிகச் சிறப்பான வர்த்தகக் கண்காட்சி நிகழ்வொன்றை தென்மராட்சி கல்விவலயம் முன்னெடுத்திருப்பது மிகவும் போற்றுதற்குரியது. இவ்வாறான நிகழ்வுகள் குறிப்பிட்ட ஒருபகுதியுடன் மட்டும் நின்றுவிடாது அனைத்து வலயங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான அரிய பலகருத்துக்களை கண்காட்சிகள் மூலமும் இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழ் நிகழ்வுகள் மூலமும்மக்களுக்கு இயல்பாகவே புரிந்துகொள்ளக்கூடியவகையில் எடுத்துக் கூற நாம் முன்வரவேண்டும்.

நொந்துபோன எமது சமூகம் விரைவாக இயல்பு நிலையை அடைவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது ஒத்துழைப்புக்களை நல்க வேண்டும்.அதற்கு இது போன்ற நிகழ்வுகள் முன்மாதிரியாகத் திகழவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மூன்று கடைகள் உடைக்கப்பட்டு இரண்டு கடைகளில் திருட்டு!

வடமராட்சி -திக்கம் மாணாண்டிச் சந்தையில்உள்ளமூன்றுகடைகள்உடைக்கப்பட்டு இரண்டு கடைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக நேற்றையதினம் பருத்தித் துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. துவிச்சக்கரவண்டிகள் திருத்தகம் மற்றும் 2பலசரக்குக்கடைகள்என்பனவே திருடர்களால்உடைக்கப்பட்டன.

ஆனால்இருபலசரக்குக்கடைகளிலுமுள்ள பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருடப்பட்ட பொருட்களில் தும்புத்தடிகளின் ஒரு கட்டு அருகில் உள்ள பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (இ-5-60)

## வைத்திய அதிகாரி பணிமனை அமைப்பதற்கான காணி தேவை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைப்பதற்கு 4 பரப்புக் காணி நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் தேவையாகவுள்ளது. இக்கட்டடத்தை அமைப்பதற்கான காணியினை நன்கொடையாக வழங்க முன்வரும் இப்பரிபாலன எல்லையின் கீழ் வசிக்கும் நலன் விரும்பிகள் யாராவது நல்லூர் பிரதேச செயலாளர் மற்றும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரியினை 15.03.2016ம் திகதிக்கு முன்பாக தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

## மகளிர் தின சிறப்பு பரத நாட்டிய நிகழ்ச்சி வீரசிங்கம் மண்டபத்தில்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். இந்திய துணைத்தூதரகம், யாழ்.திருமறைக்கலாமன்றம் மற்றும் கொழும்பு அரு ஸ்ரீ கலைக் கூடத்துடன் இணைந்து நடத்தும் மகளிர்தின சிறப்பு பரதநாட்டிய நிகழ்ச்சி எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம்

## ஜெனிவாவில் மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்கும் செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**



ஜெனிவாவில் கடந்த புதன் கிழமை நடந்த ஜனநாயக சமூகத்தின் ஆட்சிமன்றக் கூட்டததில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பயங்கரவாதச் சட்டத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் இலங்கை அரசாங்கம், அதற்குப் பதிலாக அனைத்துலக நடைமுறைகளுக்கு ஏற்ப, தீவிரவாத முறியடிப்பு சட்டம் ஒன்றை கொண்டு வருவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கம், ஐ.நாவுடனும், ஏனைய மரபுசார் பங்காளர்களுடனும் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளை நீக்கி, அனைத்துலக சமூகத்துடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## இலங்கை நாடாளுமன்றில் 95 வீதமானோர் நோயாளிகள்

இலங்கையின் நாடா ளுமன்றில் 95 வீதமானவரகள் கொலஸ்ட்ரோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

29 வயதுடைய இளைஞர், பணியாளர்கள் உட்பட கொலஸ்ட்ரோல் நோய் 295 என்ற அளவிற்கும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்ற பணியாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட இலவச மருத்துவ முகாமின் போதே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. நாடாளுமன்ற பணியா ளர்கள் அனை வருக்கும் 17ஆயிரம் ரூபா பெறுமதியான வைத்திய பரிசோதனைகள் இலவசமாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

சுகாதார கல்விப் பணியக பணிப்பாளர், வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா உட்பட விசேட வைத்தியர்கள் முதன்மையான மருத்துவ மையத்தின் வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனைகளின் போதே இந்த ஆபத்தான நிலைமை வெளியாகியுள்ளது. நாடாளுமன்ற பணியா ளர்களில் நூற்றுக்கு 95 வீதமானோர், நாடாளுமன்ற உணவு விடுதியில் உணவு பெற்றுக்கொள்கின்றமையினாலே கொலஸ்ட்ரோல் அதிகரிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படு கின்றது.

நாடாளுமன்ற உணவு விடுதியில் உண வுகள் ஐந்து நட்சத்திர விடுதியின் உணவுக்கு சமமானவைகள் என்பதனாலும், குறைந்த விலையில் கிடைப்பதனாலும் அனைத்து பணியாளர்களும் அங்கு தான் உணவு பெற்றுக்கொள்கின்றனர். உணவு நட்சத்திர விடுதிக்கு சமமா னதாக இருந்த போதிலும் சுகாதாரத்திற்கு ஆரோக்கியமானதல்ல என தெரியவந் துள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமைத்துவத்தில் இந்த மருத்துவ முகாம் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)


உ

சிவமயம்

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்**

**மகா சிவராத்திரி விழா**

**மன்மத ஆண்டு மாசித்திங்கள் 24 ஆம் நாள் (07.03.2016) திங்கட்கிழமை**

அதிகாலை 6.00 மணி தொடக்கம் அடுத்தநாள் 6 மணிவரை

(24 மணித்தியாலங்கள்)

"ஓம் நமசிவாய சிவாயநம ஓம்" என்னும் திருவைந் தெழுத்து மந்திரம் ஓதும் அகண்டநாம வழிபாடும்

நான்கு யாமங்களிலும் விசேட அபிஷேக, பூசையும்

நள்ளிரவு 12.00 மணிக்கு

இலிங்கோற்பவருக்கும் விசேட அபிஷேக, ஆராதனையும்

அதிகாலை "துர்வாக சாகரம்" எனப்படும் புண்ணிய

சமுத்திரத்தில் தீர்த்த நிகழ்வும் மாணிக்கவாசகர் அன்ன தான சபையினரால் பாறணையை முடிப்பதற்கு திருவமுது வழங்கலும் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

சிவனடியார்கள் திரண்டு வருக

ஐந்தெழுத்து மந்திரம் ஓதி திருவருள் பெறுக.

(தி-3889)

ஆதீனகர்த்தாக்கள்

திரு.ஆ.அம்பலவிமுருகன் — காரைநகர்

திரு.மு.சுந்தரலிங்கம் — மணிவாசகர் சபை


## திருவள்ளுவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆலடி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் திருவள்ளுவர் குரு பூசை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போதுஆலடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் மனனப் போட்டிகளும் பரிசில் வழங்கலும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

மேலும் பிரிவு ரீதியாக போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங் கப்படுவதுடன் இந்து சமய கலாசார திணை க்களத்தின் சான்றிதழ்களும் வழங்கப்படும். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:47செவ் 2 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5599 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 18 செவ் 2 இல்<br>c a uk ; 5’5"<br>தகைமை/தொழில்:BA, MA/உதவி விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4596 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 37<br>தகைமை/தொழில்:Civil Eng/ கனடாNOT PR<br>தொ.இ: B/5600 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 2<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4598 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 36செவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:MA/ஆசிரியர்<br>தொ.இ: B/006 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 62 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 4’11"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4599 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 17செவ் 4 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: Diploma/ அவுஸ்திரேலியா PR<br>தொ.இ: B/2180 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 24செவ் 4 இல்<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4600 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே


தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )







தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சர்வதேச வர்த்தக கண்காட்சி நேற்று ஆரம்பமானது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-சாவகச்சேரி 2 செய்தியாளர் )

# முள்ளியவளை - பொன்னகர் பிரதான வீதியின் நிலை மோசம்

## செப்பனிடுவது எப்போது? பொதுமக்கள் கேள்வி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை பொன்னகர் பிரதான வீதி மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதால் அவ் வீதியால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறித்த வீதியை புனரமைத்து தருவதற்கு உரிய அதிகாரிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் முன் வர வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முள்ளியவளை பிரதேசத்திலுள்ள பொன்னகர் கிராமத்தில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்கள் நாளாந்தம் வைத்தியசாலை, சந்தை, அரச அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு இவ் வீதி வழியாகவே சென்று வருகின்றனர்.

இதேவேளை தரம்-5 வரையுள்ள பாடசாலையொன்றும் இக் கிராமத்தில் காணப்படுகிறது.

இப் பாடசாலையில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

அவர்களைத் தவிர ஏனைய உயர்தர வகுப்பில் கல்வி பயின்று வருகின்ற 75 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இக் கிராமத்தில் இருந்து இவ் வீதி வழியாகவே முள்ளியவளை நகரப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு சென்று வருகின்றனர்.

இதேவேளை இங்கு வசிக்கின்ற அநேகமான குடும்பங்கள் வேளாண்மையை தமது பிரதான தொழிலாகக் கொண்டுள்ளதால் அறுவடைக்காலங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூடைகளை தமது வீடுகளில் களஞ்சியப்படுத்துவதற்காக எடுத்து செல்வதில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்வதால் அவற்றை அறுவடை செய்த இடங்களிலேயே குறைந்த விலைகளுக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

அத்துடன் இக் கிராமத்தில் உள்ள பல வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தமக்குத் தேவையான பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்து கொண்டு வருவதில் இவ் வீதி சீரின்மையானது பாரிய பிரச்சினையை தோற்றுவித்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இம் மக்களின் அவலத்தை கருத்தில் கொண்டு இவ் வீதியை காலம் தாழ்த்தாது புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-310)

# வருடாந்த வியாபார உரிமம் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும்

### பெறத்தவறுவோர் மீது சட்டநடவடிக்கை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால் வியாபார உரிமம் வழங்கும் நடமாடும் சேவையொன்று கடந்த மாதம் 27,28 ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொதுச் சந்தையில் இடம்பெற்றது.

இந் நடமாடும் சேவையின் போது கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரியினால், சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட 130 வியாபார நிலையங்களுக்கு வியாபார உரிமங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வருடாந்த வியாபார உரிமமானது எதிர் வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் வரை வழங்கப்படவுள்ளது.

எனவே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து உரிமையாளர்களும் தமக்கான வியாபார அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அவ்வாறு பெறத் தவறுவோர் மீது கரைச்சி பிரதேச சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2-3-277)

# கரைச்சி பிரதேச செயலகத்தில் தே.அ.அட்டைக்கான நடமாடும் சேவை


தேசிய ஆள் அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் தேசிய ஆள் அடையாள அட்டை பெறுவதற்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பை உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசி, பிள்ளையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணச் சான்றிதழ் என்பன இல்லாதோர் தேசிய ஆள் அடையாள அட்டையை உடைய வாக்காளர் பட்டியலில் பெயர் உடைய மூவரின் சாட்சிக் கையொப்பம் தேவையென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கு புகைப்படம், முத்திரை, விண்ணப்பப் படிவம் என்பன இலவசமாக வழங்கப்படும்.

இது தொடர்பான விடங்கள் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து கிராம அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதால் மேலதிக தகவல் தேவைப்படுவோர் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-3-254)



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை வடக்கு நாவற்காடு கிராமத்தில் யு.என்.ஹபிராட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முள்ளியவளை வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் அமைக்கப்பட்டு வருகின்ற பொதுநோக்கு மண்டபத்தை படத்தில் காணலாம்.(படம்:- வற்றாப்பளை செய்தியாளர்.)

# பெண் தலைமைத்துவ வீடுகளில் திருட்டுப்போகும் கால்நடைகள்

### விழிப்புக்குழுக்களை அமைக்குமாறு கோரிக்கை

(திருமுறிகண்டி)

கிளிநொச்சி மலையாளபுரம், பாரதிபுரம், மணியங்குளம் ஆகிய பகுதிகளில் அண்மைக் காலமாக வாழ்வாதாரத்திற்காய் வளக்கப்படும் கால்நடைகள் இரவு நேரங்களில் களவாடப்பட்டு வருவதாகவும் இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கிராமங்களில் வசிக்கும் மக்கள் வாழ்வாதார தேவைகளுக்காக ஆடு, மாடு, கோழி போன்றவற்றை வளர்த்து வருகின்றனர். இதன் மூலம் கிடைக்கும் சிறிய வருமானத்தின் மூலம் தமக்கான அன்றாட தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் தமது கால்நடைகள் களவாடப்பட்டு வருவதாகவும் மோட்டார் சைக்கிள் மற்றும் சிறிய ரக வாகனங்களில் வருபவர்களே இத் திருட்டை மேற்கொள்கின்றனர்.

இத் திருட்டுச் சம்பவங்கள் அதிகமாக பெண் தலைமைத்துவம் கொண்ட வீடுகளிலேயே இடம்பெறுகின்றன.

பின் தங்கிய பகுதிகளில் இடம்பெறும் இவ்வாறான திருட்டுக்களால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் இத் திருட்டைத் தடுக்க கிராம மட்டங்களில் விழிப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (2-3-311)

# மேல் மருவத்தூர் அம்மா மன்ற ஆலயத் திறப்பு விழா



முல்லைத்தீவு முள்ளியவளை மேல் மருத்துவத்தூர் அம்மா மன்றத்தின் ஆலயத் திறப்பு விழா நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்கு மன்றத் தலைவர் க.விஜிந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அம்மாவின் 76 ஆவது ஜனன தின நிகழ்வுடன் பாதபூசையும் இடம்பெற்றது. மேற்படி மன்றமானது மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள வீதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் மாதம் தோறும் வருகின்ற பௌர்ணமி தினத்தில் விசேட பூசை, அறநெறி சொற்பொழிவுகள் என்பன இடம் பெறுமென மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார். (2-3-310)

# ரொக்கெட் விளையாட்டுக்கழக புதிய நிர்வாகத் தெரிவு நாளை

(குருமன்காடு)

வவுனியா கோவில்குளம் ரொக்கட் விளையாட்டு கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு உமாமகேஸ்வரன் வீதியில் கோவில்குளம் இந்து கல்லூரிக்கு அருகாமையில் உள்ள ரொக்கட் விளை யாட்டு கழகத்தின் அலுவலகத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.

இதன்போது கடந்த கால நிகழ்வுகள், கூட்டறிக்கைகள், கணக்கு அறிக்கைகள் என்பன வாசிக்கப்படவுள்ளன.

எனவே இந்நிகழ்விற்கு முன்னாள் ரொக்கட் விளையாட்டு கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

மேலும் இவ்விளையாட்டு கழகத்தின் பொதுக் கூட்டங்கள் நீண்ட காலமாக இன்னும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் ரொக்கட் விளையாட்டுக் கழகத்தை மறுசீரமைப்பு செய்ய அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-250)

### கிளிநொச்சி மாவட்ட

# பிரஜைகள் குழுவின் விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் செயற்படும் பொது அமைப்புக்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணிவரை கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள பண்டிதர் பரந்தாமன் கவின் கலைகல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பொதுநோக்கங்களுக்காக பொது அமைப்புகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது மற்றும் எதிர்காலத்தில் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் பொது அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்கள் அல்லது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இருவரை இக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு கேட்டுள்ளது. (2-277)




# சைவத்தமிழ் மாநாடு நாளை ஆரம்பம்

(வவுனியா)

மகா சிவராத்திரியை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையின் சைவத் தமிழ் இளைஞர் மாநாடு "ஆன்மீக, மனிதநேயப் பணிகளில் ஒன்றிணைவோம் சைவத்தமிழ் பண்பாடு காப்போம்" எனும் தொனிப் பொருளில் நாளையும் நாளை மறுதினமும் வவுனியாவில் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியாவிலுள்ள கோவிற்குளம் சிவன் கோவிலில் இம் மாநாடு ஆரம்பமாகவுள்ளது. (2-3)

## தமது நெல்மூடைகளையும் கொள்வனவு செய்யக்கோரி வவு.நெற்களஞ்சியசாலை முன் விவசாயிகள் போராட்டம்





வவுனியாவில் தமது நெல் மூடைகளைக் கொள்வனவு செய்யுமாறு விவசாயிகள் கோரியதால் குழப்பநிலை ஏற்பட்டதையடுத்து விவசாயிகள் நெற் களஞ்சியசாலை முன்பாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா, வேப்பங்குளம் நெற்களஞ்சியசாலையில் இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது.

பெரும்போக நெற்செய்கையின் நெல் மூடைகளின் கொள்வனவு நடவடிக்கைகள் தற்போது வவுனியாவில் ஆரம்பமாகியுள்ளது. அதில் முதற்கட்டமாக ஓமந்தை, வேப்பங்குளம், நெடுங்கேணி, கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள களஞ்சியசாலைகளில் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் முறையான அறிவித்தல் வழங்கப்படாது குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் நெல் கொள்வனவு செய்யப்பட்டு தாம் அலைக்கழிக்கப்படுவதாக தெரிவித்தே விவசாயிகள் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

தாம் காட்டு யானை, பன்றி போன்ற விலங்குகள், இயற்கை என்பவற்றிடம் இருந்து பாதுகாத்தே இந்த நெல்லை உற்பத்தி செய்துள்ளோம். அதனை அரசாங்கம் அறிவித்த நியாய விலையில் விற்பனை செய்வதற்காக வேப்பங்குளம் பகுதியில் உள்ள நெற்களஞ்சியசாலைக்கு கொண்டு வரும்போது அதனை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை.

தம்மிடம் களஞ்சியப்படுத்த இடம்போதாது எனக்கூறி குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் கொள்வனவு செய்கிறார்கள். இதனால் நெல்மூட்டைகளுடன் தினமும் வந்து அலைக்கழிகின்றோம். உற்பத்தி செய்வதை விட கொண்டு வந்து கொண்டு செல்லும் செலவே எமக்கு அதிகமாக இருக்கிறது. எனவே எமது நெல்லையும் கொள்வனவு செய்யுமாறு கோரி நெற்களஞ்சியசாலை முன் அமர்ந்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 100 வரையான விவசாயிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் விவசாய அமைச்சின் மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி எஸ். ஈஸ்வரனிடம் வினவிய போது,

கடந்த வருடம் சிறுபோகம், பெரும் போகம் என்பவற்றில் கொள்வனவு செய்யப்பட்ட ஆறாயிரத்து 725 மெற்றிக் தொன் நெல் தற்போதும் களஞ்சியசாலைகளில் உள்ளன.

இதனால் இருக்கின்ற களஞ்சியசாலைகளின் இடத்திற்கு ஏற்ப தற்போது கொள்வனவு இடம்பெறுவதுடன், புதிய சில களஞ்சியசாலைகளையும் தயார்படுத்தியுள்ளோம். அந்த வகையில் ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ள களஞ்சியசாலைகளிலும் தரமான நெல் கொள்வனவு செய்யப்படும். வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளோம். விவசாயிகள் இடவசதியை கருத்தில் கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (2-3-250)




## வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் மீளத் தகவமைவு கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட பிரஜைகள்குழுவின்மீள்தகவமைவு கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா மத்திய தொடரூந்து நிலையத்திற்கு அருகாமையிலுள்ள இந்திரன்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இதன்போது தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 13 உறுப்பினர்களைக் கொண்ட தலைமைக்குழு பிரதேச இணைப்பாளர்கள் ஆகியோர் மீளத் தெரிவு செய்தால் கட்டமைத்தல், பிரஜைகள் குழுவின் கடந்தகால செயற்பாடுகள் நடவடிக்கைகளை குழு விமர்சனத்துக்குட் படுத்தி மதிப்பீடு செய்தல், எதிர்கால வேலைத்திட்டங்கள் நிர்வாக ஒழுங்கமைப்புக்கள் தொடர்பில் தீர்மானித்தல் என்பன இடம்பெறவுள்ளன. அத்துடன் புதிய உறுப்பினர்களை உள்ளீர்த்தலும் நடைபெறவுள்ளது. (2-3-281-250)

## பாடசாலை நிர்வாகத்தை மறுசீரமைக்கக்கோரி இரண்டாவது நாளாகவும் தொடரும் உணவுதவிர்ப்பு

### கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் முன்பாக

(கிளிநொச்சி-1)

கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயத்தின் நிர்வாகத்தை மறு சீரமைக்கக்கோரி வித்தியாலயத்திற்கு முன்பாக அமைதியான முறையில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோர்இணைந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுத்திருந்தனர்.

இதில் நேற்று முன்தினத்திலிருந்து நேற்று வரை உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட மூவர் மயக்க நிலையை அடைந்தனர்.

பாடசாலை நிர்வாக செயற்பாட்டில் போதியளவு திருப்தி இன்மையால் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர்.

இந் நிலை தொடருமாகில் கல்விநிலை பாதிக்கப்படுமென போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சிற்கும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் மகஜர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டு நேரடியாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

ஆனால் இதுவரை எவ்விதமான பதிலும் கிடைக்கப் பெறவில்லையென போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் நேற்றுக் காலை அவ்விடத்திற்குச்சென்று சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. பின்னர் மகஜரைப்பெற்ற அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாணக் கல்வி அமைச்சிற்கு இது தொடர்பில் தெரியப்படுத்துவதாகவும் அவர்களிடமிருந்து பதில் கிடைத்தவுடன் தீர்வை பெற்றுத் தருவதாகவும் கூறினார். இதற்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதிலளிக்கையில், எமது கோரிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்தும் உணவுத் தவிர்ப்பில் ஈடுபடுவோம் என கூறினார். (2-3-277-271-254-281)



## பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்



மன்னாரில் பாம்புக்கடிக்கு இலக்காகிய நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாற்றாற்றல் கொண்ட இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.


மன்னார் தோட்டவெளி கிராமத்தைச் சேர்ந்த மாற்றாற்றல் கொண்ட லெபோன் தற்குரூஸ்ஜெபநேசன் (வயது-26) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கடந்த 29 ஆம்திகதி இரவு தோட்டவெளி கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து காட்டுப்பாதையூடாக உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற போதே பாம்பின் கடிக்குள்ளாகியுள்ளார்.

உடனடியாக பிரஸ்தாப இளைஞன் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை இரவு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் குறித்த இளைஞனின் நிலை கவலைக்கிடமான நிலையில் காணப்பட்டமையினால் மீண்டும் மன்னார் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந் நிலையில் குறித்த இளைஞன் நேற்று முன்தினம் அதிகாலை சிகிச்சை பலனின்றி மன்னார் பொது வைத்திய சாலையில் உயிரிழந்தார். (2-3-4)

## மன்னார் நகரசபை அலுவலக மாடிக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்



மன்னார் நகர சபையின் புதிய அலுவலக மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மன்னார் நகர சபையின் செயலாளர் லெனால்ட் லெம்பேட் தலைமையில் இடம்பெற்றது.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மன்னார் நகர சபையின் புதிய அலுவலக மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல்லினை மன்னார் மாவட்ட உள்ளூராட்சிஉதவிஆணையாளர் எம்.ஏ.துரம் நேற்று வைபவரீதியாக நாட்டினார்.

இதன் போது சர்வ மதத் தலைவர்கள், மன்னார் நகர சபையின் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (2-3-4)

## வவு.நகரசபை மைதானத்தில் விசப்பாம்புகள் நடமாட்டம்



வவுனியா நகரசபை மைதானத்தில் விசப் பாம்புகள் நடமாடுவதாக அங்கு உடற் பயிற்சிசெய்வோர் மற்றும் விளையாட்டு வீரர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபை மைதானத்தை காலை, மாலை வேளைகளில் பல் துறைசார் விளையாட்டு வீரர்கள் தமது பயிற்சிக் களமாக பயன்படுத்தி வருவதுடன், உடல் ஆரோக்கியத்திற்காக உடற்பயிற்சியில் ஈடுபடுபவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இதன்போது மைதானத்தில் விசப்பாம்புகள் அவ்வப்போது வருவதாகவும், உடற்பயிற்சியில் ஈடுபட்ட சிலரின் சாப்பாத்து கால்களுக்குள் அவை அகப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் உடற்பயிற்சி செய்த ஒருவரை தீண்ட முற்பட்ட விசப்பாம்பு ஒன்று மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டவர்களால் அடித்துக் கொல்லப்பட்டது. இதேபோல் பலதடவை மைதானத்தில் பாம்புகளை கண்டதாகவும்பயிற்சியில்ஈடுபடும்பலரும் தெரிவித்துள்ளனர். (2-3)

## வவுனியாவில் மோ.சைக்கிள் விபத்தில் முதியவர் பலியானார்



(குருமன்காடு)

வவுனியாவில் மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் நேற்று குட்செட் வீதியில் இடம்பெற்றது. இவ்விபத்தில் பேரம்பலம் சிவலிங்கம்(வயது-80)என்றவயோதிபரே பலியானவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து குட்செட் வீதியினூடாக பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியினை கடக்க முற்பட்ட முதியவருடன் மோதி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் படுகாயமடைந்த பிரஸ்தாப முதியவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (2-3-250)

# ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள் ஊடகச்சுதந்திரம் பற்றிப் பேசுகின்றனர்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

**ஊடகவியலாளர்களை கொலை செய்த மற்றும் வெள்ளை வான்களில் கடத்திச் சென்றவர்களுக்கு அன்று ஊக்கம் கொடுத்தவர்கள், தற்போது ஊடக சுதந்திரத்தை பற்றி பேசுவதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**



கண்டி கங்கவட்டகோரள பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

சில நேரம் எமது கருத் துக்களை ஆணித்தரமாக முன்வைப்போம். எனினும் ஊடகவியலாளர்களுடன் எந்த பிரச்சினையும் இல்லை.

நாங்கள் ஊடகவியலா ளர்களை கொலை செய்ய வில்லை என்பதை விமல் வீரவன்சவிற்கு கூற விரும் புகிறேன்.

ஊடகவியலாளர்களை கொலை செய்யவில்லை எனப துடன் அவர்களை வெள்ளை வான்களில் கடத்திச் சென் றதும் இல்லை. இவற்றை செய்வதற்கு ஊக்கம் கொடு த்தவர்கள் தற்போது ஊடக சுதந்திரம் பற்றிபேசுகின் றனர்.

பல வருடாங்களுக்கு பின்னர் நாங்கள் ஆட்சிக்கு வந் துள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வேலை செய்த வர்களின் தகுதியை பார்த்து சிபாரிசு கடிதம் கொடுப்பது தவறா?.

அரசியலமைப்பு சம்ப ந்தமான யோசனைக்கு ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சி தயா ராகவே உள்ளது.

இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்பட்டால், சர்வதேசத்தில் இருந்து வரும சவால்களை எதிர்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் லகஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (இ)

## சிறுமிக்கு தவறான சிகிச்சை; சுகாதார அமைச்சு விசாரணை

(கொழும்பு)

பேராதனை போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி ஒருவரின் வலது காலில் செய்ய வேண்டிய சத்திரசிகிச் சையை இடது காலில் செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில், சுகாதார அமைச்சு விசேட விசா ரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபாலவின் பணிப்புரையின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

பிலிமத்தலாவ பகுதியைச் சேர் ந்த 14 வயதான சிறுமி ஒருவர் வலது காலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த முதலாம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில அறுவை சிகிச் சையை மேற்கொண்ட வைத்தி யர், வலது காலுக்கு பதிலாக இடது காலில் சிகிச்சையை செய்துள்ள தாக பெற்றோர் குற்றம் சுமத் தியுள்ளனர்.

இதனையடுத்து இது தொடர்பில் பெற்றோரால் கடந்த புதன்கிழமை பேராதனை பொலிஸில் முறை ப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்தவிடயம் குறித்து விசேட விசாரணைகளை மேற் கொள்ள சுகாதார சேவைகள் பணிப் பாளர் தீர்மானித்தார்.

இதன்பிரகாரம் பேராதனை வைத்தியசாலையின் பணிப்பாள ரிடம் பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையால் வழங்கப்பட்ட முறைப் பாட்டுக்கு அமைய இந்த விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக, சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (செ-12)

## கைகள் ,கால்கள் கட்டப்பட்ட நிலையில் இளம் பிக்கு பற்றைக்காட்டிலிருந்து மீட்பு

இளம் பௌத்த பிக்கு (வயது - 23) ஒருவர் கை, கால்கள் கட்டப் பட்டு வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் அம்பலாங்கொடை ரன்தொம்பே பிரதேசத்திலுள்ள பாழடைந்த வீடொன்றின் அருகி லிருந்த பற்றைக் காடொன்றி லிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை அம பலாங்கொடை பொலிஸாரால் மீட்கப்பட்ட இவர், உடனடியாக பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க கப்பட்டதாகவும், மீட்கப்பட்ட சமயம் அவர் பேசமுடியாத நிலையில் இரு ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்ப சிகிச்சையின் பின் பொலிஸாருக்கு வாக்குமூலம் கொடுத்த அவர், கடந்த புதன் கிழமை இரவு தான் தங்கியிருந்த அக்குரஸ்ஸ, சலகொட போதி ராஜா ராம விகாரைக்குள் ஆயுத பாணி களாகப் புகுந்த ஐவர் தன்னைக் கடத்தி வாகனமொன்றில் ஏற்றிய தாகவும், அங்கிருந்து குறிப்பிட்ட தூரம் சென்றபின் தன்னை இறக்கி கை, கால்களைக் கட்டியதுடன், வாயில் துணியை அடைத்து பற் றைக்காட்டில் போட்டுவிட்டுச் சென் றதாகவும், அவர்கள் போவதற்கு முன் தான் தேவையில்லாத விடய ங்களில் மூக்கை நுழைத்தால் கொலை செய்யப்படுவேன் என மிரட்டி விட்டுச் சென்றதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு காலி பிரதான வீதி யில் அம்பலாங்கொடை, ரன்தொ ம்பே பிரதேசத்திலுள்ள பாழடை ந்த வீட்டுக்குப் பக்கத்தில் இந்தப் பிக்கு கிடந்ததைக் கண்ட இளை ஞர் ஒருவர் அம்பலாங்கொடை பொலிஸநிலையத்துக்குத் தெரி வித்த தகவலொன்றின் அடிப்ப டையிலேயே இவர் மீட்கப்பட்டார்.

இவரைக் கடத்தியவர்கள் பற் றிய எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும், மேல திக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் அம்பலாங் கொடை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.மகிந்த தெரிவித்தார். (இ)

## நீதிமன்றில் இரு ஹெரோயின் வழக்குக் கோப்புக்கள் மாயம்

### மேல் நீதிமன்ற விசாரணைகள் முடக்கம்

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருந்த இர ண்டு ஹெரோயின் போதைப்பொ ருள் வழக்குகள் சம்பந்தப்பட்ட நீதிமன்றக் கோப்புகள் நுகேகொடை நீதிமன்றத்தில் காணாமற் போயு ள்ளது.

இதனால் அந்த வழக்குகளை மேல்நீதிமன்றம் விசாரிக்க முடி யாத நிலை தோன்றியுள்ளதாகவும் இது தொடர்பில் விரிவான விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மிரிஹான பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்குகளில் எதிராளிகள் மீது குற்றப்பத்திரிகைகள் விநியோ கிக்கப்பட்டுள்ளதாகவும், ஆரம்ப விசாரணைகள் நுகேகொடை நீதி மன்றத்தில் நடைபெற்ற பின் மேல திக விசாரணைகளுக்காக அவ் வழக்குகள் மேல்நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவிருந்ததாகவும் அத னைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இரு கோப்புகளும் காணாமற்போ யுள்ளதாகவும் தெரியவருகின்றது.

2013ஆம் ஆண்டு பத்து கிராம் ஹெரோயினுடன் பொலிஸ் போதைப பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட ஒருவர் மீதும் அதே வருடம் பொரலஸ்கமுவ பொலிஸாரால் 14 கிராம் ஹெரோ யினுடன் கைது செய்யப்பட்ட ஒரு வர் மீதும் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்தக் கோப்புகள் காணாமற் போயுள்ளமை தொடர்பில் நுகே கொடை நீதிமன்றம் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்த தையடுத்து மேல்மாகாணத்தின் தென் பிராந்தியத்துக்குப் பொறு ப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் கீழ் மிரிஹான பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

## மதிப்பிழந்த இலங்கையின் கடவுச்சீட்டு

உலகின் செல்வாக்கான கடவுச் சீட்டு பட்டியலில் இலங்கை மிக வும் மோசமாகப் பின்தள்ளப்பட்டுள்ளது.

உலகின் செல்வாக்கான மற்றும மிகவும் தகுதியற்ற கடவுச்சீட்டு தொடர்பான பட்டியல் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் வெளி யிடப்பட்டுள்ளது.

விசா இன்றி பயணம் மேற் கொள்வதற்கான வசதி, ஒன்அரை வல் விசா வசதி, ஒன்லைன் விசா வசதி என்பவற்றைக் கொண்டு இந்த தரப்படுத்தல் பட்டியல் வெளி யிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஜேர்மனி யர்கள் 175 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணம் செய்வதற்கான அனுமதியைக் கொண்டிருப்பதன் காரணமாக அந்நாட்டின் கடவுச் சீட்டு உலகின் செல்வாக்கான கடவுச்சீட்டுக்களின் வரிசையில் முதலிடம் பிடித்துள்ளது.

176 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணம் செய்வதற்கான வசதி யைக் கொண்டுள்ள சுவீடன் கடவு ச்சீட்டு இந்த வரிசையில் இர ண்டாம் இடம் பிடித்துள்ளது.

104 இடங்களைக் கொண்ட பட்டியலில் 1 முதல் 93 வரையான இடங்களைப்பிடித்துள்ள நாடு க ளின் கடவுச்சீட்டுகள் செல்வாக் கான வரிசையில் இடம்பிடித்துள் ளன. (இ)

## கொழும்பின் புறநகர்ப் பகுதியில் 15 ஆயிரம் வீடுகள் அமைக்க திட்டம்

### நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க



கொழும்பின் புற நகர்ப்பகுதி யில் 15 ஆயிரம் வீடுகளை நிர்மா ணிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு ள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதி யில் இடம்பெற்ற வடிகால் பாது காப்பு அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும்தெரி விக்கையில்,

மக்களின் பங்களிப்புடன் பொரு ளாதார அபிவிருத்தியை முன்னெ டுப்பதே இந்த அரசாங்கத்தின் குறிக் கோளாகும். அத்துடன் மக்களுக் கான நிவாரணங்களை வழங்கு வதும் அரசின் கடமையாகும். இந்த இலக்கை அடைவதற்கு ஏற்கனவே அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகிறது.

எனினும் இந்த விடயங்களில் அரசாங்கம் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. கொழு ம்பின் வடக்குப் பகுதியில் வீடுகள ற்றவர்களுக்கு 15 ஆயிரம் வீடுக ளைக் கட்டிக்கொடுப்பதற்கு அரசா ங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கான நிலத்தை பெறு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண் டிருக்கிறது. இதேவேளை ஹெரோ யின் போன்ற போதை வஸ்துக் களைக் கடத்துபவர்களை தண்டி ப்பதன் மூலமே போதை வஸ்து கடத்தல்களை இல்லாதொழிக்க முடி யும். மாறாக அதற்கு அடிமையானவர் களை சிறையில் அடைப்பதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியாது.

இது தொடர்பிலும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள் ளது என்று அவர் மேலும் தெரிவித் துள்ளார். (3)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–83

# பொருளாதாரமும் சூழலியலும் ஒன்றிணைந்த வீட்டுத்தோட்டம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வீட்டுத்தோட்டத்தின் நன்மை தீமைகளைப் பற்றி பலவாறாக நாம் அலசியாராய்ந்தாலும் இன்னும் அதனுடைய அடிப்படையை பலர் விளங்கிக் கொள்ளவேயில்லை. மாறாக எமக்குள்ளேயே நாம் கற்றறிந்த கருத்துக்களை அப்படியே உள்வாங்கி திரும்பவும் அப்படியே ஒப்புவிக்கும் தன்மையிலேயே இருக்கின்றோம். கற்றறிகின்ற விடயங்களிலுள்ள அடிப்படையை விளங்கிக் கொள்வதும் அதனை சமகாலத்தில் எமக்கான சூழலில் எப்படி மாற்றியமைக்கின்றோம் என்பதிலேயே கற்றலில் பயன் இருக்கின்றது. யாரோ எங்கிருந்தோ கூறிய கருத்து எமக்குளப்படி பொருத்தப்பாடாகின்றது என்பதனை நாம் முதலில் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். எமக்கான சூழலில் இக் கருத்துக்கள் எவ்வாறுபொருந்துகின்றன அல்லது எப்படி நாம் புரிந்து கொள்ளலிலாவது மாற்றத்தை கொண்டு வரலாம் என சிந்தித்தால் இதுவரைக்கும் நாம் கலந்துரையாடிக்கொண்டதன் அர்த்தம் புரியும். அதாவது ஒருவருக்கு பயனில்லாதது இன்னொருவருக்கு பயன்பாடாகின்றது. கழிவென்றுஎதுவுமில்லை இவ்வுலகில் அனைத்தும் ஏதோவொரு வகையில் எவருக்கோ பயன்பாடாகின்றது. அதுவே உண்மை. ஒருசெயற்பாட்டில் கழிவாகஉருவெடுப்பது இன்னொரு செயற்பாட்டில் உள்ளீடாகின்றது. மண்புழு தத்துவம் இதைத்தானே எடுத்தியம்புகின்றது. தாவரம் மற்றும் விலங்கு கழிவுகளை மண்புழு உணவாக உட்கொண்டு அதன் கழிவுகள் மணபுழு உரமாக தாவரங்களுக்கு பசளையாக உள்ளீடாகின்றது. ஆக மொத்தத்தில் கழிவுகளில் சுழற்சியையே இது சுட்டி நிற்கின்றது. இந்தகழிவுச்சுழற்சியில் சக்தி கூட்டுரமாக தாவரத்திற்கு வந்து சேர்கின்றது. சூழலியல் பக்கத்திலிருந்து பார்த்தால் சக்தி சுழற்சியாக காணப்படுகின்றது.

கழிவகற்றலில் இந்த கொள்கைப்பாடு முக்கியமானது. சாதாரணமாக வீடுகளில் உருவாகும் குப்பைகளில் 85-90 சதவீதமானவை சேதன கழிவுகளாகும். இவற்றை முறைப்படி மீள்சுழற்சி செய்தால் அவற்றினை நாம் சிறப்பாக வினைத்திறன் மிக்க பொருளாக்கி விடமுடியும். விளைநிலத்தில் உருவாகும் கழிவுகள் அந்த இடத்திலேயே மண்ணில் உக்கி விடுகின்ற தன்மையை அவதானிக்கலாம். சேதனக்கழிவுகளை மண்ணில் இடும்போது அங்கே நுண்ணங்கிகளின் பெருக்கம் அதிகரித்து விடுகின்றது. நன்மை தருகின்ற நுண்ணங்கிகளின் பெருக்கம் விளைநிலத்தில் காணப்படுகின்ற ஊட்டச்சத்துக்களை தாவரம் இலகுவில் அகத்துறிஞ்சுவதற்கு வழிசெய்து விடுவதனால் எமக்கு நன்மையே கிடைக்கின்றது. உக்காத கழிவுகளான போத்தல், இரும்பு, பொலித்தீன் மற்றும் ஏனைய இலத்திரனியல் கழிவுகள் தவிர்ந்த அனைத்து சேதன கழிவுகளையும் நாம் கூட்டுரமாக மாற்றிவிடலாம். இதற்காக எளிய வினைத்திறனாக தொழில்நுட்பத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டால் இந்த கூட்டுரமாக மாற்றும் செயற்பாடு இலகுவாக்கப்பட்டுவிடும்.

வீட்டுத்தோட்டத்தில் பலவகையான விடயங்களை நாம் உள்வாங்கிக்கொள்ளலாம். இது அத்தனை சிறப்புக்குரியதாக இருப்பதனால் வீட்டுத்தோட்டத்தினை கீழ்வரும் விடயங்களுக்கானதாக மாற்றிக் கொள்ளமுடியும்.

1. பல்வகைத்தன்மையுள்ள இடமாக:

வீட்டுத்தோட்டத்தில் பலவகையான தாவரங்கள் வளர்க்கப்படுதலை இது சுட்டிநிற்கின்றது. இயற்கையாக வளருகின்ற தாவரங் கள் தவிர எமது தேவைக்காக வளர்க்கப்படுகின்ற தாவரங்களுடன் சேர்த்து பல்வகைத்தன்மையை குறிப்பிட்ட ஓரிடத்தில் நாம் பேணிக் கொள்ள முடிகின்றது. இது சூழலியலைப் பொறுத்தவரையில் முக்கியமானதாகும்.

2. பல்வகை ஊட்டச்சத்துணவுகளைப் பெறும் வாய்ப்பு:

வீட்டுத்தோட்டத்தில் பழப்பயிர், மரக்கறிப் பயிர்கள்,கிழங்குப் பயிர்கள், இலைக்கறிவகைகள்,அழகுத் தாவரங்கள்,கொடிகள் ஏறிகள் படரிகள் எனபல்வகையான உணவாகப் பயன்படக்கூடியதாவரங்கள் வளர்க்கப்படுவதனால் இலகுவில் இவ்வாறான பல்வகை உணவுகளை பெறும் வாய்ப்புகிட்டுகின்றது. உண்பதற்காக பழங்கள், இலைக்கறிவகைகள் மற்றும் மரக்கறிப் பயிர்கள் கிடைக்கும் போது அதனை உணவாக்கும் தன்மையும் அதிகரிக்கின்றது.

3. ஊட்டச்சத்துள்ள உணவு கிடைத்தல்:

சாதாரணமாகவே குறிப்பிட்ட உணவுப்பழக்கத்தில் ஊறி விட்டிருக்கின்ற எங்களுக்கு ஊட்டச்சத்தினை வழங்கக்கூடிய பல்வகை உணவுகளைநாம் தெரிவு செய்யும் போது அவற்றிலிருந்து எமக்கு கிடைக்கும் அனைத்து ஊட்டச்சத்துக்களும் முழுமையாக எமது உடலின் தேவையை பூர்த்தி செய்வதாக இருக்கும். விதம் விதமான உணவுகளை உட்கொள்ளும் போது விற்றமின்கள், நார்ச்சத்து, புரதச்சத்து மற்றும் வேண்டிய அனைத்து நுண்மூலகங்களும் கிடைக்கும் வாய்ப்புள்ளதனைநாம் அறிந்து கொள்ளவேண்டும். அனைத்து ஊட்டச்சத்துக்களும் குறிப்பாக விற்றமின்களும் ஒரேயுணவில் கிடைப்பதில்லை. செயற்கையாக தயாரிக்கப்படும் உணவுகளிலும் குடிபானங்களிலும் இயற்கையான இவ்வூட்டச்சத்துக்கள் இருக்காது என்பதனையும் நாம் கவனிக்கத்தவறிவிடக்கூடாது. குறிப்பாக இரும்புச்சத்து இலகுவில் கிடைக்கும் உணவாக முருங்கையிலை காணப்படுகின்றது. சாதாரணமாக எமதுநிலத்தில் வளருகின்ற இதில் எமக்குதேவையான இரும்புச்சத்து கிடைக்கின்றது என்றால் அதனை நாம் ஏன் உணவாக்காது அதற்காக குளிகைகளை பயன்படுத்துகின்றோம். உணவின் மூலமாக நாம் ஊட்டச்சத்தினைப் பெறும் போது தான் உடலுக்கும் அதிலுள்ள உறுப்புக்களுக்கும் வேலை கிடைக்கின்றது. அனைத்தையும் அகத்துறிஞ்சும் நிலையில் நாம் உணவாக்கினால் (இங்கே குளிகைகளை உணவாக்கும் நிலையினை குறிப்பிட்டிருக்கின்றேன்) உடலுறுப்புக்களுக்கு வேலையில்லாமல் அதனது செயற்பாடு மங்கத் தொடங்கிவிடும். இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டவருக்கு பிரச்சினையே தும் எழுவதில்லை. யாழ்ப்பாணத்தில் திருமணமாகும் இளவயதினருக்கு குழந்தைப் பாக்கியம் அரிதாக இருப்பதாக தற்போது கூறப்படுவதற்கும் இந்த உணவுப் பழக்கத்திற்கும் நிறையவே சம்பந்தமுண்டு. ஆரோக்கியமானஉணவினைத் தவிர்த்து நாம் அவசர உணவினுள் அகப்பட்டு அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். வருகின்ற சந்ததி கூட வளமானதாக இல்லையென்றால் நாம் படித்தென்ன,உழைத்தென்ன, பணம்பொருள் சம்பாதித்தென்ன? இறுதியில் விரக்தியின் விளிம்பில் நின்று எம்மை நாமே வருத்திக்கொள்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டு விடுகின்றோம்.

4.வருமானம் கிடைக்கும் வர்த்தக நிலையம்

வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கும் பயிர்களை ஆங்காங்கே விற்பதற்கு வழிவகை செய்யப்பட்டால் வறிய நிலையில் கடின வாழ்க்கை வாழும் மக்களுக்கு இதிலிருந்து வருமானம் கிடைக்க வழிகிடைக்கும். இனாமாக எதுவும் கொடுக்காது அவர்கள் பயிர்வளர்த்து வேலை செய்து தமது வருமானத்தை ஈட்டிக் கொள்ள நாம் வழிவகை செய்து கொடுப்போமாயின் அதுவே அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நாம் செய்யும் சிறந்த கைங்கரியமாகும்.வருமானத்தை பெருக்குவதற்கு அவர்களுக்கு தேவையான உள்ளீடுகளை நாம் கொடுத்துதவலாம்.

5.தலைமைத்துவத்தின் அத்திபாரம்

ஒவ்வொருவர் வீட்டிலுமுள்ள வீட்டுத்தோட்டத்தை அங்கே கல்வி பயிலும் மாணவர்களை தலைமைத்து வமாககொண்டு பெருக்கிப் பாருங்கள். திட்டமிடலிலும் சரி அழகாக வைத்திருப்பதிலும் சரி, விரும்பிய பயிரை தெரிவு செய்வதிலாயினும் சரி மாணவர்களை இளையவர்களை தலைவர்களாக்கி குடும்பத்து உறுப்பினர்களனைவரும் அவர் சொல்லுக்கு, விருப்பத்துக்கு கட்டுப்பட்டு வீட்டுத்தோட்டத்தை உருவாக்கினால் குடும்பத்தில் மகிழ்ச்சிபெருகும். அத்துடன் மழலைகளுக்கும் அதுவொரு அனுபவமாக இருக்கும். தலைவர்களை நாமே உருவாக்கவேண்டும். அதற்கு நாம் வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். மழலைகளுக்கான திறந்த பள்ளிதான் வீட்டுத்தோட்டம். அங்கே நடவு செய்யப்படும் பயிர்களில் ஏற்படுகின்றமாற்றங்கள் மழலைகளின் உடலிலும் மாற்றங்களை ஊக்குவிக்கும். சிறியவரின் தலைமையில் குடும்ப உறுப்பினர்களுக்கான வேலை பிரித்துக் கொடுக்கப்பட்டு அங்கே அவரவர் வயதுக்கேற்ப இயலுமைக்கேற்ப அனைவரும் கூட்டாக இணைந்து பணிபுரிவர். விட்டுக்கொடுப்புக்களுக்கும் வினைத்திறனான முகாமைத்துவத்திற்கும் இங்கே இடமுண்டு.

6.வேலையை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு

வீட்டுத்தோட்டத்தில் வீட்டிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து பணிபுரிவதனால் அவரவர் நிலைக்கேற்ப அங்கே வேலை பகிர்ந்தளிக்கப்படும். குறிப்பாக வயதானவர்களை வீட்டில் ஒரு பொருட்டாகவே கவனிக்காத இக்காலகட்டத்தில் அவர்களும் பொழுதுபோக்காக சிறியவேலைகளைச் செய்வதற்கு இது நல்லதொருவாய்ப்பாகும். அவரவர் உடல்நிலைமைக் கேற்ப வேலைபிரித்துக்கொடுக்கப்படும் போதுஅதுஒருவருக்கும் சுமையாக இல்லை சுகமாக இருக் கும் குடும்பமேஒன்றாக இருந்து மகிழும்இடமாகவும்இது காணப்படும்.

7. பசுமையான சூழல்

பல்வகைத்தாவரங்களை சிறிய இடத்தில் கொண்டிருப்பதனால் சூழல் ரம்மியமானதாகவும் பசுமையானதாகவும் அமைந்திருக்கும். பசுமையான காட்சி கண்ணுக்கு புதுசக்தியைக் கொடுக்கும். மூளைக்குபுதிய உத்வேகத்தையும் கொடுக்கும். விதம் விதமான வெவ்வேறு நிலைகளில் தாவரங்கள் வளர்க்கப்படுவதனால் பசுமையை தொடர்ந்து பேணுவதற்கு வாய்ப்புகிடைக்கின்றது. மனம் அமைதியடையவும் புத்துயிர்பெறவும் வீட்டுத் தோட்டம் பெரிதும் உதவும்.

8. நன்மைதரும் உயிரினங்களை பாதுகாக்கும் இடம்

வீட்டுத்தோட்டத்தில் குறிப்பாக அழகுத் தாவரங்களில் பூக்கும் தாவரங்களை வளர்க்கும் போது அவற்றினை நோக்கியும் மரக்கறிப்பயிர்கள் மற்றும் பழப்பயிர்களின் பூக்களினால் கவரப்பட்டும் நன்மைதரும் உயிரினங்களின் வருகை அதிகரித்திருக்கும். குறிப்பாக மகரந்த சேர்க்கையாளர்களை பாதுகாக்கும் இடமாகவும் அவற்றின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் வாய்ப்புக்கள் நிறையவேஉண்டு. இரைகொவிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் என்பனவற்றை பாதுகாக்கும் இடமாக வீட்டுத்தோட்டம் அமைவது சாலச்சிறந்ததாகும்.

இத்தனையையும் கொண்டிருக் கும் வீட்டுத்தோட்டத்தைநாம் அவசியம் ஒவ்வொருவீட்டிலும் உருவாக்கிக்கொள்ளவேண்டும். சிறந்தவீட்டுத்தோட்டத்தை வைத்திருப்பவர்களுக்கு தொடர்ந்தும் அனுசரணையும் ஆலோசனைகளும் கிடைக்கவேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 80



# எந்நேரத்திலும் அணு ஆயுதங்களை பயன்படுத்தத் தயாராக இருங்கள்

## இராணுவத்தினருக்கு வடகொரிய ஜனாதிபதி உத்தரவு



(பியாங்யாங்)

**அணு ஆயுதங்களை எந்த நேரத்திலும் பயன்படுத்தத் தயார் நிலையில் இருக்குமாறு இராணுவத்தினருக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்தை மீறிய வகையில் ஐதரசன் குண்டுகளை வெடித்து பரிசோதித்தது, விண்வெளி ஆய்வு என்ற பெயரில் அதிநவீன ஏவு கணையை செலுத்தியது போன்ற அத்துமீறல்களுக்காக வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபை கடந்த புதன்கிழமை புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள வேளையில் ஜனாதிபதி கிம் ஜாங் உன் பிறப்பித்துள்ள இந்த திடீர் உத்தரவு உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வடகொரியாவின் இராணுவ தலைமையகத்துக்கு வந்த கிம் ஜாங் உன் அங்கு வைக்கப்பட்டுள்ள அதிநவீன ரொக்கெட்கள், ஏவுகணைகளைப் பார்வையிட்ட பின்னர், நமது எதிரி நாடுகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் நம்மிடம் இருக்கும் அணு ஆயுதங்களை எந்த நேரத்திலும் பயன்படுத்த தயார் நிலையில் இருக்குமாறு இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக வடகொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அணு ஆயுதங்களின் தரத்தையும் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திய ஜனாதிபதி, நாட்டை பாதுகாப்பதற்காக நம்மிடம் உள்ள அணு ஆயுதங்கள் எந்த நிமிடத்திலும் சீறிப்பாயும் வகையில் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

குறிப்பாக, தென்கொரியாவை குறிவைத்து தயார் நிலையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஏவுகணைகளை பார்வையிட்ட கிம் ஜாங் உன் திருப்தி தெரிவித்ததாகவும் அந்த செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதனால், கொரிய தீபகற்பத்தில் போர்மேகம் சூழும் நிலை உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.(இ)

# பதற்றத்தை ஏற்படுத்த முற்படக் கூடாது

## வடகொரியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

அணு ஆயுதங்களை எந்த நேரத்திலும் பயன்படுத்த தயார் நிலையில் இருக்குமாறு இராணுவத்தினருக்கு வடகொரிய ஜனாதிபதி பிறப்பித்துள்ள உத்தரவுக்கு எதிராக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதியின் உத்தரவு தொடர்பான தகவல்கள் எங்களுக்கும் கிடைத்துள்ளன. கொரிய தீபகற்பத்தில் உள்ள எங்கள் நட்பு நாடுகளுடன் சேர்ந்து நிலைமையை மிக நெருக்கமாக கண்காணித்து வருகிறோம்.

ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளால் பதற்றத்தை உருவாக்கும் முயற்சிகளை தவிர்த்து, சர்வதேச சமுதாயத்துக்கு ஆற்ற வேண்டிய அர்ப்பணிப்புகளையும், நிர்பந்தங்களையும் நிறைவேற்ற வடகொரியா முன்வர வேண்டும் என அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் எச்சரித்துள்ளார். (இ)




# முதலமைச்சரின் நடவடிக்கை எனக்கு நம்பிக்கையளிக்கிறது

## பேரறிவாளனின் தாயார் பேட்டி



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வி.ஸ்ரீதரன் என்ற முருகன், டி.சுதேந்திரராஜா என்ற சாந்தன், ஏ.ஜி.பேரறிவாளன் என்ற அறிவு, ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், நளினிஆகியோர் கடந்த 25 ஆண்டுகளாக சிறையில் இருந்து வருகின்றனர்.

இவர்களை விடுவிக்க முடிவு செய்து, தமிழக முதலமைச்சர் நடவடிக்கையில் இறங்கிருப்பதை மனதார வரவேற்கிறேன். அவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இதற்காக தலைமைச் செயலாளரும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது எங்களுக்கு நம்பிக்கையைத் தருகின்றது.

தனிப்பட்ட முறையில் முதலமைச்சர் எனக்கு ஆறுதல் சொன்னார். தற்போது மத்திய அரசுடன் சுமுக உறவுடன் இருப்பதால் முதலமைச்சர் திடீரென்று விடுதலை என்ற முடிவை எடுத்திருப்பது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையைத் தருகின்றது.

நோய்வாய்ப்பட்ட பேரறிவாளனின் தந்தையைப் பார்க்க, பேரறிவாளனுக்கு பரோல் வழங்க வேணடும் என்றுதான் கோரியிருந்தோம்.

ஆனால் முதலமைச்சர் விடுதலையே செய்ய நடவடிக்கை எடுத்திருப்பது மிகுந்த மனநிறைவைத் தருகிறது. இதனை வரவேற்கிறோம்.

முதலில் விடுதலை என்று அறிவித்து விட்டு ஒரு சிலர் எதிர்த்ததால் என் மகனின் விடுதலை தள்ளிப் போனது. அதில் எங்களுக்கு பெரிய ஏமாற்றமாக இருந்தது. அந்த வலி இன்னும் எங்களை விட்டு அகலவில்லை.

இந்த நிலையில் முதலமைச்சரின் அறிவிப்பை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

சிறைச்சாலை என்னுடைய மகனை நோயாளியாக தான் விடுவிக்கவுள்ளது. யாரோ செய்ததை இவர்கள் செய்ததாக கருதி 25 ஆண்டுகள் அப்பாவிகளான இவர்களை சிறையில் அடைத்து வைத்துள்ளனர்.

இவர்களை தண்டிப்பதால் என்ன ஆகிவிடப் போகிறது. இழந்தது, இழந்தது தான். இதேபோன்று அனைத்து வழக்குகளையும் பார்த்திருக்க வேண்டும்.

ஆனால் என்னுடைய மகனுக்கு இப்படி ஒரு தண்டனை என்பதை ஏற்க முடியவில்லை.

சிறையிலும் அவ்வளவு நன்னடத்தையாக என் மகன் நடந்துள்ளான். என்னுடைய கணவர் நோய் வாய்ப்பட்டு இருப்பதை காண பேரறிவாளன் என்று எங்கள் வீட்டுக்கு வருவான்? என்று ஏங்கி கொண்டு இருக்கிறோம். விரைவில் தமிழக அரசு எங்களுக்கு சந்தோசமான செய்தியை அளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தற்கொலைப்படை தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் 18 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவில் அரசுப்படைக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே 5 ஆண்டுகளாக நடந்து வந்த உள்நாட்டு போர் கடந்த சில தினங்களுக்கு முன் முடிவுக்கு வந்தது. இருந்த போதிலும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான தாக்குதல் தொடரும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையில் அரசு போர் நிறுத்தத்தை மீறுவதாக கிளர்ச்சியாளர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால் கிளர்ச்சியாளர்கள் போர் நிறுத்தத்தை மீறி தாக்குதலில் ஈடுபட்டு வருவதாக ரஷ்யா குற்றம் சாட்டுகிறது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் கியூனெயிட்ரா மாகாணத்துக்கு உட்பட்ட அல் - ஈஷா என்ற கிராமத்தில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்த கிராமத்தில் உள்ள கிளர்ச்சியாளர்களின் பகுதிக்கு வெடிகுண்டுகள் நிரப்பிய காரை செலுத்தி வந்த தீவிரவாதி அதை வெடிக்க செய்தான்.

அது பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இதில் கிளர்ச்சியாளர்கள் 18 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருந்த போதிலும் ஐ.எஸ். தீவிரவாதிகள் தான் இந்த தாக்குதலை நடத்தி இருப்பார்கள் என நம்பப்படுகிறது. (இ)

# அமெரிக்க உள்ளாட்சி தேர்தலில் இந்தியர்கள் 12 பேர் வெற்றி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கென்டக்கி மாகாணத்துக்கு உட்பட்ட லெக்சிங்டன நகருக்கான உள்ளாட்சிதேர்தல கடநத செவ்வாய்க்கிழமை நடந்தது.

இதில் அமெரிக்க வாழ் இந்தியர்கள் 8 பேர் போட்டியிட்டனர். அதனைத் தொடர்ந்து நகர்மன்ற கூட்டத்தில் தேர்தல் முடிவுகள் வெளியாகின.

இதில் அமெரிக்க வாழ் இந்தியர்கள் 8 பேரில் 7 பேர் அமோக வெற்றிபெற்றனர்.

ஒருவர் மட்டுமே தோல்வியைத் தழுவினார். அவரும் குறைந்த அளவு வாக்கு வித்தியாசத்திலேயே தனது வெற்றியை இழந்து உள்ளார் என கூறப்படுகிறது.

வெற்றி பெற்றவர்களில் 4 பேர் ஓராண்டு காலமும், 3 பேர் 3 ஆண்டுகளும் பதவி வகிப்பர். இந்த கூட்டத்தொடரின் போது மேலும் 5 அமெரிக்க வாழ் இந்தியர்கள் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர். அவர்களது பதவிக்காலம் முடிவு செய்யப்படவில்லை.

இது குறித்து, லெக்சிங்டன் நகரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ஒருவர் கூறுகையில், "இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகும் ஏனெனில் விரைவில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் உள்ளாட்சி தேர்தலில் ஏற்கனவே பதவியில் இருக்கும் வேட்பாளர்களுக்கு சாதகமாக இருந்த போதிலும் இவர்களது வெற்றி சாத்தியமாகியுள்ளது" என மேலும் தெரிவித்தார். (இ)

# அங்கோலாவில் கரைபுரண்டோடிய வெள்ளம்



## 23 பேர் பலி; 30 பேர் மாயம்

அங்கோலாவில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கேபிடாவ் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. நேற்று வெள்ளம் மேலும் அதிகரித்த நிலையில் ஆற்றின் கரையைத் தாண்டி சந்தைக்குள் வெள்ளம் புகுந்தது. இதில் 23 பேர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட 30 பேரின் நிலை என்ன என்று தெரியவில்லை. இத்தகவலை அங்கோப் செய்தி நிறுவனம் வெளியிட்டது. பலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (இ)

### தலைப்பாகை அணிந்த சிறுவனுக்கு கத்திக்குத்து

அவுஸ்திரேலியாவில் தலைப்பாகை அணிந்த சீக்கிய சிறுவன் கத்தியால் குத்தப்பட்டான். அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பேர்ன் நகரைச் சேர்ந்த 13 வயது சீக்கிய சிறுவன் ஹர்ஜீத் சிங். வெளியே சென்றிருந்த இவன் பேருந்தில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது அவனுடன் பேருந்தில் பயணம் செய்த 2 ஆண்கள் மற்றும் ஒரு பெண் அவன் அணிந்திருந்த தலைப்பாகையை பார்த்து கேலி கிண்டல் செய்தனர்.

இதை தட்டிக்கேட்ட சிறுவன் ஹர்ஜீத் சிங்கை கத்தியால் குத்தி காயம் ஏற்படுத்தினர். மேலும் அவனுக்கு கொலை மிரட்டல் விடுத்தனர். இது குறித்து பொலிஸில் புகார் செய்யப்பட்டது. பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். சீக்கிய சிறுவன் மீது இனவெறி தாக்குதல் நடத்தியது அவுஸ்திரேலியாவில் சீக்கியர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ)

## உலகின் நீண்டதூர இடைவிடாத விமான சேவையை எமிரேட்ஸ் நிறுவனம் ஆரம்பித்தது

உலகின் நீண்டதூர இடைவிடாத விமான சேவையை புகழ்பெற்ற விமான நிறுவனமாக டுபாய் எமிரேட்ஸ் நிறுவனம் தொடக்கியுள்ளது.

உலகின் மிக நீண்டதூரம் பயணம் செய்யும் எமிரேட்ஸ் ஏர்பஸ் A 380, டுபாயில் இருந்து தனது பயணத்தை தொடங்கி நியூசிலாந்தை சென்றடைந்துள்ளது. முதல் பயணமாக இந்த விமானம் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாயில் இருந்து 14,200 கிலோமீற்றர் பயணம் செய்து நியூசிலாந்தின் ஆக்லாந்தை சென்றடைந்துள்ளது.





கடந்த 2014 ஆம் ஆண்டு குவான்டாஸ் பயணிகள் விமானம் சிட்னியில் இருந்து டல்லாசுக்கு தொடர்ச்சியாக 13 ஆயிரத்து 800 கிலோமீற்றர் பயணம் செய்தது இதுவரை உலகின் நீண்டதூரம் பயணம் செய்த சாதனையாக இருந்தது. இந்த சாதனையை எமிரேட்ஸ் ஏர்பஸ் A 380 முறியடித்துள்ளது. இந்த விமானமானது ஆக்லாந்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு 14 ஆயிரத்து 200 கிலோமீற்றர் தூரத்தை 17 நேரங்களில் 15 நிமிடங்களில் கடந்து டுபாயை மீண்டும் வந்தடையும், டுபாயில் இருந்து ஆக்லாந்துக்கு வழக்கமாக போயிங் 777 விமானமே சேவையில் ஈடுபடுத்தப்படுவது வழக்கம். தற்போது உலகின் மிக நீண்டதூரம் இடைவிடாமல் பயணம் செய்யும் எமிரேட்ஸ் ஏர்பஸ் A 380 பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (இ)

## மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவரின் 7 ஆயிரம் ஆதரவாளர்கள் மீது வழக்கு

பாகிஸ்தானில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட மும்தாஜ் காத்ரியின் ஆதரவாளர்கள் 7000 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பாகிஸ்தானில் நடைமுறையில் இருக்கும் மத அவமதிப்பு சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று குரல் கொடுத்துவந்த சீர்திருத்தவாதியான பஞ்சாப் மாகாண முன்னாள் ஆளுநர் சல்மான் டஸீர் என்பவரை அவரது பாதுகாவலரான மும்தாஜ் காத்ரி கடந்த 4-1-2011 அன்று துப்பாக்கியால்சுட்டுக்கொன்றார். இவ்வழக்கில் காத்ரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அடியாலா சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் குரல் கொடுத்து வந்த நிலையில், கடந்த மாதம் 29ஆம் திகதி அவர் தூக்கிலிடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.



இந்த செய்தி பரவியதும் அவரது ஆதரவாளர்கள் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள், வீதி மறியல்கள் நடத்தி ஞீஎதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சில இடங்களில் வன்முறை வெடித்தது.

கராச்சியில் உள்ள பரபரப்பான எம்.ஏ.ஜின்னா வீதியில் திடீர் மறியலில் ஈடுபட்ட சுமார் 7000 பேர், அரசு நிர்வாகத்திற்கு எதிராக மோசமான வார்த்தைகளைக் கூறி கோஷமிட்டதுடன் கலவரத்தில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக சோல்ஜர் பசார் பொலிஸ் நிலையத்தில் 7000 பேர் மீதும் பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக நிலைய அதிகாரி இர்ஷத் சூம்ரோ தெரிவித்தார்.

ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் காத்ரியின் இறுதிச்சடங்கு நடந்தபோது சுமார் 50 ஆயிரம் ஆதரவாளர்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## நிலநடுக்கத்தை தொடர்ந்து சுமத்திராவில் மீட்புப் படை

இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில் கடந்த புதன்கிழமை இரவு கடலுக்கடியில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 7.8 ஆக பதிவான நிலநடுக்கத்தால் பூமி குலுங்கியதைத் தொடர்ந்து பீதியில் உறைந்த மக்கள், வீடுகளை விட்டு வெளியேறி மழையடி வாரத்தில் இரவுப் பொழுதை கழித்தனர்.

பூகம்பத்தால் உயிரிழப்பு அல்லது பொருட்சேதம் எதுவும் இல்லை என்றாலும், தொடர்ந்து நில அதிர்ச்சி ஏற்பட்டு வருவதால், நிலைமையை கண்காணிக்க இராணுவத்தினர் உட்பட தேடுதல் மற்றும் மீட்புப்படை குழுவினர், சுமத்ராவுக்கு நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றனர். (இ)

## ஈக்வடோரில் எரிமலையில் நெருப்புக்குழம்பு; வெளியேறி வருவதால் பொதுமக்கள் அச்சம்

(ஈக்வடோர்)

ஈக்வடோரில் உள்ள எரிமலையில் இருந்து நெருப்புக்குழம்பு வெளியேறி வருவதால் சுற்றுவட்டார மக்கள் அச்சமடைந்துள்ளனர். பனாஸ் என்ற இடத்தில் உள்ள டோர்ட்டா ஃபயர் என்று அழைக்கப்படும் துராகோ எரிமலை தான் சீற்றத்தை வெளிப்படுத்த தொடங்கியுள்ளது. எரிமலை வெடித்ததும் அதில் இருந்து வெளிவரும் புகை மற்றும் சாம்பல் வான்வெளியில் 13 ஆயிரம் அடி உயரத்திற்கு கரும்புகை போல் சூழ்ந்து காட்சியளிக்கிறது.

சீற்றத்தால் அங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உயிர்ச்சேதம் ஏற்படாமல் இருக்க அப்பகுதியில் உள்ள மக்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். ஈக்வடோரில் உள்ள 84 எரிமலைகளில் துராகோ உள்ளிட்ட எரிமலைகள் மட்டுமே அப்போது இவ்வகையில் வெடித்து மக்களை அச்சுறுத்தி வருகிறது. (இ)

# நீதி நிலைநாட்டப்படாத போது நாடு அராஜகத்திற்கு உள்ளாகும்

## நீதியமைச்சர் தெரிவிப்பு



நீதி உரிய முறையில் நிலை நாட்டப்படாதபோது நாடு அராஜகத்தை நோக்கித் தள்ளப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று அம்பாறை நீதி மன்றத்தைப் பார்வையிடுவதற்கான பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

அங்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கருத்து வெளியிடுகையில்,

நீதிமன்றங்கள் உரிய முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தி நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டும். இல்லாவிடில் பொதுமக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். அதன்மூலம் நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்படும் ஒரு நிலை ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் சுதந்திரமான நீதித் துறை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும் என்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-04.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.67 | 146.60 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.30 | 208.48 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 155.10 | 161.31 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.65 | 148.62 |
| டொலர் | கனடா | 105.64 | 109.94 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 103.93 | 108.81 |
| டொலர் | சிங்கப்பூர் | 102.32 | 106.24 |
| ரூபா | இந்தியா | 2.1441 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.2994 |
| குவைத் | டினார் | 479.0274 |
| ஓமான் | ரியால் | 374.3646 |
| கட்டார் | ரியால் | 39.5834 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.4282 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.2354 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 70 | 60-80 | 60 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 110 | 100 | 120 | 160 | 120 |
| தக்காளி | 20 | 20 | 30 | 25 | 40 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 35 | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 40 | 40 | 35 | 50 | 60 | 80 | 50 |
| கரட் | 100 | 120 | 220 | 100-150 | 140 | 140 | 120 |
| பூசணி | 40 | 40 | 35 | 50 | 50 | 60 | 70 |
| புடோல் | 40 | 40 | 30 | 50 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 35 | 40 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 | 70 | 50-80 | 80 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 50 | 80 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 100 | 70 | 100 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 65 | 70 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 50 | 80 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100 | 100 | 40 | 70 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 80 | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 50 | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 200 | 250 | 200 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 80 | 100 | 80 | 80 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 40 | 50 | – | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 15 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 30 | 50 | 60 | 60 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-45 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 140 | 200 | 100 | 150 | 130 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 50 | 60 | 60 | 100 | 60 |
| முள்ளங்கி | 20 | 40 | 30 | 40 | 40 | 60 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | – | 50 | 50 | – | – | – | – |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## குண்டு வீச்சில் கிட்டுவின் கால் துண்டிப்பு 122

...பழைய டச்சுக்கோட்டை முகாமில் இருந்து சிங்கள இராணுவ வீரர்கள் 11 பீரங்கிகள் மூலம் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் குண்டுகளை வீசினார்கள். இதில் 4 அப்பாவி தமிழர்களும் ஒரு விடுதலைப்புலியும் மரணம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் 22.1.1987 அன்று நடந்தது.

இந்தப் பீரங்கித் தாக்குதல் நடந்தபோது விடுதலைப்புலிகள் இயக்கத் தளபதி கிருஷ்ண குமார் என்ற கிட்டு முன்னணியில் இருந்து எதிர்த் தாக்குதல் நடத்தினார். அப்போது அவர் இருந்த ஜீப் மீது சிங்கள இராணுவம் வீசிய பீரங்கிக் குண்டு வெடித்து விழுந்தது. இதில் கிட்டு, காயம் இல்லாமல் உயிர் தப்பினார்.

தமிழர்கள் மீது தாக்குதலைத் தீவிரப்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் தபால் நிலையக் கட்டடம், வீரசிங்க மண்டபம் ஆகிய இடங்களில் முகாம் அமைக்கச் சிங்கள இராணுவம் முயற்சி செய்தது. இராணுவத்தின் இந்தச் சதித் திட்டத்தை விடுதலைப் புலிகள் முறியடித்தனர்.

### கால் துண்டிப்பு

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே கடுமையான போர் நடந்த நேரம். 1987 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவின் கார் மீது ஒரு குண்டு விழுந்தது.

இலங்கை இராணுவம் வீசிய குண்டு அல்ல அது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் மருத்துவம் படித்து வந்த தன்னுடைய காதலியைச் சந்திப்பதற்காகக் கிட்டு சென்று கொண்டிருந்தார். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் இந்தச் சம்பவம் நடந்தது. இதில் கிட்டுவின் மெய்க்காப்பாளர்கள் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தனர். கிட்டுவின் வலது கால் பாதிக்கப்பட்டது. ஆஸ்பத்திரிக்குக் கிட்டுவை அழைத்துச் சென்ற போது அவரது காலை அகற்ற வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள்.



அவர் விசைப்படகு மூலம் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டார். அவர் உயிர் பிழைக்க வேண்டுமானால் வலது காலை அகற்றி விட வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள். எனவே அறுவை சிகிச்சை மூலம் அவரது வலது கால் துண்டிக்கப்பட்டது.

பிரபாகரன் இந்தியாவில் இருந்த நேரத்தில் தலைமை ஏற்று யாழ்ப்பாணம் நகரில் வீரப்போரில் ஈடுபட்ட கிட்டுவின் ஆயுதப் போராட்டம் அவரது கால் துண்டிக்கப்பட்டதால் ஒரு முடிவுக்கு வந்தது.

### மாத்தையா


கிட்டுவின் கார் மீது குண்டு வீசியது. மாத்தையாவின் ஆட்கள் என்பதை, விடுதலைப்புலிகளின் உளவுப் பிரிவினர் பின்னர் கண்டறிந்தனர்.

மாத்தையாவும் கிட்டுவும் ஒரே நேரத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்தனர். கிட்டு யாழ்ப்பாணத் தளபதியாக நியமிக்கப்பட்டதும் அவரது புகழ்வேகமாக வளர்ந்தது. இதை மாத்தையாவால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. விடுதலைப்புலிகள் அமைப்பில் பிரபாகரனுக்கு அடுத்த இடத்தில் கிட்டு இருப்பது மாத்தையாவுக்குப் பிடிக்கவில்லை.

இதனால் அவர் தனது வலது கரமாக இருந்த விசு என்பவர் மூலம்கிட்டுவின் காரில் குண்டு வீசச் செய்தார் என்பது பிற்காலத்தில் விடுதலைப்புலிகளின் உளவுப்படை வெளியிட்ட தகவலாகும்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் வசம் உள்ள யாழ்ப் பாணத்தைப் பிடிக்க இலங்கை இராணுவம் போரைத் தொடங்கியது. இராணுவ விமானங்கள் குண்டு வீசியதில் ஒரே நாளில் 1000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் பலியானார்கள்.


இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணம் பகுதி விடுதலைப்புலிகளின் ஆதிகத்திற்கு வந்தது. இலங்கை இராணுவம் எவ்வளவோ முயன்றும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியவில்லை.



(தொடரும்)

# சு.க.இரண்டாக பிளவடையாது

## மகிந்த அமரவீர நம்பிக்கை



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவடையாது என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்து புதிய அரசியல் கட்சி உருவாக்குவதில்லை என, கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

கட்சி மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளன. இதற்காக நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிறு அளவிலான கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

கட்சியை பிளவடையச் செய்ய முயற்சித்தவர்களின் தொகுதி அமைப்பாளர் பதவிகள் பறிக்கப்பட்டதனைப் போன்றே, கட்சிக்கு எதிராக செயற்படுவோர் கட்சியிலிருந்து நீக்கப்படுவர்.

கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகளை வகிக்க பொருத்தமானவர்கள் பலர் இருக்கின்றார்கள்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 10 ஆயிரத்து 300 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் கட்சித் தலைமையகத்திற்கு அழைத்து இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன.

அதிகளவில் இளைஞர்கள் வேட்பு மனு கோரி விண்ணப்பம் செய்துள்ளனர் என மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# மகிந்த அணிக்கு மைத்திரி வைத்த ஆப்பு!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்பதற்காவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பலப்படுத்துவதற்காகவும் ஆறு பேர் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.



சு.கவின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க, ஐ.ம.சு.முவின் உப செயலாளர் மஹிந்த அமரவீர, சு.க. பொருளாளர் எஸ்.பி. திஸாநாயக்க, அமைச்சர் சரத் அமுனுகம, இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் இந்தக் குழுவில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுத ந்திர முன்னணிக்கு விரை வில் நியமிக்கப்படவுள்ள புதிய செயலாளரும் குழுவில் உறுப்பினராக இடம் பெறுவார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் 2005 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பொதுஜன ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஈ.பி. டி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகியன பங்காளிக் கட்சி களாக அங்கம் வகித்தன. எனினும், இதில் தலைவர், பொதுச் செயலாளர் ஆகிய முக்கிய பதவிகள் சு.க. வசமிருந்தன.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலின்போது மேற்படி கூட்டணியிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஹெல உறுமய ஆகியன வெளியேறி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்தன. இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டாகப் பிளவடைந்தது.

தற்போது விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சு.க. தலைமைப்பீடத்துடன் முரண்பட்டு வருவதாலும், புதியதொரு அரசியல் கூட்டணியை உதயமாக்குவதற்குரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளதாலும் ஐ.ம.சு.முன்னணி கூட்டணிக்குரிய பலமிழந்து காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீளக்கட்டியெழுப்புவதற்காக அறுவரடங்கிய குழுவொன்றை கூட்டணியின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால நியமித்துள்ளார்.

சிறுபான்மை கட்சிகள், சிறு கட்சிகள் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தி பலமானதொரு கூட்டணியை கட்டியெழுப்புவதே இக்குழுவின் நோக்கமாகும்.

இதன்படி சு.கவுடன் கூட்டணி அமைப்பதற்கு பச்சைக் கொடி காட்டியுள்ள கட்சிகளுடன் இந்தக்குழு பேச்சு நடத்தவுள்ளது.

சு.கவின் மத்திய செயற்குழு கூட்டத்திலும் இது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (இ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 2500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)


உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக 2500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தத் தேவையான பணம் காணப்படுகின்றது. இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொகுதி வாரி அடிப்படையில் நடத்தப்படுவதனால், கடந்த கால தேர்தல்களை விடவும் அதிகளவு பணம் தேவைப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடல் முதல் வாக்குகளை எண்ணுதல் வரையில் அனைத்து நடவடிக்கைகளும் மாறுபட்ட முறையில் நடைபெறும் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (இ)



## இன்று ஒரு தகவல்

### சிந்தனைத் திறன்

சிந்தனைதான் நம் மூளை செய்யும் காரியங்களிலேயே மகத்தானது. சிந்தனையின் அடிப்படையில் முடிவுக்கு வருபவன் சிக்கல் வலையில் மாட்டிக் கொள்ளாதிருக்கவும் எந்தப் பிரச்சினைச் சேற்றிலும் சிக்கிக் கொள்ளாதிருக்கவும் சிந்தனை உதவுகிறது.

ஒரு விடயத்தில் முடிவுக்கு வருவது என்பது சிறு பிள்ளைகள் விளையாடும் ஒத்தையா ரெட்டையா விளையாட்டல்ல.

எதிலும் சிந்தித்தே முடிவுக்கு வரவேண்டும்.

நல்லதா? கெட்டதா? இலாப மா? நட்டமா? நற்பெயர் மிஞ்சுமா? அவப் பெயர் மிஞ்சுமா? என்ற நோக்கிலேயே சிந்தனை செலுத்தப்பட வேண்டும்.

பிற்காலப் பாதிப்புக்களைச் சிந்திக்கும் ஆற்றல் உள்ளதால் தான் உலகில் ஏராளமான நல்ல உள்ளங்கள் மிச்சம் மீதி இருக்கின்றன.

ஒரு நிமிடச் சிந்தனை கூட ஓராயிரம் பலன்களை அளிக்க வல்லது.

சிந்தனை என்பது நம்முள் இருக்கும் சிறந்ததொரு சாதனம். அந்தச் சாதனம் உயிர்காக்கும் நண்பனாக, உற்ற தோழனாக, உங்களுக்கு உறுதுணையாக விளங்க என்றும் தயாராக இருக்கின்றது. ஆனால், பலர் ஏனோ இந்த நண்பனைப் புறக்கணித்து வருகின்றார்கள். இந்த நண்பனை நன்கு பயன்படுத்திக் கொண்டால் எங்கும் எதுவும் எளிது.

சிந்தனை என்பது ஒரு சிறந்த பந்து. அதைக் குருட்டாம் போக்காக பயன்படுத்துவதை விட எதிரி எனும் விக்கட்டை நோக்கி குறிபார்த்து எறிந்து சாய்க்கவும் வெற்றி என்னும் கோல்களைப் போடவும் முயல வேண்டும்.

நம்முடைய ஒவ்வொரு செயலிலும் தர்க்கம் இருக்க வேண்டும். நியாயம் இருக்க வேண்டும் என்றால் அதில் சிந்தனைக் கலப்பு நிச்சயம் வேண்டும்.

சிலர் சிந்திப்பது என்பதைத் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். மண்டையைப் பிய்த்துக் கொண்டு மேலும் குழப்பம் அடைவது என்பது நல்ல சிந்தனையின் அறிகுறியல்ல.

ஒரு பிரச்சினை நம் மீது வீசி எறியப்பட்டால் உடனே அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடக் கூடாது. பிரச்சினையால் பதறிப் போய் இருக்கும் அந்தச் சமயத்தில் நம்மால் ஒரு நல்ல முடிவுக்குவர முடியாது.

சற்றேனும் சிந்தித்து முடிவெடுக்க நேரம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இருந்தால் அந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சற்றுத் தாமதமானலும் பரவாயில்லை. தாமதத்தினால் வரக்கூடிய நட்டத்தை விட பதற்றமான சூழ்நிலையில் எடுக்கப்படும் அவசர முடிவே அதிக நட்டத்தைத் தரும்.

நேரமற்ற சூழ்நிலை நிலவினால் அதற்குள் முழுக்கவனத்தையும் பிரச்சினை மீது செலுத்தி ஒரு முடிவுக்குவர வேண்டும்.

இப்படியெல்லாம் சிந்தித்து முடிவுக்கு வந்தால் அவை பெரும்பாலும் நமக்கு சாதகமாக அமையும்.

அதையும் மீறி நமக்கு பழிபாவமோ நட்டமோ ஏற்படுமாயின் நம்மை நாமே நொந்து கொள்ள வேண்டிய அவசியமிராது. மாறாக இயற்கை விட்ட வழி என்றாவது நாம் ஆறுதலடையலாம்.

**லேனா தமிழ்வாணன்**




# கிச்சுகிச்சு தண்டனை!





ஒரு காட்டில் வால்தனம் செய்து தண்டனை பெற்ற குட்டி விலங்குகள், சிரித்துக்கொண்டே அதை அனுபவித்தன. அது எப்படி முடியும்?

'ஹி... ஹி... விட்டுடுப்பா... விட்டுடுப்பா...' என்று கெஞ்சிக் கொண்டே அப்பா சிங்கத்திடம் பிடிபடாமல் விலகி ஓடி, வேடிக்கை காட்டியது குட்டிச் சிங்கம்.

'இன்னிக்கு உன்னை விட மாட்டேன்... பிடிச்சு பனிஷ் பண்ணினால்தான் நீ சரிப் படுவே...' குட்டிச் சிங்கத்தைப் பிடிப்பது போல் நடித்துக் கொண்டிருந்தது அப்பா சிங்கம்.

'ஹா... ஹா... வேணாம்பா... இனிமே தப்பு பண்ண மாட்டேன்...' - சுற்றிச்சுற்றி ஓடி வந்தது குட்டி. அப்பா சிங்கமோ விடுவதாயில்லை. தன் முன்னங்கால்களால் குட்டியை எட்டிப் பிடித்தது. தன் தாடியை வைத்துக் குட்டிச் சிங்கத்தின் முகத்தில் தேய்த்தது.

'ஹா... ஹா... ஹா... ஹோ.... ஹோ... கூசுதே... விட்டுடுப்பா... இனிமே அம்மாவுக்குத் தெரியாமல் குளத்துக்குப் போகமாட்டேன்... ஹா... ஹா...', அப்பா சிங்கம் தன் தாடியால் கிச்சுகிச்சு மூட்டுவதைத் தாங்க முடியவில்லை குட்டியால். கூச்சத்தில் நெளிந்துகொண்டே வயிறு வலிக்கச் சிரித்தது.

'எத்தனை முறை சொல்லியிருக்கேன்? பெரியவங்க துணை இல்லாமல் குளத்துக்குப் போகக் கூடாதுன்னு. குளத்தில் இருக்கும் முதலைகிட்டே மாட்டிக்கிட்டால்...? உன்னை அது தின்னுடுமே... அது அம்மாவுக்கும் அபபாவுக்கும் எவ்வளவு கஷ்டம்... உன்னைப் பிரிஞ்சு எங்களால வாழ முடியுமா? இனிமே குளத்துக்குப் போவியா..? போவியா..?' அப்பா சிங்கம் மறுபடியும் தன் தாடியால் கிச்சுகிச்சு மூட்டியது.

'அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இது நல்ல விளையாட்டுதான்...' மரத்தடியில் உட்கார்ந்திருந்த அம்மா சிங்கம் புன்னகைத்துக் கொண்டது.

குட்டிச் சிங்கம் சரியான வால். அப்பா, அம்மா பேச்சைக் கேட்பதில்லை. அங்கும் இங்கும் ஓடிக் கொண்டே இருக்கும். கரடிக் குட்டியுடன் சேர்ந்துகொண்டு காட்டைச் சுற்றும். ஒருமுறை முள்ளம்பன்றியிடம் வால்தனம் செய்து உடம்பெல்லாம் கீறலுடன் வீட்டுக்கு வந்தது. வால்தனம் செய்யும் போதெல்லாம் அப்பா சிங்கம் பிரம்பை எடுத்து விளாசும். அப்போதெல்லாம் 'அப்பா... விட்டுடுப்பா... தெரியாமல் செஞ்சுட்டேன்...' என்று குட்டி கெஞ்சும.

வாங்கிய பிரம்படியில் குட்டிக்கு உடம்பெல்லாம் வீங்கியிருக்கும். இரவெல்லாம் குட்டி வலியால் அழும். அப்போதெல்லாம் அப்பா சிங்கத்துக்குப் பாவமாய் இருக்கும். எல்லாம் ஒரு நாள்தான். மறுநாள் சிறுத்தையுடன் சேர்நது, குட்டி மரத்தில் ஏற முயலும். கீழே விழுந்து அடிபட்டு, அழுதுகொண்டே வந்து நிற்கும். மறுபடியும் அடி விழும்.

ஒருநாள் இரவு. குட்டி அடி வாங்கிக் கொண்டு வலியில் அழுதது. அதற்கு வேடிக்கை காட்டத் தன் தாடியை வைத்து, அதன் முகத்தில் கிச்சுகிச்சு மூட்டியது அப்பா.

உடனே அழுகையை மறந்து, கூச்சத்தில் நெளிந்துகொண்டே குட்டி கெஞ்சியது 'ஹா... ஹா.... அப்பா விட்டுடு... கூசுது... ஹி... ஹி...' அப்பா விடவில்லை. இன்னும் தாடியை வைத்து, தேய்த்துவிடத் தொடங்கியது.

'ஹா.... ஹா... ஹா...' என்று சிரித்துக்கொண்டே எழுந்து ஓடியது குட்டி. அப்பா விடவில்லை. துரத்திச் சென்று கிச்சுகிச்சு செய்தது.

'இனித் தப்பு செய்வியா? இனி பேட் ஃபிரெண்ட்ஸ்கூடச் சேருவியா?'

'ஹா... ஹா.... சேர மாட்டேன்...'

'இனி அப்பா, அம்மா சொல்றதைக் கேட்பியா?'

'கேட்கிறேன்... கேட்கிறேன...'

அந்த நேரத்தில்தான் அப்பாவுக்கு, அந்த யோசனை தோன்றியது. அடித்தால் வலிக்கும். இரவில் குட்டி வலியில் அழும். இனி அடிக்காமல் கிச்சுகிச்சு பண்ணிதான் இந்த வால் பயலைத் தண்டிக்கணும். அன்றிலிருந்து குட்டி செய்யும் வால்தனங்களுக்கு அடி விழுவதில்லை. கிச்சுகிச்சுதான் தண்டனை. அடிகளுக்குக்கூட அஞ்சாத குட்டி, கிச்சுகிச்சுவுக்கு பயந்தது. அன்றிலிருந்து அதன் வால்தனம் குறையத் தொடங்கியது. இது நடந்து சில வாரங்கள் ஓடியிருக்கும்.

ஒருநாள் சிறுத்தை மரம் ஏறுவதற்குக் குட்டிச் சிங்கத்தைக் கூப்பிட்டது. 'ஐயோ... நான் மாட்டேன்பா... அப்பாவுக்குத் தெரிந்தால் கிச்சுகிச்சு பண்ணு வாரு...' என்று மறுத்தது குட்டி.

'கிச்சுகிச்சா... அப்படின்னா...?' சிறுத்தைக் குட்டி கேட்டது.

'என் அப்பா தன் தாடியை என் மூஞ்சியிலே வெச்சுத் தேய்ப்பார். அடிகூடப் பரவாயில்லே... கிச்சுகிச்சுதான் தாங்க முடியலே...' என்றது. சிறுத்தை நேராகத் தன் அப்பாவிடம் போனது.

'அப்பா... இனிமே நான் தப்பு செய்தால் அடிக்கக் கூடாது. ஒன்லி கிச்சுகிச்சு பனிஷ்மெண்ட்தான். ஓகே..?' என்றது. அப்பா சிறுத்தை விவரம் புரியாமல் விழித்தது. 'என்னடா கண்ணா விஷயம்?' என்று விசாரித்தது. குட்டிச் சிங்கத்தைப் பற்றி சிறுத்தைக்குட்டி சொன்னவுடன், 'கண்ணா... சிங்கத்துக்குத் தாடி இருக்கு. கிச்சுகிச்சு பண்ணுது. எனக்குத் தாடி இல்லையே ராசா... நான் என்ன பண்றது?'

'தாடி இல்லேன்னா ஒட்டுத் தாடியாவது வெச்சுக்கோ... ஐ வாண்ட் கிச்சுகிச்சு...' என்று அடம்பிடித்தது. வேறு வழியில்லாமல், தேங்காய் நாரை வைத்துப் பொய்யாய் ஒரு தாடி தயாரித்துக்கொண்டது அப்பா சிறுத்தை. அன்றிலிருந்து, சிறுத்தை ஏதாவது தவறு செய்தால், அப்பா சிறுத்தை குட்டிச் சிறுத்தைக்குப் பொய் தாடியால் கிச்சுகிச்சு மூட்டும்.

குட்டிச் சிறுத்தை கூச்சம் தாங்காமல் 'கெக்கெக்கெக்கே...' என்று 'இழுத்து இழுத்து' சிரிக்கும். சமயங்களில் சிரிக்கும் போது, அதன் கண்களில் கண்ணீர்கூட வந்துவிடும்.

இந்தக் கிச்சுகிச்சு தண்டனை அப்பா சிறுத்தைக்கும் பிடித்திருந்தது. அடிகொடுத்தும் அடங்காத குட்டி, கிச்சுகிச்சு என்றவுடன் பயந்து அடங்குகிறதே என்று திருப்தியடைந்தது. கிச்சுகிச்சு தண்டனை பற்றி ஒருநாள் கரடியிடம் சிறுத்தை சொல்ல, கரடியும் ஒட்டுத் தாடி வைத்துக்கொண்டு கிச்சுகிச்சு தண்டனை முறையைப் பின்பற்ற, 'அட இது நல்லா இருக்கே...' என்று நினைத்த

மற்ற விலங்குகளும் பொய்த் தாடியை ஒட்டிக்கொண்டு, தங்கள் குட்டிகள் வால்தனம் செய்தால் தண்டிக்கத் தொடங்கின.

வால்தனம் செய்து அடிவாங்கி அழுத காட்டின் குட்டி விலங்குகள் எல்லாம், இப்போது, கிச்சுகிச்சு தண்டனையால் வாய்விட்டு, 'ஹா... ஹா... ஹா...' என்று சிரிக்கின்றன. முன்பைவிட தன் அப்பா, அம்மாவின் சொல் பேச்சைக் கேட்டுச் சமர்த்தாக நடந்துகொள்கின்றன. காட்டில் இப்போதெல்லாம் எந்தக் குட்டிகளும் அழுவதில்லை.

கொஞ்சம் இருங்கள். யாரோ அழுகிற சத்தம் கேட்கிறதே... அது யார்?

'மத்த விலங்குகளுக்குக் கிச்சுகிச்சு தண்டனை சரிப்படும். நமக்குச் சரிப்படாதுன்னு சொன்னேனே கேட்டியா... இப்ப பாரு... நான் கிச்சுகிச்சு செய்ததால் என் உடம்புல இருக்கிற முள் குத்தி, உன் உடம்பெல்லாம் காயமாகிடுச்சே...' தனது குட்டியின் உடம்பைத் தடவி விட்டபடியே சோகத்துடன் கூறிக் கொண்டிருந்தது முள்ளம்பன்றி.




- 1770 - பாஸ்டன் படுகொலை: பாஸ்டனில் அமெரிக்கர்களுக்கும் பிரித்தானியப் படையினருக் கும் இடையில் கிளம்பிய கலவரத்தை அடுத்து ஐந்து அமெரிக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1793 - பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியாவினால் தோற்கடிக்கப்பட்டன.
- 1824 - பிரித்தானியர் பர்மாவின் மீது போர் தொடுத்தனர்.
- 1940 - சோவியத் உயர்பீடம் 40,100 போலந்துப் பிரஜைகளுக்கு மரணதண்டனை அளித்து கையொப்பமிட்டது.
- 1964 - இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.
- 2008 - இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார்.

**பிறப்புக்கள்**

- 1871 - ரோசா லக்சம்பேர்க், மார்க்சிய மெய்யியலாளர் (இ. 1919)
- 1886 - டொங் பிவு (Dong Biwu), சீனக் கம்யூனிஷ் கட்சியின் முக்கிய உறுப்பினர் (இ. 1975)
- 1934 - Daniel Kahneman, நோபல் பரிசு பெற்ற ஷ்ரேலியர்
- 1973 - த. ஜெயசீலன், ஈழத்து எழுத்தாளர்

**இறப்புக்கள்**

- 1878 - ரி. சின்னத்தம்பி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஈழத்துப் புலவர்
- 1953 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (பி. 1878)
- 1966 - அன்னா அக்மதோவா, ரஷ்யக் கவிஞர் (பி. 1889)

# இலங்கைக்கு படைகளை அனுப்ப ராஜீவ் தனித்து முடிவெடுக்கவில்லை

## சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு

(டில்லி)

**இலங்கைக்கு இந்தியப் படைகளைஅனுப்பும் முடிவை முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தனி ஒருவராக எடுக்கவில்லை என்று பாரதீய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.**

டில்லியில் ஏஎன்ஐ செய்தியாளரிடம் இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"ராஜீவ் காந்தி கொலையாளிகளை தமிழ்நாடு அரசாங்கம் விடுவிக்க எடுத்துள்ள முடிவு பொறுப்பற்றதும், அரசியலமைப்புக்கு முரணானதுமான நடவடிக்கை.

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதுவதை விட வேறு வேலை இல்லை.

இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்ப ராஜீவ் காந்தி மட்டும் தனித்து முடிவெடுக்கவில்லை. அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தீர்மானத்தின் படியே



இந்தியப் படைகள் அங்கு அனுப்பப்பட்டன.

ராஜீவ் காந்தி கொலையாளிகளை விடுவிக்க முனைபவர்கள் தேசியத்துக்கு எதிரானவர்கள்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## அரசு வெள்ளையர்களின் உற்பத்திக்கு சந்தையை ஏற்படுத்தி கொடுக்கின்றது

### அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக அரசாங்கம் வெள்ளையர்களின் உற்பத்திகளை விற்பனை செய்ய சந்தையை ஏற்படுத்தி கொடுப்பதாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பத்தரமுல்லை - பெலவத்தையில் உள்ள முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்கும் பல நாடுகள் உள்ளன. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் விவசாயிகளுக்கு பெருமளவில் நிவாரணங்களை வழங்கி வருகின்றன.

விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்கினால் அது அனைத்து துறைகளிலும் சாதகமான நிலைமையை ஏற்படுத்தும்.

இதனால் ஏற்படும் பயன்கள் நாடு முழுவதும் பகிர்ந்து செல்லும். உணவு உற்பத்திக்கு நிவாரணத்தை வழங்கியே ஆக வேண்டும். அந்த நிவாரணங்களை குறைக்கக்கூடாது எனவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ)

## சீனாவில் திடீரென சுழற்றி அடிக்கும் மணல் புயலால் பொதுமக்கள் பாதிப்பு

(சென்ஜியான்)

சீனாவில் திடீரென சுழற்றி அடிக்கும் மணல் புயலால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அந்நாட்டின் வடமேற்கு பகுதியான சென்ஜியான் என்ற இடத்தில் விநாடிக்கு 30 கி.மீ வேகத்தில் மணல் புயல் வீசியது. பெரும்பாலும் இடங்களில் 200 கி.மீ தொலைவில் உள்ள பொருட்கள் தெரியாத அளவிற்கு புயலின் தாக்கம் இருந்ததால் வாகனங்கள் மெதுவாக சென்றன. ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டன.

இதனால் ஆரம்பம் மற்றும் இடைநிலை பாடசாலைகளுக்கு விடு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. மணல் புயல் காரணமாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (இ)





## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 652

Search for people, places and things Nagendram Home


அருள்ராஜ்



வினேஸ்



கலையரசி





சந்துரு



விக்னேஸ்




கீதா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவோம்

## அமெரிக்கா விடாப்பிடி



**ஜெ**னிவா தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து வகையான அழுத்தங்களையும் மேற்கொள்வோம் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி, அமெரிக்கா-இலங்கைக்கு இடையிலான முதலாவது கூட்டு கலந்துரையாடல் நடந்த பின்னர, இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள், தொடர்பான அமெரிக்க நிலைப்பாடுகளை விளக்கும் வகையில் இந்தியாவின் India Abroad வார இதழுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.

**கேள்வி:-கடந்த சில மாதங்களில், குறிப்பாக செயலர் ஹெறி இலங்கைகான பயணத்தை மேற்கொண்ட பின்னர, நீங்கள் அனைவரும் இலங்கை மீது தங்களது கவனத்தைக் குவித்துள்ளீர்கள். இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கோட்பாடு மாற்றமடைந்துள்ளது. உங்களது மாற்றமானது நிலைத்திருக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா? இலங்கையின் மீளிணக்கப்பாட்டு முயற்சிகள் தொடர்பில் நீங்கள் நம்பிக்கை கொண்டுள்ளீர்களா?**

பதில்:-முதலாவதாக, இலங்கை அரசாங்கத்தால் தற்போது முன்னெடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது. தற்போதைய சூழலானது இலங்கையர்கள் தமது கடந்த காலத்தை விடுத்து, எதிர்காலத்தில் தமது வாழ்வானது சிறந்ததாகவும் செழுமை மிக்கதாகவும், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குமான வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதை உணர்வதற்குத் தலைப்பட்டுள்ளனர் என்பதை நாம் கண்டறிந்தோம்.

அமெரிக்கர்களாகிய நாங்கள் இலங்கையின் சமாதானம், மீளிணக்கப்பாடு மற்றும் நிலையான செழுமையை நோக்கிய பயணத்தில் முழுமையானதொரு பங்காளியாக இருக்க விரும்புகிறோம்.

**கேள்வி:-இலங்கையின் மீளிணக்கப்பாட்டு முயற்சிகள் தொடர்பில் அமெரிக்கா எத்தகைய உதவிகளை மேற்கொளளத் திட்டமிட்டுள்ளது?**

பதில்:-நாங்கள் ஏற்கனவே இலங்கைக்கு எமது உதவிகளை வழங்கி வருகிறோம். குறிப்பாக எமது தொழில்நுட்ப உதவிகள் மூலம் இலங்கை ஆட்சியைப் பலப்படுத்தவும் பொறுப்புக்கூறல் பொறிமுறை மற்றும் வெளிப்படைத் தன்மை பொறிமுறைகள் போன்றவற்றை இலங்கை பலப்படுத்துவதற்குமான ஆதரவுகளை நாம் வழங்கி வருகிறோம். இலங்கை தனது நாட்டில் நிலவும் ஊழல்களைக் களைவதற்கான பல்வேறு ஆணைக்குழுக்களை உருவாக்குவதற்குத் தேவையான நீதிச் சேவையை பலப்படுத்துவதற்கு நாங்கள் எமது உதவிகளை வழங்கியுள்ளோம்.

இதற்கப்பால், இலங்கையர்களின் பொருளாதார அவாக்களை முதன்மைப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம். கடந்த ஆண்டு அமெரிக்காவின் சவால்களுக்கான அமைப்பானது இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்குப் பரிந்துரைத்துள்ளது. இத்திடடம் சிறப்பாக இடம்பெறும் போது இலங்கையர்களின் பொருளாதாரமும் மேம்படுவதற்கான வாய்ப்புக் காணப்படும்.

இது தவிர, இலங்கை அரசாங்கத்துடன் இணைநது வர்த்தக மற்றும் முதலட்டுத் திட்டங்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சி நிரல்களையும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். இதன்மூலம் இலங்கையின் வடக்கு மற்றும் தெற்கிலுள்ள மக்கள் அனைவரும் அதிகம் பயனடைவார்கள்.

ஜனவரி 08 இல் இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், முதன் முதலாக இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்ட அனைத்துலக நாடுகளின் தலைவராக இந்தியப் பிரதமர் மோடி விளங்குகிறார். இவர் இலங்கைக்கான தனது பயணத்தின் போது இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதாக வாக்களித்திருந்தார். இதே போன்று எமது ஐரோப்பிய நண்பர்கள், பிரித்தானியா, ஜப்பானிய நண்பர்கள் மற்றும் பலர் இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதில் ஆர்வமாக உள்ளனர். ஒட்டு மொத்தத்தில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதில் அனைத்துலக சமூகம் முழுவதுமே ஆர்வமாக உள்ளது.

**கேள்வி:-இலங்கையின் வெளிப்படைத் தன்மை மற்றும் நீதிச் சேவை சீர்திருத்தம் போன்ற விடயங்களில் அமெரிக்க மற்றும் ஏனைய சட்டவாளர்கள் இலங்கையிடம் ஆலோசனை வழங்குவதற்குத் தயாராக உள்ளனரா? இலங்கையின் நிலையான அபிவிருத்தியில் அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க அமைப்பானது (USAID) தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளதா?**

பதில்:-ஆம். இலங்கையின் நீதிச் சேவை மற்றும் ஏனைய விடயங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவது தொடர்பில் நாங்கள் எமது தொழில்நுட்ப வல்லுனர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு தயாராக உள்ளோம். அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க அமைப்பானது தனது நிகழ்ச்சி நிரலை விரிவுபடுத்தியுள்ளது.

ஆசியாவிற்கான உதவிச் செயலர் ஜோன் ஸ்ரிவேர்ஸ் அண்மையில் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதனமூலம் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் எவ்வாறு அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும் என்பதை அவர் கண் டறிந்திருப்பார் என நான் நம்புகிறேன். நான் உட்பட அமெரிக்காவின் கீழ் நிலைச் செயலர் ரொம் சனோன், ஐ.நாவுக்கான அமெரிக்காவின் வதிவிடப் பிரதிநிதி சமந்தா பவர் மற்றும் செயலர் ஜோன் ஹெறி போன்றவர்கள் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளோமம.

**கேள்வி:- மீளிணக்கப்பாட்டு முயற்சிகள் தொடர்பில், தான் சுயாதீனமாக இயங்கவுள்ளதாக இலங்கை அறிவித்துள்ளது. அதாவது தனது செயற்பாடுகளில் அனைத்துலகின் பங்களிப்போ அல்லது தலையீடோ தேவையில்லை எனத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன?**

பதில்:-முதலாவதாக, ஜெனீவாவில் கடந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை முதன் முதலாக இணை அனுசரணை வழங்கியிருந்தது. இதற்காக நாங்கள் இலங்கையுடன் இணைந்து பணியாற்றினோம். நாங்கள் இந்தத் தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அமுல்படுத்துவதற்கான அனைத்து வகையான அழுத்தங்களையும் மேற்கொள்வோம் என்பதில் உறுதியாக உள்ளோம். இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கை அரசாங்கமானது தனது மீளிணக்கப்பாட்டுச் செயற்பாடுகளை வெளிப்படையாகவும், பாதிக்கப்பட்ட மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினர்களையும் உள்வாங்கி காத்திரமானதொரு நகர்வை முன்னெடுக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

நம்பகமான மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையைத் தரக்கூடிய அதே வேளையில், அனைத்துலக சமூகத்தின் நம்பகத் தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையை இலங்கை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

**கேள்வி:-இலங்கைக்கான தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணத்தை பிரதமர் மோடி மேற்கொண்டிருந்தார். இதேபோன்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னர் முதன் முதலாக இந்தியாவிற்கான பயணத்தையும் இதேபோன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியாவிற்கு முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.**

**இந்நிலையில் கடந்த காலத்தில் சிதைவுற்றிருந்த இலங்கை-இந்திய உறவானது சீர்செய்யப்பட்டுள்ளது என்பதில் அமெரிக்கா திருப்தியடைந்துள்ளதா? ஏனெனில் ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவை மையப்படுத்தியே இலங்கை செயற்பட்டிருந்தது. இதனால் இந்தியா அதிகம் அதிருப்தியடைந்திருந்தது.**

20ஆம் பக்கம் பார்க்க..

## சிறைச்சாலை பேருந்தின் மீது

# தாக்குதல் நடத்தப்பட்ட போது பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யவில்லை

(கொழும்பு)

சிறைச்சாலை பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகள் எதனையும் செய்யவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களான தெமட்டகொட சமிந்த உள்ளிட்ட மூன்று பேர் அழைத்துச் செல்லப்பட்ட சிறைச்சாலை பேருந்துக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறான ஓர் நிலையில் குறித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் உரிய முறையில் செயற்பட்டிருந்தால், துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களை கைது செய்திருக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை நடத்திய இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திவிட்டு மோட்டார் வாகனம் ஒன்றிலும், மோட்டார் சைக்கிளிலும் தப்பிச் சென்ற போது, பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் ஆயுதங்கள் இருந்தும் தப்பிச் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை.

பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலையில், சிறைச்சாலை பேருந்தில் இருந்த சிறைச்சாலை அதிகாரியொருவர் தப்பிச் சென்றவர்கள் மீது 12 தடவைகள் சுட்டுள்ளார்.

இந்த தாக்குதலினால் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் ஒருவருக்கேனும் காயம் ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தாக்குதலிலிருந்து சந்தேக நபர்களை பாதுகாக்கவோ அல்லது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யவோ விசேட பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை திணைக்கள மட்டத்தில் எதிர்காலத்தில் விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## பிரதமர் ரணிலின் விஜயத்துக்காக சீனத் தலைவர்கள் ஆவலுடன் காத்திருப்பு

### சீன பிரதி வெளிவிவகார அமைச்சர்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனாவுக்கான விஜயத்தை சீனத் தலைவர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கு பொருத்தமான காலம் கனிந்துள்ளதாகவும் சீன பிரதி வெளிவிவகார அமைச்சர் லியு சென்மின் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் அபிவிருத்தி வியூகங்கள், சர்வதேச வர்த்தகத் துறையைச் சேர்ந்த மலிக் சமரவிக்கிரம ஆகியோரிடம் சீன பிரதி வெளிவிவகார அமைச்சர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதமளவில் சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். பிரதமரின் விஜயத்தின் மூலம் குறிப்பிடத்தக்களவு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு சீன அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் உள்ளனர். பிரதமர் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கையும் சந்திக்கவுள்ளார்.

மேற்படி சீன விஜயத்தின் போது இலங்கைக்கான சீனாவின் உதவிகள் தொடர்பான ஒத்துழைப்பு உடன்பாடுகளாக சிறுநீரக வைத்திய சாலைகளை அமைத்தல், பட்டுப்பாதை வர்த்தகம் தொடர்பான உடன்பாடுகள், முதலீட்டு வர்த்தகம், சுற்றுலாத்துறை போன்றவை அமையவுள்ளன.

இதேவேளை தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சீன அரசின உதவியுடனான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் ரத்நாயக்க சீன பிரதி வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

இதேவேளை தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் அவர் விளக்கிக் கூறியுள்ளார்.

பிரதமராக கடந்த 2003 ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## உலக வர்த்தக மையம் இடிக்கப்பட்ட இடத்தில் ஆடம்பர ரயில் நிலையம்

அமெரிக்காவின் நியூயோர்க்கில் இரட்டை கோபுரம் என அழைக்கப்பட்ட வர்த்தக மையம் கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 9ஆம்திகதி விமானம் மூலம் மோதி அல்கொய்தா தீவிரவாதிகளால் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டது.

தற்போது அதன் அருகே இரட்டை கோபுரங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஏற்கனவே வர்த்தகமைய கட்டடம் இருந்த இடத்தில் ஆடம்பரமான மிக மதிப்புமிக்க ரயில் நிலையம் கட்டப்பட்டுள்ளது. மிக பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவுமின்றி மிகவும் எளிமையாக ரயில் போக்கு வரத்து தொடங்கப்பட்டது. இந்த ரயில் பாதை நியூயோர்க்கின் சுரங்கப் பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பாதை நியூஜெர்சியையும் இணைக்கிறது.

இந்த ரயில் நிலையம் கட்ட தொடக்கத்தில் 2 பில்லியன் டொலர் மதிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது 3.85 பில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது.

விலை மதிப்பு மிக்க இந்த ரயில் நிலைய கட்டடத்தை ஸ்பெயின்-சுவிட்ஸர்லாந்தின் சாண்டியாசோ கலாட்ராவாவின் ஆக்குலஸ் நிபுணர்கள வடிவமைத்துள்ளனர். (இ)


## களனி கங்கையில் கழிவுகளை கொட்டியதற்காக 250,000 ரூபா தண்டம்

களனி கங்கையில் கழிவுகளை கொட்டியது சம்பந்தமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கில் குற்றவாளியாக இணங்காணப்பட்ட பாதணி தயாரிப்பு நிறுவனத்திடம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் குறித்த நிறுவனம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.(இ)

# இந்தியா-பாக். எல்லையில் சுரங்கப்பாதை கண்டுபிடிப்பு

### தீவிரவாதிகளை அனுப்ப பாகிஸ்தான் கைவரிசை



இந்தியா-பாகிஸ்தான் எல்லையில், 30 மீற்றர் நீள சுரங்கப்பாதை கண்டுபிடிக்கப்பட்டது. தீவிரவாதிகளை இந்தியாவுக்குள் அனுப்பும் பாகிஸ்தானின் கைவரிசையாக இது இருக்கலாம் என கருதப்படுகிறது.

இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லையில், ஜம்மு மாவட்டத்தின் ஆர்.எஸ்.புரா பகுதியில் இந்திய எல்லை பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு ரோந்து பணியில் ஈடுபட்டனர். ஓரிடத்தில், புதர்களை அகற்றியபோது, அங்கு சுரங்கப்பாதையின் ஒரு முனை இருப்பதைக் கண்டுபிடித்தனர.

அந்த சுரங்கப்பாதையின் மறுமுனை, பாகிஸ்தானில் இருந்து தொடங்குவதையும் அறிந்து அதிர்ச்சி அடைந்தனர். இந்திய பகுதியில் வெளியேறும் பகுதி இன்னும் முழுமையாக வெட்டப்படாமல் இருந்தது.

ஜே.சி.பி. உதவியால், சுரங்கப்பாதையை வெட்டி இருப்பதும் தெரியவந்தது. ஒரு ஆள், எளிதாக சென்று வரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

சுரங்கப்பாதை ஆங்கில 'எல்' வடிவத்தில் உள்ளது. 30 மீற்றர் நீளமும், 12 அடி ஆழமும், 4 அடி அகலமும் கொண்டதாக உள்ளது.

தீவிரவாதிகளை இரகசியமாக இந்தியாவுக்குள் அனுப்பி வைப்பதற்காக, பாகிஸ்தான் இராணுவமும், அந்நாட்டு எல்லைப்படையினரும் இணைந்து இந்த வேலையைச் செய்திருக்கலாம் என கருதப்படுகிறது.

சுரங்கப்பாதை பற்றிய தகவல் அறிந்தவுடன், எல்லை பாதுகாப்பு படையின்ஜம்மு சரக ஐ.ஜி. ராகேஷ் சர்மா, அங்கு நேரில் சென்று பார்வையிட்டார். அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்ட தகவல்களை தெரிவித்தார்.

மேலும், இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, கொடி சந்திப்புக்கு பாகிஸ்தான் எல்லை படையினரை அழைத்த போது, அவர்கள் வர மறுத்து விட்டதாகவும் ராகேஷ் சர்மா கூறினார். சம்பந்தப்பட்ட இடம், சர்ச்சைக்குரிய இடம் என்று அவர்கள் கூறியதாகவும் தெரிவித்தார். (இ)

# செய்தித்துளிகள்

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயம்

வெலிக்கடை, ஒபேசேகரபுரவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகத்தை மறைக்கும் தலைக்கவசங்களை அணிந்து, மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மாத்தறையை சேர்ந்த நபர் ,கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தில் ஐந்துபேர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து கல்லடி பாலத்திற்கு அருகில்,நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கி பயணித்த ஆட்டோவும், எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. (இ)

## பாதுகாப்பற்ற குழியில் விழுந்து சிறுமி மரணம்

மாரவில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மரதவெல, தீபசேவா என்ற இடத்தில் தனது சகோதரன் மற்றும் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த 13 வயது சிறுமி ஒருவர் பாதுகாப்பற்ற நீர் நிரம்பிய குழியில் விழுந்து பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம்மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிடோன் காமின் கோமஸ் என்றசிறுமியேஇவ்வாறு பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (இ)

## மோட்டார் குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு வவுணதீவுப் பொலிஸ் பிரிவிலுள்ள வயல்வெளியிலிருந்து ஆயுதங்கள் சில நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுணதீவுப் பொலிஸ் பிரிவிலுள்ள பன்சோலை பிரதேசத்தில் உழவர் ஒருவர் இந்த ஆயுதங்கள் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த இடத்துக்குச் சென்ற வவுணதீவுப் பொலிஸார் அங்கு கிடந்த ஆயுதங்களை மீட்டெடுத்துள்ளனர்.

81 ரக மோட்டார் குண்டுகள் இரண்டு மற்றும் வாகனங்களை அழிக்கும் குணடு ஆகியவையே மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (இ)

## பெருமளவான பணம் கொள்ளை இனந்தெரியாதோர் கைவரிசை

ஜா-எல பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றின் ஊழியர் ஒருவர் செலுத்துவதற்காக எடுத்துச் செனற 15 இலட்சம் ரூபா பணம் நேற்று நண்பகல் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென றுள்ளனர்.

பணத்தை எடுத்துக்கொண்டு வாகனத்தை நோக்கி சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள், பணத்தை வைத்திருந்த நபரை தாக்கி விட்டு பணத்தை கொள்ளையிட்டுள்ளனர்.

கொள்ளையர்களின் தாக்குதலில் காயமடைந்த நபர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பணத்தை கொள்ளையிட்டவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. ஜா-எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பாராளுமன்ற செயற்குழுவின் பிரதானி என்ற புதிய பதவி உருவாக்கம்

பாராளுமன்ற செயற்குழுவின் பிரதானி என்ற புதிய பதவி முதற்தடவையாக உருவாக்கப்பட்டுள்ளது. முதலாவது தடவையாக பாராளுமன்ற செயற்குழுவின் பிரதானியாக பாராளுமன்ற பிரதி பொதுச்செயலாளர் நீல் இத்தவல நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும் சலுகைகள் இவருக்கு கிடைக்கப்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழ் சினிமா வரலாறு

113

## பி.டி.சின்னப்பா வராததால், கதாநாயகனாக ஆனார், டி.ஆர்.சுந்தரம்!

இவர்களிடம் பயிற்சி பெற்ற டபிள்யு.ஆர்.சுப்பா ராவ், ஜே.ஜி.விஜயம் ஆகியோர் பிற்காலத்தில் புகழ்பெற்ற ஒளிப்பதி வாளர்களாகத் திகழ்ந்தனர்.

படத்தில் நடிகர்- நடிகைளின் பெயர்களையும் கலைஞர்களின் பெயர்களையும் காண்பிக்கும் டைட்டில் காட்சியில் படத்துக்குப் படம் புதுமையைப் புகுத்தினார். டைட்டில் காட்சிக்கு எவ்வளவு செலவானாலும் கவலைப்படமாட்டார்.

**கட்டுப்பாடு**

டி.ஆர்.சுந்தரம் தமது ஸ்டுடியோவில் கடுமையான கட்டுப்பாடுகளை அமல் நடத்தினார். நடிகைகள் உள்ள பகுதிக்கு நடிகர்கள் போகக்கூடாது.

கதை- வசனம் முழுமையாகத் தயாரான பிறகுதான், நடிகர்- நடிகைகள் யார் என்பது முடிவாகும். நன்றாக ஒத்திகை பார்த்த பிறகுதான் படப்பிடிப்பு தொடங்கும்.

நகைச்சுவை நடிகர்கள் காளி என்.ரத்தினம், டி.எஸ்.துரைராஜ், வி.எம்.ஏழுமலை, ஏ.கருணாநிதி ஆகியோர், இங்கு மாத சம்பளத்துக்கு வேலை பார்த்தனர்.

படப்பிடிப்பு குறிப்பிட்ட திகதியில் தொடங்கி, குறிப்பிட்ட திகதியில் முடிய வேண்டும் என்பதில் சுந்தரம் கண்டிப்பாக இருந்தார்.

நடுத்தரமான படங்களை தயாரித்து வந்த மாடர்ன் தியேட்டர்ஸ், 1941 இல் அதன்முதல் மெகாஹிட் படத்தை வெளியிட்டது. அது தான் பி.யு.சின்னப்பா நடித்த



உத்தமபுத்திரன். தமிழின் முதல் இரட்டை வேடப்படம்.

இதன் பிறகு பி.யு.சின்னப்பா நடித்த தர்மவீரன், தயாளன், யூ.ஆர்.ஜீவரத்தினம் நடித்த பக்தகவுரி, டி.ஆர்.மகாலிங்கம் நடித்த மாயாஜோதி, ஹொன்னப்ப பாகவதர்- டி.ஆர்.ராஜகுமாரி நடித்த சதி சுகன்யா ஆகிய படங்களை சுந்தரம் தயாரித்தார். இவை சராசரிப் படங்கள்.

**மனோன்மணி**

சுந்தரத்தின் அடுத்த மெகாஹிட் திரைப்படம் மனோன்மணி.

1942 நவம்பரில் வெளியான இப்படத்தில் பி.டி.சின்னப்பா, டி.ஆர்.ராஜகுமாரி, டி.ஆர்.மகாலிங்கம், ஆர்.பால சுப்பிரமணியம், என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் என்று பெரிய நட்சத்திரக் கூட்டமே நடித்தது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எழுதிய கதை இது. வசனத்தை டி.வி.சாரி எழுதினார். டி.ஆர்.சுந்தரம் டைரக்ட் செய்தார்.

இதில் வரும் சண்டைக் காட்சியை ஏற்காடு மலையடிவாரத்தில் பிரமாண்டமாக எடுத்தார், சுந்தரம்.

இதில் 2 ஆயிரம் துணை



நடிகர்கள் நடித்தனர். அவர்களுக்கு போர் வீரர்களுக்கான உடை தயாரிக்க நிறைய செலவாகிவிட்டது.

படப்பிடிப்பின்போது இவர்களுக்கு உணவு வழங்க தேவையான சாம்பார் சாதம், தயிர் சாதம் சேலத்தில் தயாரிக்கப்பட்டு பெரிய பெரிய அண்டாக்களில் நிரப்பப்பட்டு, மாட்டு வண்டிகளில் கொண்டு வரப்பட்டன. உணவு பரிமாற நூறு பேர், தண்ணீர் வழங்க 50 பேர் அமர்த்தப்பட்டனர்.

டைரக்டர் டி.ஆர்.சுந்தரம் உட்பட எல்லோருக்கும் ஒரே மாதிரி சாப்பாடுதான்!

போர் வீரர்களாக வேடம் போட்டவர்களுக்கு ஒருநாள் சம்பளம் 3 அணா!

6 கேமராக்கள் பல்வேறு கோணங்களில் போர்க்காட்சியை படமாக்கின.

(தொடரும்)

# ஜெனிவாத் தீர்மானத்தை...

(20 ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

பதில்:- பன்முகப்படுத்தப்பட்ட வெளியுறவுக் கோட்பாட்டையே இலங்கையின் தற்போதைய அரசாங்கம் பின்பற்றுவதானது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். குறிப்பாக தனியொரு நாட்டின் மீது மட்டும் தங்கியிராது அனைத்து நாடுகளுடனும் உறவைப் பாராட்டுவதன் மூலம் இலங்கை தனது நலன்களை அடைந்து கொள்வதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. இதுவே பல்வேறு மாற்றத்தை உருவாக்கியுள்ளது. குறிப்பாக இந்தியாவும் இலங்கையும் பலவேறு நலன்களைத் தமக்கிடையில் பகிர்ந்து கொள்வதற்கான வெளியுறவுக் கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தனியொரு நாட்டின் நலன் சார்ந்த மறைமுக நிகழ்ச்சி நிரலானது இவ்விரு நாடுகளினதும் தற்போதைய உறவில் இருக்காது என அமெரிக்கா நம்புகிறது. ஆனால் இலங்கை தனது அயல்நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதற்கு முயற்சிக்கிறது. இதற்கு நாம் உந்துசக்தியாக இருக்கிறோம்.

**கேள்வி:- நீங்களும் தங்களது மூத்த நிர்வாக அதிகாரிகளும் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் இந்தியா அதிகாரத்துவ நாடாக விளங்குகிறது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். இந்நிலையில் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியிலும் இது தொடர்பில் இந்தியாவுடன் அமெரிக்கா ஆலோசனை மேற்கொள்வது வழமையானதாகும். இதே நிலைப்பாடு தற்போதும் தொடர்கிறதா? எடுத்துக்காட்டாக, அமெரிக்க- இலங்கை புதிய மூலோபாயக் கலந்துரையாடல் தொடர்பாக இந்தியாவுடன் அமெரிக்காவால் ஆலோசனை மேற்கொளளப்பட்டதா?**

பதில்:- அமெரிக்கா மற்றும் இந்தியாவிற்கிடையில் மிகவும் ஆழமானதொரு உறவு காணப்படுகிறது. ஆசிய- பசுபிக் பிராந்தியத்தில், இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் நாங்கள் எமது அனைத்து நலன்கள் சார்ந்த விடயங்களையும் இந்தியாவுடன் கலந்துரையாடுவோம். இந்தியாவுடன் அமெரிக்கர்களாகிய நாங்கள் மத்திய கிழக்கு நிலைப்பாடு தொடர்பாகவும் ஆலோசிப்போம். இதுமட்டுமல்லாது, கிழக்காசியக் கோட்பாடு, ஆபிரிக்கக் கோட்பாடு, தென்னாசிய மற்றும் மத்திய ஆசியக் கோட் பாடு போன்ற அனைத்து நிலைப் பாடுகளையும் இந்தியாவுடன் அமெரிக்கா கலந்துரையாடும்.

நாங்கள் இந்திய தரப்பு அதிகாரிகளுடன் பல்வேறு ஆரோக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்கிறோம். எமது நிலைப்பாடுகள் மற்றும் நாங்கள் இந்த உலகத்தை எவ்வாறு உற்றுநோக்குகிறோம், எமது வேறுபட்ட நிலைப்பாடுகள் போன்ற அனைத்து விடயங்களையும் நாங்கள் இந்தியாவுடன் கலந்துரையாடுவோம்.

**கேள்வி:- இவ்வாறானதொரு நிலைப்பாட்டில், அமெரிக்க - இலங்கை மூலோபாயக் கூட்டு தொடர்பாகத் தாங்கள் இந்தியாவுடன் கலந்துரையாடினீர்களா?**

பதில்:-இந்திய- இலங்கை உறவுநிலையின் நோக்கங்கள் என்ன என்பதை நாங்கள் புரிந்து கொண்டது போன்று, இலங்கையுடனான எமது உறவுநிலை தொடர்பாக இந்தியாவுடன் அமெரிக்கா உரையாடல்களை மேற்கொண்டிருந்தது. குறிப்பாக மூலோபாயக் கூட்டு தொடர்பாக நாங்கள் கலந்துரையாடியுள்ளோமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது இலங்கையுடனான எமது முதலாவது கலந்துரையாடலாகக் காணப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே இந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றி நடைபோடும் என்பதை அறிவதில் நான் ஆவலாக உள்ளேன். இது தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது விருப்பாகும்.

**கேள்வி:- அமெரிக்க - இலங்கையின் தற்போதைய புதிய மூலோபாயக் கலந்துரையாடலில் இராணுவத் துறையும் ஒரு அங்கமாக உள்ளதா? இலங்கை அனைத்துலக இராணுவப் பயிற்சிகள், பயிற்சி நிதிகள் போன்றவற்றை முன்னர் பெற்றுள்ளது. இது தவிர, தமிழீழ விடு தலைப் புலிகளின் காலத்தில் இலங்கைக்கு அமெரிக்கா இராணுவ மற்றும் பாதுகாப்பு உதவிகளை அதிகளவில் வழங்கியிருந்தது. அமெரிக்கா மட்டுமல்லாது பல்வேறு நாடுகளும் இலங்கைக்கு உதவின. இந்நிலையில் அமெரிக்கா-இலங்கை மூலோபாயக் கூட்டுக் கலந்துரையாடலில் இராணுவத்துறையும் ஒரு அங்கமாகக் காணப்படுகிறதா?**

பதில்:-நிச்சயமாக, பாதுகாப்புத் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கை பொறுப்புக்கூறல் மற்றும் நீதி போன்றவற்றை முதன்மைப் படுத்தி தற்போது பணியாற்றுகின்றது. இதனால் அமெரிக்கா மற்றும் இலங்கைக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் அதன் இராணுவத்துடன் இணைந்து அமெரிக்கா பணியாற்ற விரும்புகிறது.

எமது இரு நாட்டுப் பாதுகாப்புப் படையினர் மத்தியிலும் எப்போதும் தொடர்பு பேணப்படுகிறது. இதேபோன்று இலங்கை அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுகிறது. மனிதாபிமான சேவைகளாக மேற்கொள்ளப்படும் நிலக்கண்ணி வெடியகற்றல் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு போன்றவற்றில் அமெரிக்காவானது இலங்கையுடன் இணைந்து பணியாற்றுகிறது.

இலங்கை இராணுவத்துடன் நாங்கள் அண்மைய் ஆண்டுகளில் மட்டுமல்லாது தொடர்ச்சியாக நாங்கள் காத்திரமானதொரு பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் பகிர்ந்து வருகிறோம். மீண்டும், இலங்கை தன் மீது சுமத்தப்பட்ட போர்க்கால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நோக்கி நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் இந்நிலையில், அமெரிக்கா மற்றும் இலங்கை இராணுவத்தினருக்கு இடையில் ஒத்துழைப்பை மேலும் வலுவாக்குவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது.

மேன்மைக்குரிய அனைத்து சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதய பூர்வமாகவும் செய்யப்பட்டவையே. -ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சொல்லும் செயலும் ஒன்றாகுதல் வேண்டும்

தென் பகுதியில் இருந்தே நல்லிணக்கம் வரவேண்டும் என இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரி கூறிய இச்செய்தி முற்றிலும் உண்மையானது. ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கக் கூடிய மக்களே முதலில் தமது நல்லிணக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இந்தச் செய்தியை இந்த நாட்டின் ஜனாதிபதி கூறியிருப்பதற்குள் இரண்டு உண்மைகள் அடங்கியுள்ளன. அதில் ஒன்று நல்லிணக்கம் என்பது தெற்கிலிருந்து உருவாக வேண்டும் என்பது.

மற்றையது தெற்கிலிருந்து இன்னமும் நல்லிணக்கம் ஏற்படவில்லை என்பது. இந்த இரண்டு உண்மைகளும் ஒரு செய்திக்குள் உள்ளன.

ஜனாதிபதி மைத்திரி கூறிய செய்திக்கமைய தெற்கிலிருந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதி என்ற முறையில் மைத்திரிபால சிறிசேன அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை என்ன? என்ற கேள்வி இவ்விடத்தில் எழுவது நியாயமானதே.

அதாவது, அடிப்படையில் சிங்கள மக்கள் பிழையானவர்கள் அல்ல. அவர்களில் மிகவும் நல்லவர்களும் மற்றையவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு உடையவர்களும் நிறையவே உள்ளனர்.

இருந்தும் சிங்கள அரசியல்வாதிகள் தங்களின் பதவி ஆசைக்காக தமிழ் மக்கள் மீது சிங்களவர்களிடையே வெறுப்பை ஊட்டும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத்து வந்தனர். காலாகாலமாக சிங்கள அரசியல்வாதிகள் மேற்கொண்ட இனவாத பிரசாரங்கள் சிங்கள மக்களிடம் ஆழப்பதிந்து கொண்டது.

இதற்கு மேலாக, பௌத்த பிக்குகளும் இனவாதப் பேயைத் தூண்டுவதில் கடுமையாக நின்றனர். இதன் விளைவாக அவ்வப்போது சிங்களவர்களுக்கு ஏற்படுகின்ற மனிதப் பசிக்கு தமிழ் மக்கள் இரையாகிப் போயினர்.

இந்த உண்மைகள் மத்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய உண்மையையும் ஒப்பிட்டு நோக்குகையில்; தென்பகுதியில் இருந்து நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தென்பகுதி முழுவதிலும் தமிழ் மக்கள் எங்கள் சகோதரர்கள்; அவர்களுக்கும் இலங்கைதான் நாடு; நாங்கள் வருவதற்கு முன்னமே தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்ததற்கான வரலாறுகள் உண்டு; பேரினவாத அரசியல்வாதிகளால் – சிங்கள, தமிழ் உறவுகள் பாதிப்படைந்தன இத்தகையதொரு துர்ப்பாக்கிய நிலைமை எங்கள் நாட்டுக்குப் பங்கமானது.

எனவே, சிங்கள – தமிழ் – முஸ்லிம் உள்ளிட்ட இலங்கையில் வாழும் அத்தனை இனங்களுக்கும் சொந்தமான இலங்கையில் நாம் அனைவரும் சகோதரர்களாக வாழ்வதற்கு ஒன்றிணைவோம். இது சிங்கள பௌத்த நாடல்ல. மாறாக பல்லின மக்கள் வாழும் இலங்காபுரி.

எனவே, இனிமேலாவது தமிழ் மக்களுக்கு எதிரான போக்கை சிங்கள மக்கள் கைவிட்டு தமது இன நல்லிணக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இப்படியானதொரு பிரசாரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வது அவசியம்.

அப்போதுதான் தென்பகுதி மக்களிடம் மனமாற்றம் ஏற்பட்டு இன நல்லிணக்கம் உருவாகும்.

இதை செய்வதற்கு ஜனாதிபதிக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதால் அதை அவர் செய்தாக வேண்டும்.

## குடிநீர் விநியோகம் தற்காலிக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் பிரதான நீர்விநியோகக் குழாயில் ஏற்பட்டுள்ள உடைவு காரணமாக திருத்த வேலைகள் இடம்பெறுவதால் பிரதான தாங்கியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற குடிநீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

திருந்த வேலைகள் விரைவாக நடைபெற்று முடிவடைந்ததும் நீர் விநியோக செயற்பாடுகள் வழமைக்கு திரும்பும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (செ)

## சிற்றூர்தி சேவை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு யாழ்ப்பாணம்– காங்கேசன்துறை வரையான 769 பயணிகள் சிற்றூர்தி சேவை இடம்பெறவுள்ளதாக சிற்றூர்தி சேவைச் சங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்புரைக்கமையவே இப்போக்குவரத்துச்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

769 சேவையானது யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி, கொக்குவில், கோண்டாவில், இணுவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கீரிமலை என அமையவுள்ளது. (இ-5)

# ரஷ்யக் கப்பல் கொழும்பில்

(கொழும்பு)

ரஷ்யக் கடற்படையின் கருங்கடல் கப்பல்படையின் மீட்புக் கப்பலான எப்ரோன், நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்துக்கு ரஷ்யப் போர்க்கப்பல் வந்தடைந்த போது கடற்படையினர் அதனை வரவேற்றனர்.

சுமார் 90 மீற்றர் நீளம் கொண்ட இந்த ரஷ்யக் கடற்படைக் கப்பலில், 138 மாலுமிகள் பணியாற்றுகின்றனர்.

இன்று மாலை வரை கொழும்புத துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ள இந்தப் போர்க்கப்பலின மாலுமிகள், கொழும்பு, கண்டி, காலி நகரங்களைச் சுற்றிப் பர்ர்வையிட்டு வருகிறனர்.

இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியான கப்டன் டெனிஸ பேர்க்ஸ் நேற்று முன்தினம் கடற்படைத் தளபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். (செ-12)

## நல்லூரில் யோகா பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர்த் தேரடி அருகே அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் யாழ். யோகா அரங்கத்தினர் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றனர்.

இதற்கான அறிமுக நிகழ்வுநாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் கந்தையா சோதிதாசன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நா.நவராஜ் அவர்கள் ஆளுமை மேம்பாட்டுக்கான யோகா வழிமுறைகள் எனும் தொனிப்பொருளில் விசேட விரிவுரையை வழங்குவார்.

இவ்யோகா பயிற்சிநெறியானது காலை 6.00 – 7.00 மணிவரையும் மாலை 5.00 – 6.00 மணிவரையும் மாலை 6.00 – 7.00 மணிவரை மூன்று பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

வைத்தியர்கள் மற்றும் யோகா நிபுணர்களால் இனங்காணப்பட்ட சிறப்புக்குரிய ஆசனம்,பிராணயாமம்,தியானம் மற்றும் சாந்த வழிமுறைப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசானால் பதஞ்சலி யோக முறையில் நுட்பமாக பயிற்சி வழங்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக யோகா பயிற்சிகள் பெண் ஆசிரியரினால் வழங்கப்படும். நீரிழிவு நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

சான்றிதழ் மற்றும் கையேடுகளும் கொடுக்கப்படும். ஆர்வமுடைய அனைவரும் இணைந்து பயன்பெற முடியுமென்றும் பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர்கள் அறிமுக நிகழ்வில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்றும் யாழ்.யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.(செ)

## 26 வருடங்களின் பின் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் மானம்பிராய் பிள்ளையார் ஆலயத்தில் 26 வருடங்களின் பின்னர் பொங்கல் விழா நடைபெறுவதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வசாவிளான் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அனுமதியுடன் மேற்படி ஆலயத்தில் பொங்கல் விழா நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.(செ-5)

## சிவராத்திரி உற்சவத்துக்கான விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் மகா சிவராத்திரி பூசை வழிபாட்டினை முன்னிட்டு அடியவர்கள் சிரமமின்றி வழிபாட்டிற்கு செல்வதற்காக நாளை மறுதினம் 7-ம் திகதி யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பயணிகளின் வருகைக்கு ஏற்ப விசேட பேருந்துகள் சேவையாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் மன்னார், திருக்கேதீஸ்வரம் செல்லும் அடியவர்கள் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் ஆசன முற்பதிவினை செய்து தமது பயணத்தினை இலகுவாக மேற்கொள்ள முடியும். மேலும் கிராமப் புறங்களில் இருந்து மன்னார் திருக்கேதீஸ்வரம் செல்லும் அடியவர்கள் தாம் ஒரு குழுவாக ஒன்றிணைந்து இ.போ.ச சாலைகளில் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களது இடத்துக்கு எமது பேருந்தினை அனுப்பி மன்னார் திருக்கேதீஸ்வரம் சென்று மீண்டும் அவர்களது உரிய இடத்தில் சேர்க்கப்படுவார்கள்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு யாழ். சாலை தொலைபேசி இலக்கம் 021 222 2207மற்றும் 077 105 8150 என்ற கையடக்க தொலைபேசி இலக்கத்துக்கும் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்.இ.போ.ச சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (செ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் யாழ்.பிரதேசத்தில் உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பராக்கல்லூரி, இராமநாதனவீதி, அரசடிவீதி, வைமன வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து A9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, சுண்டிக்குளி, பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ்.மாவட்டச் செயலாளர் அலுவலகம், பெனிசுலா புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிட்டட் (துளசி மகால்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞானபீடம், றக்கா வீதி பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், US ஹோட்டல், பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம் (இ.மி.ச) ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் வவுனியா புகையிரத வீதி பிரதேசம், வவுனியா HNB, தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தைவரை, மாமடுவிலிருந்து பொகஸ்வேவ வரை, CEC கல்லுடைக்கும் ஆலை, சின்னவலயன் கட்டு, யூனியன் அசூரன்ஸ், தொழிலநுட்பக்கல்லூரி, ராஜ் தொழிறசாலை, AMT சிலோன் பிறைவேற் லிமிட்ட், ஓமந்தை நெற் நெதேர்ண் பார்ம், ICT, ஓமந்தை வலைத்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முசலிப் பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக்கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாசசிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்ட முசலி, மறிச்சுக்கட்டி, கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



யார் உங்களுக்கு வலிமை தருவார்கள்? வலிமை, வலிமைதான் நமக்கு இப்போது தேவை. வலிமை பெறுவதற்கான முதற்படி உபநிடதங்களை அடைந்து நான் ஆன்மா என்று நம்புவதுதான்.

இதுவல்லவா வலிமை, இதுவல்லவா வலிமை. நண்பர்களே, என்நாட்டு மக்களே, உபநிடதங்களை அதிகம் படிக்கப் படிக்க நான் உங்களுக்காக அதிகம் கண்ணீர் சிந்துகிறேன். வலிமை, வலிமை, நாம் வலிமை பெறுவதற்கான செயல்முறை வழி அவற்றுள் சொல்லப்பட்டிருக்கிறது.

முதலில் நமது இளைஞர்கள் வலிமை பெற்றவர்களாக வேண்டும். மத உணர்ச்சி அதற்குப் பின்னரே வரும். என் வாலிப நண்பர்களே, வலிமை பெறுங்கள்.

நீங்கள் கீதையைப் படிப்பதைவிட காற்பந்தாடுவதன் மூலம் சொர்க்கத்திற்கு மிக அருகில் செல்லமுடியும். இவை தைரியமான வார்த்தைகள். இருப்பினும் இவற்றை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன். பிரச்சினை எங்கு என்பது எனக்குத் தெரியும். எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. உங்கள் கைகால் தசைகளில் இன்னும் கொஞ்சம் வலிமை சேர்ந்தால் கீதையை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

# தமிழ் தேசிய வீரன் தாஸ் ஞாபகார்த்த உதைபந்து போட்டி

## பலாலி விண்மீன் வெற்றி







தமிழ் தேசிய வீரன் தாஸ் நினைவாக வடமாகாணத்தின் சிறந்த 16 அணிகளுக்கான விலகல் முறையிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கழுகுகள் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

போட்டியில் பலாலி விண்மீன் எதிர் தீவகம் மெரிஞ்சி முனை அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களை பெற்றன.

இறுதியில் தண்ட உதை மூலம் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்று சுற்றுக்கு முன்னேறியது.

ஆட்டநாயகனாக ஜோன் கெனடி தெரிவு செய்யப்பட்டார்.

இடம்பெற்ற முதலாவது போட்டியில் யங்கம்பன்ஸ் வி.க.எதிர் ஆதி சக்தி வி.க. மோதியது. இதில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் எந்தவிதமான கோல்களும் பெறப்படவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக ஆட்டம் நடுவர்களால் இடைநிறுத்தப்பட்டது.

போட்டிக்கு பிரதம விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், சிவன் பவுன்டேசன் ஸ்தாபகர் வேலாயுதம் கணேஷ்வரன் மற்றும் ரெலோ முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (க)

# கிளிநொச்சி வலய மட்ட சதுரங்கப் போட்டிகள்

கிளிநொச்சி கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் இன்று 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

இதன்படி, 15 வயதின் கீழ் ஆண், 15 வயதின் கீழ் பெண், 19 வயதின் கீழ் ஆண், 19 வயதின் கீழ் பெண் என நான்கு அணிகளாக இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு அணியிலும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய நான்கு கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களையும் பெறும் அணிகள் வடக்கு மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-277)

# இன்றைய போட்டிகள்

தமிழ்த்தேசிய வீரன் தாஸின் நினைவாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடை பெறும் போட்டியில் நாச்சிக்குடா செ்ன்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். சென் அன்ரனீஸ் விளை யாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ். சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

◆ ◆ ◆

கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கு இடையேயான இருபாலாருக்குமான கபடித் தொடர் இன்று சனிக்கிழமை யங்கம்பன்ஸ் மைதானத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

◆ ◆ ◆

புதுக்குடியிருப்பு கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை புதுக்குடியிருப்பு விசுவமடு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது .

◆ ◆ ◆

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான ஆண், பெண்களுக்கான எல்லே போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் அல்வாய் மனோகரா விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





கரவெட்டி பிரதேச செயலகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தினையும் இரண்டாம் இடத்தினை பெற்ற வதிரி சிறி முருகன் விளையாட்டுக்கழக அணியினரையும் படங்களில் காணலாம்.

# தாச்சிச் சுற்றுப்போட்டி காளியம்பாள் வெற்றி

வைகறை வி.கழகம் நடத்தி வரும் தாச்சித் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் காளியம்பாள் பி அணி வெற்றி பெற்றது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில்தாவடிகாளியம்பாள் பி அணியை எதிர்த்து கோண்டாவில்மறுமலர்ச்சிஅணிமோதிக்கொண்டது. இதில் தாவடி காளியம்பாள் பி அணி 12:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.(க)



தெல்லிப்பழை பிரதேச செயலக 2016 ஆம் வருட பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டியில் சம்பியனாகிய தெல்லிப் பழை கலை ஒளி விளையாட்டுக்கழகத்தை படத்தில் காணலாம்.



உடுவில் பிரதேச செயலக கழகங்களுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற பெண்களுக்கான துடுப்பாட்டத்தில் கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் அணி இறுதிப்போட்டியில் சம்பியனாகியது. அவ் அணியினரை படத்தில் காணலாம்.

## மனித புதைகுழி...

திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் மாதிரி கூற்று பரிசோதனை மற்றும் கால அறிக்கையினை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் பெற்றுக்கொள்ள கால தாமதம் ஏற்படுவதால், இது தொடர்பில் விரைவான அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும் படி நீதிபதி உரிய தரப்பினருக்கு கட்டளையிட்டுள்ளார்.

மன்னார் மாந்தை திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றுக் காலை மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே மன்னார் நீதவான் இவ்வாறு கட்டளையிட்டுள்ளார்.

மன்னார் - மாந்தை, திருக்கேதீஸ்வரம் மனிதபுதைகுழியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகளை, பேரு, ஆஜென்ரினா மற்றும் குவாட்டமாலா ஆகிய மூன்று நாடுகளுக்கும் அனுப்பி கால நிர்ணய அறிக்கையினை பெற்றுக் கொள்ளுவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நடவடிக்கை களை மேற்கொண்டு வந்தனர்.

இருந்தபோதும், குறித்த நாடுகளின் தூதுவராலயங்கள் இலங்கையில் இல்லை எனவும், குறித்த நடவடிக்கைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ளதாகவும், இந்த விடயம் சம்பந்தமான அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதன் பின் குறித்த மாதிரிகளை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மன்னார் நீதிமன்றில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் குறித்த மூன்று நாடுகளின் உதவியை பெறுவதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு தங்களினால் உதவ முடியும் எனவும் தெரிவித்தனர். அதனையடுத்து நீதிபதியின் கட்டளையின் போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் இது தொடர்பான விடயத்தினை, அது சம்பந்தமான உடல்கூற்று பரிசோதனை மற்றும் கால அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் சார்பில் கால அவகாசங்கள் வழங்கப்பட்ட போதிலும், அதில் அசமந்தபோக்கும் ஏற்பட்டுள்ள காரணத்தினால், இந்த விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து ஒரு அரச சட்டவாதியை நியமிக்கும்படியும், அவர் ஊடாக இந்த விடயத்தினை குறித்த மூன்று நாடுகளில் பொருத்தமான ஒரு நாட்டிற்கு அனுப்புவது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும் படியும் நீதிபதி கட்டளையிட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை மீண்டும் அடுத்த மாதம் 4ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக சட்டத் தரணிகளான பிறிமூஸ்சிறாய்வா, ஜெபநேசன்லோகு, எம்.எம்.சபுறுதீன் மற்றும் வீ.எஸ்.நிரஞ்சன், ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-281)

## கைதிகள் குறி...

விடுதலையை வலியுறுத்தி 12 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள். அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முடியாது. அவர்களுக்கு அதிகளவான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அவர்களுடைய விடயம் தொடர்பாக அரச வழக்கறிஞருடன் பேசியுள்ளேன் அவர்களை பிணையிலோ புனர்வாழ்வளித்தோ உடனடியாக விடுதலை செய்யமுடியாது என கூறியுள்ளார்.

எனவே எனது கோரிக்கையின் அடிப்படையில் அவர்களை விடுதலை செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. அரசியல் கைதிகளின் விடயம் தற்போது மிகமுக்கியமானது. எனவே இது தொடர்பாக சட்டமா அதிபருடனும் கதைத்துள்ளேன். அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாக எதிர்வரும் 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளேன். அது வரை அரசியல் கைதிகளை பொறுமையாக இருக்கும்படி கோருகிறேன்.

மேலும் சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகளின் நிலைகுறித்துயாரும் பயம் கொள்ளத்தேவையில்லை. நாங்களும் மனிதாபிமானம் உள்ளவர்கள்தான். அவர்களின உடல்நலன் தொடர்பில் கவனம் எடுக்காமல் இருக்கமாட்டோம். அவர்களின் நிலைகுறித்து தொடர்ந்துஅறிந்துவருகிறேன்.

நான் அறிந்த அளவில் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளஅரசியல் கைதிகளுக்குஉடல்நிலைபாதிப்புக்கள்இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## அரசியல் கைதி...

விடுதலையை வலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். 14 கைதிகளினதும் உடல் நிலை மிகமேசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தண்ணீரை மட்டுமே அருந்தி வரும் இவர்களில் சிலர் நடக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் சிலருக்கு சிறுநீரக பாதிப்பும் ஏற்பட்டுள்ளதாகவும் உறவினர்களூடாக தெரிவித்துள்ளனர்.

பிணையில் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யுமாறு கோரி தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளதாகவும் தமக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லையெனில் சிறைக்குள்ளேயே தமது உயிரை மாய்க்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப் போவதாகவும் அதுவரை அரசியல் கைதிகள் பொறுமையாக இருக்கவேண்டும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## பலாலி விமா...

ச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

வட கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டினை பார்வையிடுவதற்காக நேற்றைய தினம் வருகை தந்திருந்த அமைச்சரிடம் பலாலிவிமான நிலைய விஸ்தரிப்புக்காக பொது மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுமா என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகத்தில் எதிர்ப்பு இல்லாமல் எந்தவிடயமும் நடைபெறுவதில்லை. பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக நாம் மாற்றப் போவதில்லை. ஆனால் அதனை விஸ்தரிப்பு செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இந்த விஸ்தரிப்பு பணிகளுக்காக பொது மக்களின் காணிகளை எடுக்கமாட்டோம். இந்தியாவிலும் இலங்கையிலும் பல வணக்கஸ்தலங்கள் அமைந்துள்ளன. எனவே இரு நாட்டுக்கும் இடையிலான போக்குவரத்தை இலகு படுத்துவதற்காகவே இந்த விமான நிலையத்தை விஸ்தரிப்பு செய்யவுள்ளோம்.

பொதுமக்களின் வேதனைகள் எமக்கு தெரியும். அவர்களின் காணிகளை நாங்கள் எடுக்கமாட்டோம்.

மேலும் நலன்புரிநிலையங்களில் உள்ள மக்களுக்கு இந்த புதிய வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளேன் என அவர் தெரிவிக்கும் போது,

நலன்புரி நிலையங்களில் உள்ளவர்கள் தமது சொந்த நிலங்களில் தான் வீடுகளை கட்டுவதற்கு விரும்புகிறார்கள் என ஊடகவியலாளர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது அதற்கு அவர் சொந்த நிலங்களை மக்கள் அடையாளப்படுத்துமிடத்து அவர்களுக்கு இந்த வீடுகளை கட்டிக்கொடுப்பேன் என தெரிவித்தார். (செ-9)

## வெட்டுக்கிளி தொ...

உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு நேற்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்: மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் இம்முறை பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் பெரும்போக நெற்செய்கையினை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த விவசாயிகள் அறுவடைக்காக காத்திருக்கும் நேரத்தில் தற்போது நெற்பயிர்ச் செய்கையில் வெட்டுக்கிளியின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் பாரிய நஷ்டத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட வறிய விவசாயிகளுக்கு உடனடியாக நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என்பதோடு, எதிர்வரும் காலங்களில் விவசாயிகள் இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து தமது விவசாய நடவடிக்கைகளை பாதுகாக்க அரசு விசேட திட்டங்களை மேற கொள்ள வேண்டும் என செல்வம் எம்பி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## மே-16 தமிழகத்...

அத்துடன், அம்மாநிலங்களின் சட்டசபைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதை அடுத்து, தேர்தல் விதிமுறைகளும் உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி இத்தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதிக்கும், 29ஆம் திகதிக்கும் இடையில் தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்குமான மனுத்தாக்கலைச் செய்யமுடியும்.

வேட்புமனு பரிசீலனை ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. வேட்புமனுவை மீளப்பெற மே மாதம் 2ஆம் திகதி கடைசி நாளாகும்.

முதலமைச்சர் தமிழக அரசின் பதவி காலம் மே மாதம் 22ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தமிழ் அரசியல்...

புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 கைதிகள் கடந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் உண்ணா விரதப் போராட்டமொன்றை ஆரம்பித்தனர். அவர்களது உடல்நிலை தற்போது சிறந்த நிலையில் காணப்படுகின்றது. ஏனென்றால் சிறை மருத்துவர்கள் அவர்களது உடல்நிலை குறித்து அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் கைதிகளில் 6 பேர் மருத்துவர்களின் ஆலோசனைப்படி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின் பின்னர் அவர்கள் மீண்டும் சிறைக்குத் திரும்பியுள்ளனர்.

குறித்த கைதிகளின் வழக்கு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் சிறைச்சாலை திணைக்களம் அதிக கவனத்தை திருப்பியுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து அவர்களது வழக்கு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் விடயங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் அனைத்தும் நீதிமன்ற செயற்பாடு என்பதனால் அதனை விரைவுபடுத்த வேண்டும் என்ற அழுத்தம் எங்களால் பிரயோகிக்க முடியாது. இருப்பினும் சிறைச்சாலை திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள மட்டத்தில் அனைத்து முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. எவ்வாறாயினும் வழக்கு இல்லாதவர்களுக்கு வழக்கு தொடரும்படியும், குற்றச்சாட்டுக்கள் இருப்பின் தண்டனை வழங்குமாறுமே கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றார். (செ-12)

## சர்வதேச விசா...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 31ஆவது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையை மீட்டெடுக்க வன்முறைகளுக்கு பொறுப்பு கூறுவதுதோடு, கடந்த கால வன்முறைகள் மண்டும் ஏற்படாமல் தடுப்பது தொடர்பிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கைக்கு தற்போது சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது,

இலங்கை மேற்கொள்ளும் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது நீதியும் சுதந்திரத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு. இதில் நம்பிக்கையீனங்கள் ஏற்படாதவாறு விசாரணைப் பொறிமுறை அமைக்கப்படுவதை ஐக்கிய நாடுகள் சபை உறுதி செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும்போது நல்லெண்ணத்துடன் செயற்படுவதை உறுதிசெய்ய விரும்புவதாக ஐக்கிய நாடுகள் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் என்ன நடந்தது என்பதை கண்டுபிடிக்குமாறு ஐக்கியநாடுகள் ஊக்குவித்து வருகின்றது, மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்திற்கு விசாரணைகளை மேற்கொள்ளும் அவர்களது முயற்சிகள் குறித்து ஐ.நா என்ன தெரிவிக்கின்றது என்பதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

இலங்கை நல்லெண்ணத்துடன் செயற்படுவதை உறுதிசெய்யவே ஐ.நா விரும்புகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கை யுத்தத்துக்கு பிந்திய மீள் எழுச்சியின் முக்கிய கட்டத்தில் உள்ளது. நல்லிணக்கம் மற்றும் பக்கச்சார்பற்ற பொறுப்புக் கூறும் நடைமுறைகளில் முதலீடு செய்வதன மூலம் நம்பிக்கையை மீள ஏற்படுத்தலாம், கடந்த கால வன்முறைகள் மீள உருவாவதை தவிர்க்கலாம் எனவும் பர்ஹான் ஹக் கூறியுள்ளார். (செ-12)

## குறுக்கே நாய்; இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதிக்கு குறுக்கே நாய் சென்றதால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் நிலை குலைந்து தடுமாறி விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 9.45 மணியளவில் வட்டுக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.

இதில் சித்தன்கேணி சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த இந்திரராசா உமாசுகந்தன் (வயது 33) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

விபத்தானது 9.45 மணியளவில் இடம் பெற்றிருந்த நிலையில் படுகாயமடைந்த நபர் வீதியிலிருந்து மீட்கப்பட்டு இரவு 11.05 மணியளவிலேயே யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-30)

## பேருந்து சாரதி மீது நேற்றுத் தாக்குதல்

(சாவகச்சேரி)

இனந்தெரியாத நபர்கள் தாக்கியதில் தனியார் பேருந்து சாரதி சிறு காயங்களுக்கு உள்ளானதோடு பேருந்துக் கண்ணாடியும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்றிரவு 9 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணமான தனியார் பேருந்து நேற்று இரவு 9 மணியளவில் சாவகச்சேரி நகரப்பகுதியில் சிறிது நேரம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் அங்கு ஏற்கெனவே மறைந்திருந்த 6 பேர் கொண்ட குழுவினர் பேருந்தின் சாரதி மீது சரமாரியாக கல் மற்றும் கொட்டன்களால் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து சென்றுள்ளனர்.

தப்பிச்சென்ற வேளை அங்கு நின்ற பொலிஸாரால் தாக்குதல் நடத்தியதாக சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் செய்யப்பட்டுள்ளதோடு பொலிஸார் தாக்குதல் நடத்தியவர்களையும்தேடிவருகின்றனர். (செ-89)

## காளி கோயிலில்...

லில் தேங்காய் உடைத்து வேண்டுதலை நிறைவேற்றினர்.

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க காளி கோவிலில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் ஜகத் குமார உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன,

நாட்டு மக்கள் சுதந்திரமாக செயற்படக் கூடிய நிலை தற்போது இல்லை. நல்லாட்சி என்று கூறிக்கொண்டு அராஜகம் செய்யும் இந்த அரசாங்கத்துக்கு எதிராக தனது எதிர்ப்பை வெளியிட்டு வரும் ஜகத் குமாரவின் வீடு மற்றும் அவருடைய வாகனங்கள் கடந்த மாதம் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளன.

ஊடகங்களின் மீதான அடக்குமுறை வலுவடைந்துள்ளது. விவசாயிகளுக்கு வழங்கும் உரமானியத்தில் விவசாயிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர். மக்கள் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இவ் விதமான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்று நாங்கள் காளி தெய்வத்துக்கு தேங்காய் உடைத்து வேண்டுதலை நிறைவேற்றினோம்.

மேலும் இந்நாட்டு மக்கள் அனைவரும் தாம் விரும்பிய சமயத்தை பின்பற்றவும் ஊடகங்கள் சுதந்திரமாக செயற்படவும் காளி தெய்வம் ஆசீர்வாதம் வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இங்கு கருத்து தெரிவித்த மேல்மாகாண சபை உறுப்பினர் ஜகத் குமார,

தலவத்துகொடையில் அமைந்துள்ள எனது வீட்டின் மீது கடந்த மாதம் 18 ஆம் திகதி இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டு இருக்கும் இந்த அரசாங்கத்தின் குறைபாடுகளை நாம் சுட்டிக்காட்டியதன் காரணமாக அரசாங்கத்துக்கு எதிரான எம்மை கொலை செய்ய முயற்சி செய்ய முடியாமல் போனமையினால் எமது உடமைகள் மீது தாக்குதல் மேற்கொண்டு பல இலட்சம் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த மரணத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் அரசாங்கத்தால் அனுப்பப்பட்டவர்கள் அல்லது அவர்களால் வழிநடத்தப்படும் நபர்களாவர். இந்த தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை.

நாட்டின் நீதி, சட்டம், பொலிஸாரால் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதால் குற்றவாளிகளுக்கு சரியான தண்டனையை பெற்றுகொடுக்க வேண்டும் என காளி தெய்வத்திடம் வேண்டுதலை மேற்கொண்டுள்ளோம்.

மேலும் விவாசாயிகளின் பிரச்சினை, நாட்டு மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைவிடுத்து ஊடகங்களில முன் வந்து கேளக்கையான விடயங்களை பேசிக்கொண்டு இருக்க வேண்டாம். இல்லாவிட்டால் நாம் நாட்டில் உள்ள அனைத்து கோயில்களுக்கும் சென்று இந்த அரசாங்கத்துக்கு எதிராக தேங்காய் உடைக்க நேரிடும் என்றார். (செ-12)

## வித்தியா கொடூரக்...

ந்து பாடசாலைக்கு செல்வதற்கு ஆயத்தமாகிய வித்தியா, யாருமே அற்ற பற்றைகள் நிறைந்த வீதியூடாக தனது பாடசாலைக்கு செல்கிறாள், பாடசாலை சென்ற வித்தியா பாடசாலை முடிவுற்று வழமையாக வீடு திரும்பும் நேரம் மூன்று மணியாகியும் வீட்டிற்கு அன்றைய தினம் வரவில்லை.

மாலை சென்றும் வித்தியா வீடு திரும்பாததனை அடுத்து வித்தியாவை தேடி உறவினர்கள் பாடசாலைக்கு செல்கின்றனர். அங்கு வித்தியா இல்லை எனக் கூறப்பட அனைவரும இணைந்து வித்தியாவை தேட தொடங்குகின்றனர். மறுநாள் 13ஆம் திகதி காலை தனது தங்கை பாடசாலை செல்லும் வீதியினூடாக வித்தியாவின் மூத்த சகோதரர் தேடி செல்கிறார். அப்போது சகோதரருடன் சென்ற அவர்களின் வீட்டு நாய் வித்தியாவின் சடலத்தை கண்டுபிடிக்கின்றது.

### தொடர்ந்து கைதுகள்

வித்தியாவின் சடலம் கிடைக்கப்பெற்றவுடன் ஊர்காவற்றுறை பொலிசார், கொழும்பிலிருந்து வந்த குற்றப்புலனாய்வு துறை சம்பவம் தொடர்பில் ஊடுருவ ஆரம்பிக்கின்றது. அதனை அடுத்து தொடர்ச்சியாக ஒன்பது பேர் கைதாகின்றனர். வழக்கும் நடைபெற்று வந்தது.

கடந்த 10 மாதங்களாக வழக்கு நடைபெற்றது. மரபணு பரிசோதனைகளுக்காக கடந்த எட்டு மாதங்களாக வழக்கு பெரிதான எந்த முன்னேற்றங்களும் இன்றி சாதாரண மாக நடைபெற்று வந்தது. நடைபெற்றது கொலை தான் என மருத்துவ அறிக்கைகள் கூறிய போதிலும் அதனை நிகழ்த்தியவர்கள் யார்? என்பதனை நிரூபிக்க அனைத்து தரப்பும் முயற்சித்து வந்தன.

### நேற்றைய வழக்கில் திருப்பம்

கடந்த தவணையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த வழக்கு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து விசாரணை அறிக்கைகளையும் சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் கடும் தொனியில் உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவினை அடுத்து மூவர் கைதாகி அதில் இருவரது வாக்கு மூலங்கள் பெறப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கு மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது கொழும்பு கூட்டுக் கொள்ளை குற்றப் புலனாய்வு திணைக்கள பொறுப்பதிகாரி ஐ.பி.நிசாந்த சில்வா தமது விசாரணை முன்னேற்ற அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தார். அதில் பல உண்மைகள் வெளிவந்தன.

### கொலைக்கு இதுதான் காரணம்

இரு காரணங்களால் தான் வித்தியா கொலை கொலை செய்யப்படுவதற்கு காரணம் என சி.ஐ.டி மன்றில் தெரிவித்துள்ளது. சுவிஸ்குமாரின் மைத்துனனான பிரதேச சபையில் பணியாற்றிய சிவதேவன் துஷாந்தன் என்பவர் மாணவி வித்தியாவை ஒரு தலையாக காதல செய்ததாகவும், எனி னும் இதற்கு மாணவி மறுப்பு தெரிவிக்கவே மாணவியை படு கொலை செய்ய திட்டமிட்டதாகவும் சி.ஐ.டி தெரிவித்தது.

அடுத்து, குறித்த கொலை வழக்கின் சந்தேக நபர்களும் சகோதரர்களுமான கோபாலசிங்கம் தவக்குமார், கோபாலசிங்கம் ஜெயக்குமார் ஆகியோர் கொள்ளை சம்பவம் ஒன்றில் ஈடுபட்டிருந்ததாகவும், இவர்களுக்கு எதிராக வித்தியாவின் தாயாரான சிவலோக நாதன் சரஸ்வதி சாட்சி சொல்லியிருந்ததாகவும், இதன் காரண மாகவும் வித்தியாவை படு கொலை செய்ய இவர்கள் உடந்தையாக இருந் துள்ளதாக சி.ஐ.டி தெரிவித்தது.

### கஞ்சா நுகர்ந்துள்ளனர்

வித்தியா கொலை செய்யப்படுவதற்கு இரு நாட்களுக்கு முன்னர் புங்குடுதீவினை சேர்ந்த பதினோராம் சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டவர் மூலமாக வித்தியாவை ஒருதலைக் காதல் செய்த சிவதேவன் துஷாந்தன் கஞ்சா போதைப்பொருளை பெற்றுள்ளார்.

முதலில் மதுபோதையில் இருந்த அனைவரும், பின்னர் கஞ்சாவினை நுகர்ந்த பின்னரே வித்தியாவின் கொலையை கொடூரமாக அரங்கேற்றியுள்ளனர். கொலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகவே வித்தியாவை எவ்வாறு கொலை செய்வது என கொலைகாரர்களால் திட்டம் தீட்டப்படுகின்றது.

### திட்டமிட்டே வித்தியா கொலை அரங்கேறுகின்றது

பாடசாலை செல்லும் வழியில் வித்தியாவை வழிமறிப்பது என்றும், அதன் பின்னர் பற்றைக்குள் கொண்டு செல்வது எனவும் திட்டத்தை வகுத்துள்ளனர். முதலில் இவற்றை சுவிஸ் குமாரே திட்டமிட்டதாக சி.ஐ.டி. கூறுகின்றது. சம்பவ தினமன்று வித்தியா பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் வருகின்றாா். இரண்டாம், மூன்றாம் சந்தேகநபர்கள் வித்தியாவை வழிமறிக்கின்றனர். ஐந்தாம், ஆறாம் சந்தேக நபர்கள் வித்தியாவை பற்றைக்குள் இழுத்து செல்கின்றனர். அதன்பிறகு வித்தியா வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்படுகின்றாள்.

இவ்வாறு கொடூரம் நடைபெற்றுக் கொண்டு இருக்க நேற்று முன்தினம் கைதான பதினொ ராவது சந்தேகநபர், அங்கு யாரும் வரு கின்றனரா? என காவல் பார்த்துகொண்டு இரு ந்துள்ளார். ஒன்பதாம் சந்தேக நபரான சுவிஸகுமார் இதற்கெல்லாம் திட்டம் போட்டு கொடுத்துள்ளார்.

### கொலையை வேறு திசை நோக்கி திருப்ப திட்டம

வித்தியா கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்படுகன்றாள். இதன்பின்னர்கடற்படை மீது கொலையை பழி சுமத்துவதற்காக வித்தியாவின் உடலை கோரமான முறையில் கட்டிப் போட்டுள்ளனர். இதனை நிரூபிக்கும் வகையில் வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள சிலரிடம் இதற்கு காரணம் கடற்படை தான் என கூறியுள்ளனர்.

இதன்மூலம் தம்மால் மேற்கொண்ட கொலையை கடற் படையினர் மீது பழியைசுமத்தி கொலை தண்டனையிலிருந்து தப்பிக்க முயற்சித்து உள்ளனர். இதன் காரணமாகத் தான் இந்த கொலையாளி சந்தேகநபர்களை இன முறுகலை ஏற்படுத்தும் விதத்தில் செயறபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒருவரும் தப்ப முடியாது

முதலில் கைதாகிய ஒன்பது சந்தேக நபர்களுக்கும் (கொழும்பில் நின்றவர் உட்பட) குறித்த கொலை தொடர்பில் தெரியும். எங்கு? எவ்வாறு? எப்படி? நடைபெறப்போகின்றது என்பது குறித்து அனைத்துமே தெரியும் என சி.ஐ.டி. தெரிவித்துள்ளது.

ஆகையால் குறித்த கொலை குற்றச்சாட்டிலிருந்து எந்த நபரும் தப்ப முடியாது. நீதிமன்றால் வழங்கப்படும் தண்டனையிலிருந்தும் தப்ப முடியாது என நம்பப்படுகின்றது. குறிப்பாக அனைவருமே திட்டமிட்டு தான் வித்தியாவை படுகொலை செய்தனர் என்பது நேற்றைய சி.ஐ.டி அறிக்கையின் மூலம் அறிய முடிகின்றது.

### அடுத்து என்ன?

குறித்த வழக்கு எதிர்வரும் பதினெட்டாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த தவணையில் மரபணு பரிசோதனை முடிவு கள் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் பத்தாம், பதினோராம் சந்தேக நபர்கள் பிரதான சாட்சியாளர்களாக மாறும் சாத்தியம் இருப்பதாக அறிய முடிகின்றது.

மேலும் ஒருசிலர் கைதாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மாத நடுப்பகுதிக்குள் குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில மாற்றப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

### நீதவான் நம்பிக்கை

இந்த குற்றம் சகித்துக் கொள்ள முடியாத பாரதூரமான துக்ககரமான சம்பவமாகும். கடவுளின் உதவியுடன் இதற்கு நீதி கிடைக்கும் என ஊர்காவற்துறை நீதவான் ஏ.எம்.எம்.ரியால் நம்பிக்கை தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற வழக்கின் போது மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான கே.சுகாஸ், ஜே.பி.ஏ. ரஞ்சித் குமார் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (செ-4)


**காணியுடன் வீடு விற்பனைக்குண்டு**

உரும்பிராய் சந்திக்கும் கோப்பாய் வீதிக்குமிடையில் 3 பரப்புக் காணியுடன் 4 அறையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. ( மாடி கட்டுவதற்கான வசதியும் உண்டு ) (C-3904)

தொடர்பு
077 2718540
077 0567102

**பதவி வெற்றிடம் (கிளிநொச்சி)**

கிளிநொச்சியில் அமையவுள்ள வலம்புரியின் உப பணிமனைக்கு அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர். 07.03.2016 (திங்கள்) அன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் (NAITA க்கு பின்பக்கம்) உள்ள இடத்தில் நேர்முகத்தேர்வு நடைபெறும். பொருத்தமான இருபாலாரும் அன்றைய தினம் நேரில் வரவும். வலம்புரியின் உப அலுவலகத்துக்கு அண்மையிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கணனி அறிவு மேலதிகமான தகைமையாக கருதப்படும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

**கிளி எடிசன் கல்லூரி**
(வலயக்கல்வி பணிமனை முன்பாக)

சமுர்த்தி, கிராமஅலுவலர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் ஆரம்பம் 06/03/2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. (C-3895)

Y.தவசேகர்
0775483470
0773222760

**வேலையாள் தேவை**

பேக்கறி நடமாடும் சேவை வான் ஓடக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேவை. பாண் விற்பனை செய்யக்கூடியவர்களும் தேவை.

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம். (3782)

**2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்**

உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
GUNA BEST PC 50/12,Hospital Road, Vairavar Kovil Lane, Jaffna. (C-3897)
கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.

**பணிப்பெண் தேவை**

2 பேர் கொண்ட குடும்பத்தில் சகல வீட்டுப்பணிகளையும் வீட்டில் தங்கி நின்று செய்யக்கூடிய பொறுப்புக்களற்ற 36 வயதிற்குட்பட்ட பணிப்பெண் உடன் பணிக்கு தேவை. அவர் வீட்டின் ஒரு உறுப்பினராகவே கருதப்பட்டு அவருடைய பணிக்குரிய வேதனம் வழங்கப்படும் (3778)

தொடர்புகளுக்கு :
021 226 0277

**புலமை அருவி**

புலமை அருவி ஆசிரியர் திரு.யோக.தயாளன் (BA,PGDE Dip in Teach )
அவர்களின் தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை முற்றிலும் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள் - 11

பரீட்சை நேரம் - ஞாயிற்றுக்கிழமை - பி.ப 2.00 - 4.00 / பி.ப 4.00 - 6.00 விரும்பிய ஒரு நேரத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்

பரீட்சை நடைபெறும் திகதிகள்- 06.03.2016, 20.03.2016, 03.04.2016, 17.04.2016
01.05.2016, 15.05.2016, 05.06.2016, 19.06.2016
03.07.2016, 17.07.2016, 07.08.2016

வினாத்தாள் திருத்தி வழங்கல் விளக்கம் அளித்தல் பிரதி ஞாயிறு தோறும் பி.ப 2.00 - 4.00 மணி வரை

ஆசிரியர் திரு. யோக.தயாளன் அவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகள் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெறுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு
021 223 1220
0779122918

மதுரம் இன்ஸ்ரிரியூட்
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு
(C-3896)

**வாகனம் தேவை**

கைதடியில் இருந்து யாழ் நகரின் முன்னணி பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு பாடசாலை சேவையை நடத்த விரும்புபவர்களிடம் இருந்து வாகனம் தேவைப்படுகிறது. சேவையை நடத்த விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-3900)

தொடர்புகளுக்கு :
0771167667

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

"சமூக மாமணி"
"சைவப் புரவலர்"
"ஈகையாளன் திலகம்"
**E.S.P.நாகரத்தினம்**
அவர்கள்



திருமலியும் ஈழவள யாழ்ப்பாணத்தில்
திகழ்ந்திலகும் காரைநகர் பொன்மனச் செம்மல்
பெருமறிஞர் நாகரத்தினம்
கருதரிய கலைஞனாய் நிரம்ப உள்ளான்
கன்னலின் தமிழமுதம் இனிக்கத்தந்தான்
பொன்மனச் செம்மல் எனும் நாமத்தால்
வர்த்தக மேதை எனப் போற்றிடவே
பண்பாளன் பலராமன் நீ பல்லாண்டு பல்லாண்டு
கண்டினிது வாழ்க வாழ்க

வாழ்த்துவோர்: இணுவில் பொது அமைப்புக்கள்
(C-3903)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.